

KALKI 9.9.84
ரூ.1.50
அநீதிக்குத் தலைவணங்காதவர்
கல்கி

அமைச்சர் ஆசிரியராய் இருந்த போது...



ஆசிரியர் தினத்தை (செப். 5) யொட்டி கல்வி அமைச்சர் அரங்கநாயகம், தாம் பள்ளிக்கூட ஆசிரியராய்ப் பணியாற்றிய நாட்களை நினைவு கூர்கிறார்:

''நான் கோவை நகரசபைப் பள்ளிக்கூடத்தின் முன்னாள் மாணவன். அங்கே தான் நான் ஒன்பது, பத்து, எஸ். எஸ். எல். ஸி. வகுப்புகளைப் படித்தேன்.

படிக்கும்போது, நான் ரொம்ப ரிசர்வ்டு டைப். நான் உண்டு; என் படிப்பு உண்டு என்று இருப்பேன். விளையாட்டுக்களில் பிடித்தது ஃபுட்பால். ஆனால் அதில் சிறந்த விளையாட்டுக்காரன் என்று சொல்ல முடியாது.

இன்றும் என் நினைவில் நிற்கிற ஆசிரியர் தமிழாசிரியர் நடேசக் கவுண்டர் தான். ரொம்ப நல்லவர்; கனிவானவர்; அவருடைய தமிழறிவு விசாலமானது; மிகச் சுவையாய் வகுப்பெடுப்பார்; எனக்கும் சக மாணவர்களுக்கும் தமிழ் இலக்கிய ஆர்வத்துக்கு வித்திட்ட பெரியவர் அவர். அவர் இப்போது உயிருடன் இல்லை.

நான் பள்ளியில் படித்த போது நன்றாக ஞாபகம் இருக்கிற இரண்டு தினங்களில் ஒன்று 1947 ஆகஸ்ட் 15. அன்றைய தினம் மகிழ்ச்சியாய்க் கோஷங்கள் போட்டபடி ஊர்வலம் போனோம். ஊர்ப் பெரியவர் ஒருவர் சுதந்திரத்தின் பெருமையை விளக்கிச் சொன்னார். இன்னொரு தினம் 1948 ஜனவரி 30. மகாத்மா சுட்டுக் கொல்லப்பட்ட செய்தி, ரொம்ப அதிர்ச்சியை அளித்தது. அன்றைய தினமும், அஞ்சலி செலுத்துகிற வகையில் ஊர்வலம் போனோம்.

பள்ளியில் படிக்கும் போது நான் ரொம்ப புத்திசாலியான மாணவன் என்று சொல்ல முடியாது. ஆனாலும், கடினமாய் உழைத்து, நல்ல மதிப்பெண்கள் வாங்கிவிடுவேன். கணிதம் தான் எனக்கு மிகவும் விருப்பமான பாடம். எஸ். எஸ். எல். ஸி. யில் கணிதத்தில் நூற்றுக்கு நூறு வாங்க வேண்டும் என்ற நோக்கத்துடன் கடினமாய் உழைத்தேன். அதேபோல வாங்கினேன். மாணவப் பருவத்திலேயே எனக்குப் பெரியாரின் கொள்கைகளிலும், தி. மு. கழகத்திலும் ஈடுபாடு உண்டு.

கல்லூரிப் படிப்பு கோவை அரசு கலைக் கல்லூரியில். அடுத்து சென்னை சைதாப்பேட்டை ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் பி. எட் பட்டப் படிப்பை முடித்தேன். சித்தோடு, காரபடை இங்கெல்லாம் உயர்நிலைப்பள்ளி ஆசிரியராய் வேலை பார்த்தேன்.

பின் தலைமை ஆசிரியராய்ப் பதவி உயர்வு பெற்றேன். (எம். ஏ. மற்றும் பி. எல். படித்தது தபால் மூலம்)

நான் ஆசிரியராய் பணியாற்றிய போதும் சரி, தலைமை ஆசிரியராய் பணியாற்றிய போதும் சரி, வாங்குகிற சம்பளத்துக்கு, 'ஏதோ பள்ளிக் கூடத்துக்கு வந்தோம்; பாடம் நடத்தினோம்' என்று இல்லாமல், பொறுப்புணர்வுடன் எந்த ஒரு விஷயத்தையும், ஒரு தடவைக்கு இரு தடவையாய், புரியும்படி சொல்லித் தருவேன்.

எனக்குத் துளியும் பிடிக்காத விஷயம் மாணவர்களை அடிப்பது. நான் என்னுடைய ஆசிரியவாழ்க்கையில் மிகமிகத் தவிர்க்க முடியாத சமயங்களில் இரண்டொரு தடவை தவிர, மற்ற சமயங்களில் மாணவர்களை அடித்ததே கிடையாது.

படிப்பு தவிர மற்ற விஷயங்களில் ஆர்வமும், திறமையும் இருக்கிற மாணவர்களை ஊக்குவித்து வந்தேன். பள்ளிக்கூட ஆண்டு விழாவின் போது, ஒவ்வொரு வருடமும், மாணவர்களை வைத்து, நாடகம் போடுகிற பொறுப்பை விருப்பமுடன் ஏற்றுக் கொள்வேன். அவற்றுள் குறிப்பிடத் தக்கது ஜூலியஸ் சீசர் நாடகம். இன்னொரு சமூக நாடகம் போட்டோம. அது மிராசுதார், பாட்டாளி பற்றிய கதை. இது அந்த ஊரில் சிறு சலசலப்பை ஏற்படுத்தியது.

ஆசிரியராய்ப் பணியாற்றிய போது நான் தீவிர தி. மு. கழகத்துக்காரன். ஆனால் பள்ளிக் கூடத்தினுள் கட்சி பற்றியோ, அரசியல் பற்றியோ ஒரு வார்த்தை பேச மாட்டேன். தேர்தலில் நிற்பதற்காக என் ஆசிரியர் வேலையை ராஜினாமா செய்தேன்.''

பேட்டி: **சந்திரா**

SPECIAL REPORT



அநீதிக்குத் தலைவணங்காதவர்!

என். டி. ராமாராவை ஆதரிக்கும் பெரும்பாலான எம். எல். ஏக்கள் கர்நாடகத்தில் தஞ்சம் புகுந்திருக்கிறார்கள். மிகவும் கஷ்டப்பட்டு அவர்கள் இருக்குமிடத்தைக் கண்டுபிடித்துப் பேசிவிட்டு வந்த நமது நிருபர் எழுதுகிறார்:

பெங்களூர் போய்ச் சேர்ந்ததுமே பல பத்திரிகையாளர்களிடம் ''தெலுங்கு தேசம் எம். எல்..ஏக்கள் எங்கிருக்கிறார்கள்?'' என்று விசாரித்தோம்.

''அவர்கள் நந்தி ஹில்ஸில் இருப்பார்கள் என்று நினைக்கிறேன்'' என்றார் ஒருவர்.

''இல்லை... இல்லை... மைசூரில் தான் இருக்கிறார்களாம்'' என்றார் மற்றொருவர்.

இன்னொருவர் ஒரு குண்டைத் தூக்கிப் போட்டார்: ''அவர்களெல்லாம் நேற்றே ஹைதராபாத்துக்குக் கிளம்பிச் சென்று விட்டார்களே!''

எங்களுக்கு என்ன செய்வதென்றே புரியவில்லை. எங்கு இருக்கிறார்கள் தெலுங்கு தேச எம். எல். ஏக்கள்? கடைசியாக பி. டி. ஐ. நாகராஜ் உதவிக்கு வந்தார். மனிதர் எங்கெங்கெல்லாமோ டெலிபோன் செய்தார். பிறகு, ''ஸார் உடனடியாகக் கிளம்பி மைசூர் போங்கள். தாசப் பிரகாஷில் தங்கியிருக்கிறார்களாம். இது சி.ஐ.டி. தகவல். உண்மையாகத் தான் இருக்கும்'' என்றார்.

அவசரம் அவசரமாக பெங்களூர்—மைசூர் நான்—ஸ்டாப் பஸ்ஸைப் பிடித்து மைசூர் போய்ச் சேர்ந்தோம்.

மைசூர் ஆகாஷ்வாணி ஏரியாவில் மிகவும் அமைதியான இடத்தில் அமைந்திருக்கிறது தாசப் பிரகாஷ் பாரடைஸ் ஹோட்டல். ரிஸப்ஷனிஸ்ட் பெண்ணிடம் எங்களை அறிமுகப்படுத்திக் கொண்டு, ''தெலுங்குதேச எம். எல். ஏக்களைப் பார்க்க வேண்டும்'' என்றோம். ''அவுங்களெல்லாம் காலையிலேயே கிளம்பிப் போய் விட்டார்கள். இனி மேல் இரவு 10 மணிக்குத்தான் வருவார்கள்'' என்றார் ஆங்கிலத்தில். என்ன செய்வது என்று தெரியாமல் கையைப் பிசைந்து கொண்டு, மூளையைக் கசக்கிக் கொண்டு பத்து நிமிஷம் ரிசப்ஷனிஸ்ட் எதிரிலேயே நின்று கொண்டிருந்தோம். அப்போதிருந்த மனநிலையில் அந்த ஹோட்டலின் அழகையோ அல்லது வயிற்றுப் பசியையோ கூட உணர முடியாது இருந்தோம்.

திடீரென்று தெலுங்கு பேசிக்கொண்டு இருவர் வந்து ரிசப்ஷனிஸ்டிடம் சாவிவாங்கிக் கொண்டு போனார்கள். அவசரமாக லிப்டிற்குள் சென்று (ரிசப்ஷனிஸ்ட் ஆலோசனையின் பேரில்தான்) அவர்களிடம் எங்களை அறிமுகப் படுத்திக் கொண்டோம். அவர்களோ, ''அப்படியா?'' என்று கேட்டுக்கொண்டு வந்தார்கள். அறைக்குள் சென்றவுடன்,

✖ எம். எல். ஏக்களைச் சுமந்துசெல்லத் தயாராக இருக்கும் வீடியோ பஸ்கள்





✠ ஸீதாராம்



✠ ஜான்ஸி லட்சுமி



✠ வெங்கட ரெட்டி

''ஸார் நீங்கள் எம். எல். ஏக்கள்தானே?'' என்று ஆவலை அடக்க முடியாமல் கேட்டு விட்டோம்.

''ஆமாம்'' என்றார் அசோக் கஜபதி ராஜு என்ற அந்தத் தெலுங்கு தேச எம். எல். ஏ. இவர் விஜயநகரம் எம். எல். ஏ. அரச பரம்பரையில் வந்தவர்.

''இதோ இவர் பெயர் ராமலேஷ்வரடு. தெலுங்கு தேச அமைச்சரவையில் சட்ட மந்திரியாக இருந்தவர்'' என்று அவரையும் அறிமுகப்படுத்தி வைத்தார்.

மனத்தில் பாரதிராஜாவின் வெள்ளையுடை பெண்கள் 'தாம்; தாம்' என்று குதித்து ஓட, மகிழ்ச்சியுடன் வேலையை ஆரம்பித்தோம்.

''நீங்களெல்லாம் சிறை வைக்கப்பட்டிருக்கிறீர்களா?''

''எங்களைப் பார்த்தால் அப்படியா தெரிகிறது? நாங்கள் மிகவும் சுதந்திரமாக இருக்கிறோம். ஆந்திராவில் இருந்திருந்தால் நிஜமான சிறையில் இருந்திருப்போம். டெல்லியிலிருந்து விஜயவாடாவுக்குச் செல்வது என்று தான் முதலில் முடிவு செய்திருந்தோம். ஆனால் ரிசர்வேஷன் தகராறு. அப்புறம் விஜயவாடா சென்றால் ஏதோ ஒரு காரணத்தைச் சொல்லி என். டி. ஆரை ஆதரிக்கும் எம். எல். ஏக்களை N. S. A. போன்ற சட்டங்களை வைத்துக்கொண்டு சிறையில் அடைக்கக் காத்திருக்கும் பாஸ்கர் ராவின் சதித் திட்டத்தைப் புரிந்துகொண்டு கர்நாடகாவுக்கு வந்தோம். நாங்கள் ஒரு கட்டுப்பாடான சூழ்நிலையில் இருந்தால் நீங்கள் எங்களுடன் பேச முடியுமா?'' என்றார் ராஜு.



✠ ஜெயராஜு



✠ அசோக் கஜபதி ராஜு



✠ ப்ரஸூனு



✠ பிரதிபா பாரதி



✠ ராஜகோபால்



✠ முகமது ஷாபீர்

✠ சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டால் கொடுக்கப்படும் அடையாள அட்டை



FREE BUS-PASS

IDENTITY CARD

Member of the Seventh Andhra Pradesh Legislative Assembly


Name

Date of issue

Secretary to Legislature

Signature of the Member

✠ டெல்லிக்குச் செல்லும் முன்னர் அவசரமாக சபாநாயகரால் கொடுக்கப்பட்ட அடையாள அட்டை



Member of the Seventh Andhra Pradesh Legislative Assembly

Name

Name of the Constituency

Date of Issue

SPEAKER

Signature of the Member

இதற்குள் இன்னொருவர் அறைக்குள் வந்தார். ''இவர்தான் முகமது ஷாகிர்'' என்று அறிமுகப்படுத்தி வைத்தார்கள். சுற்றுலா மந்திரியாக இருந்தாராம். அனந்தபூர் மாவட்டத்தைச் சேர்ந்த இவருக்கு பாஸ்கர ராவ் 'துணை முதல்வர் பதவி தருகிறேன்' என்று ஆசை காட்டினாராம். ''சிறுபான்மை சமூகத்திலிருந்து ஒரு எம். எல். ஏ. அவருக்கு அவசரத் தேவை. ஆனால் இதற்கெல்லாம் நான் மசிய மாட்டேன். தெலுங்குதேசம்தான் நான் சேர்ந்த முதல் கட்சி. நடிகர், அரசியல்வாதி என்ற இருவகையிலும் என். டி. ஆரை ரசிப்பவர்களில் நான் ஒருவன்'' என்றார் ஷாகிர்.

அவர்களுடன் பேசிக் கொண்டிருக்கும் போதே ராஜகோபால் என்ற எம்.எல்.ஏ. வந்தார். ராமராவை ஆதரிக்கும் 36 எம். எல். ஏக்கள் தன்னையும் ஆதரிப்பதாகக்கூறிக் கொண்டு ஒரு லிஸ்ட் வைத்திருக்கிறாரே, பாஸ்கரராவ், அந்த லிஸ்டில் இடம் பெற்றிருப்பவர் ராஜகோபால்.

''நீங்கள் என். டி. ஆர். பாஸ்கர ராவ் இருவரையும் ஆதரிக்கிறீர்களா?'' என்று கிண்டலாகவே கேட்டோம்.

''பாஸ்கர ராவ் ஒரு திருடன் (மேலும் அச்சிட முடியாத வார்த்தைகளால் திட்டினார்.) நிச்சயமாக நாங்கள் அவனுக்கு ஒரு பாடம் கற்பிப்போம்'' என்றார்.

''உங்களுக்குக் கொடுக்கப்பட்ட அடையாள அட்டைகள் போலியானவை என்று பாஸ்கரராவ் குற்றம் சாட்டியிருக்கிறாரே?''

''ஒரு சட்ட சபை சபாநாயகருக்குத்தான் எல்லா எம். எல். ஏக்களையும் தெரிந்து வைத்திருக்க முடியும். நாங்கள் டெல்லிக்குச் செல்லும் அவசரத்தில் இருந்ததால் எங்கள் அடையாளக்கார்டுகளை தொகுதிக்குப்போய்க் கொண்டு வர நேரமில்லை. அதனால் சபாநாயகரைக் கேட்டோம். அவரும் கொடுத்தார்'' என்று கூறிவிட்டு, ''ஆனால் என்னிடம் இருப்பது நான் எம். எல். ஏ. ஆனவுடன் சட்டசபை செயலாளரால் வழங்கப்பட்ட அடையாள அட்டை'' என்றார்.

அதற்குள் ஷாகிர் அவரது அடையாள அட்டையை எடுத்துக் காண்பித்து, ''பார்த்தீர்களா, இது சபாநாயகர் கொடுத்தது: இதைத் தான் போலி என்கிறார்கள்'' என்று கூறிவிட்டு ''ஜனாதிபதி மாளிகைக்கு சபாநாயகரும் வந்திருந்தார். நாங்கள் எம். எல். ஏக்களாக இல்லாவிட்டால், அவர் எங்களைக் காட்டிக் கொடுத்திருக்க மாட்டாரா?'' என்று கேட்டார்.

இச்சமயம் ஆத்மபூரைச் சேர்ந்த வெங்கடரெட்டி என்பவர் வந்தார்.

''உங்களை யாரும் அணுகவில்லையா கட்சி மாற்றத்துக்கு?'' என்று கேட்டவுடன் பலமாக ஒரு சிரிப்புச் சிரித்தார் வெங்கடரெட்டி. ''என்னை அணுகுவதற்கு ஒருவருக்கும் தைரியம் வராது. இப்போது பாஸ்கரராவ் அமைச்சரவையில் இருக்கும் ராமமுனி ரெட்டி என்னை அணுகினார். 'ஏதோ நண்பராக இருப்பதால் பேசாமல் விடுகிறேன்' என்று கோபமாக எச்சரித்து அனுப்பினேன். அப்புறம் அந்தப் பக்கத்திலிருந்து யாரும் என் கிட்டத்தில் வரவில்லை.''

''நீங்கள் தைரியமாக உங்கள் தொகுதிக்கு ஏன் போகக் கூடாது?''

''எங்களுக்குத் தைரியம் இல்லாமல் இல்லை. எங்களைக் கட்சி மாற்ற வேண்டும் என்று பணப்பைகளோடு வேட்டை நாய்களாக அலைந்து கொண்டிருக்கிறார்கள் பாஸ்கரராவின் ஆட்கள். நேற்று நரச ராவ் பேட் தொகுதியைச் சேர்ந்த எங்கள் எம். எல். ஏயைத் தொகுதிக்குச் சென்றவுடன் கைது செய்திருக்கிறார்கள். அவர் அந்தப் பகுதியில் சிறந்த டாக்டர். பொது மக்களுக்குச் சேவை செய்ய வேண்டும் என்ற எண்ணத்தில் சென்றவருக்கு நேர்ந்த கதியைப்பார்த்தீர்களா? அதிகாரிகளையும் போலீஸ் துறையையும் தம்முடைய பதவியைக் காப்பாற்றிக் கொள்வதற்காக உபயோகித்துக் கொள்கிறார் பாஸ்கரராவ். இதற்கெல்லாம் பின்னால் அவர் பதில் சொல்லியே ஆக வேண்டும்'' என்றார் அசோக் கஜபதி ராஜு.

துயர் நிலத்தில் கண்ணீர் பாய்ச்சி சாதனைப் பயிர்!



நாடு போற்றும் நல்லறிஞர் திரு. வி. க. பள்ளி இறுதி வகுப்பில் தோல்வி கண்டார் என்பது தெரியுமோ?

அவர் விரும்பிப் போற்றிய ஆசிரியர் கதிரைவேல் மேல் ஒரு வழக்கு எழும்பூர் நீதிமன்றத்தில் தொடங்கப்பட்டது... திரு. வி. க., ஆசான் கதிரைவேலர் வழக்கிலேயே கருத்தைச் செலுத்தியமையால் தேர்வு எழுதுவதற்கான வாய்ப்பில் தகுதி பெறவில்லை. படிப்பும் நின்றது.

இதிலிருந்தும் ஒரு நன்மை விளைந்தது. "நான் வேறு மனிதனுமனேன். கோயில் எனக்குப் பள்ளியாயிற்று: தேவாரம், திருவாசகம் எனக்கு நூல்களாயின" என்கிறார் திரு. வி. க.

இதேபோல் அவர் மனைவியின் மறைவென்ற துயர நிகழ்ச்சி கூட அவர் வாழ்க்கையில் ஒரு திருப்பத்தை உண்டாக்கிச் சாதனைக்கு வழிவகுத்தது. திரு. வி. க. எழுதுகிறார்: "எதை இழந்தாலும் எளிதில் பெறலாம்: காதலியை இழந்தால் அரிதினும் பெற இயலாதே. என் வாழ்க்கைத் துணைக்கு நான் என்ன கைம்மாறு செய்ய வல்லேன்? பெண்ணின் பெருமை விளங்க — இவ்வுலகில் நன்கு விளங்க — பாடுபட உறுதி கொண்டேன். அதற்கென்று என் வாழ்வை அர்ப்பணம் செய்துள்ளேன்!"

தகவல்: எஸ்ஸார்.

ஆதாரம்: எஸ். டி. காசிராஜன் எழுதிய "திரு. வி. க. ஓர் இலக்கியம்." (மணி வாசகர் பதிப்பகம், சிதம்பரம்—608 001).

"பெண் எம். எல். ஏக்களைச் சந்திக்க முடியுமா?" என்று அவர்களிடம் கேட்டோம்.

"நாங்கள் தான் இங்கு இருக்கிறோம். மற்றவர்களெல்லாம் சாமுண்டீஸ்வரி கோவிலுக்குப் போய் விட்டு, பிருந்தாவனம் சென்று விட்டு இரவு தான் வருவார்கள். நீங்கள் நாளை காலை வந்து பாருங்கள்" என்றார்.

எங்களுக்கோ அன்றிரவே சென்னை திரும்பி ஆக வேண்டிய சூழ்நிலை. கீழே வந்து லாபியில் அமர்ந்து கொண்டு தெலுங்கு பேசிக் கொண்டு யாராவது வருகிறார்களா என்று நோட்டமிட்டபடி இருந்தோம். சற்றுநேரம் சென்று ரிசப்ஷனிஸ்டிடம் மெதுவாகப் பேச்சுக் கொடுத்தோம். முதலில் எம்.எல். ஏக்களைப் பற்றிச் சொல்ல மறுத்தவர் நாங்கள் பத்திரிகையாளர்கள் என்பதை உறுதிப் படுத்திக் கொண்டு பேச ஆரம்பித்தார்.

"இங்கு மொத்தம் 142 எம். எல்' ஏக்கள் தங்கியிருக்கிறார்கள். ஒரு நாளைக்கு ரூம் வாடகை, சாப்பாட்டுச் செலவு, ஆகியவைகளுக்கு சராசரி 300 ரூபாய் ஆகும்" என்று தெரிவித்தார் அவர். யார் வந்து கேட்டாலும், "எங்களுக்கு அவர்களைப்பற்றித் தெரியாது" என்று சொல்லும்படி ஹோட்டல் மேனேஜ்மெண்ட் சொல்லி வைத்திருக்கிறதாம்.

அவருடன் பேசிக் கொண்டிருக்கும் போதே ம்யூசிகல் ஹாரன் ஒலிக்க வரிசையாக நான்கு வீடியோ பஸ்கள் ஹோட்டலுக்குள் நுழைந்தன.

"ஸார் அவர்கள் வந்து விட்டார்கள். நீங்கள் அதிர்ஷ்டக்காரர்கள்தான்" என்று கூறி எங்களை அனுப்பினார் ரிஸப்ஷனிஸ்ட்.

பஸ்ஸிலிருந்து இறங்கிய எம். எல். ஏக்கள் சுந்தரத் தெலுங்கில் பலமாக, சிரித்துப் பேசிக் கொண்டு வந்தார்கள். அவர்கள் கைகளில் ஷாப்பிங் சென்றதற்கு அடையாளமாகத் துணிக்கடை பிளாஸ்டிக் பைகள், சிலர் குழந்தைகளுக்கான பொம்மைகள், விளையாட்டுச் சாமான்கள் ஆகியவற்றைக் கையில் வைத்திருந்தார்கள். பெண் எம்.எல். ஏக்களைத் தொடர்ந்தோம். 126—ம் அறைக்குள் அவர்கள் நுழைந்தவுடன், சற்றுப் பொறுத்து "எக்ஸ்க்யூஸ் மீ" என்றவாறே, "உள்ளே வரலாமா?" என்று கேட்டோம். அவர்கள் கண்ணில் ஒரு மிரட்சி இருந்தது. ஒருவேளை பாஸ்கர ராவின் ஆட்கள் என்று நினைத்து விட்டார்களோ, என்னவோ? எங்களை அறிமுகப்படுத்திக் கொண்டபிறகு (அடையாள அட்டையுடன் தான்) கலகலவென்று பேச ஆரம்பித்தார்கள். அவர்களில் ஒருவர், "என் பெயர் பிரதிபா பாரதி. என். டி. ஆர். அமைச்சரவையில் சமூகநல மந்திரியாக இருந்தேன்" என்று கூறிவிட்டு மற்ற பெண் எம். எல். ஏக்களையும் அறிமுகப்படுத்தி வைத்தார். மொத்தம் ஏழு பேர் இருந்தார்கள். அவர்களில் ஒருவர் மார்க்ஸிஸ்ட் உறுப்பினர். ஹைதராபாத் சனத் நகர் தொகுதி எம். எல். ஏ. ப்ரஸன்னா கூறினார்: "ஹைதராபாத் நகரத்துக்கு ஆறு எம். எல். ஏக்கள் இருக்கிறார்கள். அதில் மூவர் என். டி. ஆர். கட்சியில் இருக்கிறோம். மற்ற மூவர் பாஸ்கர ராவ் கோஷ்டியில் இருக்கிறார்கள். என். டி. ஆர். பக்கம் இருக்கும் எங்களுக்குப் பலவிதமாகப் பதவி ஆசை காட்டுகின்றனர். எனக்கு வாரியத் தலைவர் பதவி தருவதாகக் கூறினார்கள். ஆனால் ஒரு போதும் என். டி. ஆருக்குத் துரோகம் செய்ய மாட்டேன்."

"என். டி. ஆர். ஆட்சியில் அவரது மகன்களும் மருமகனும் தலையிட்டு, அதிகார துஷ்பிரயோகம் செய்தார்கள் என்று பாஸ்கர ராவ் குற்றம் சாட்டியிருக்கிறாரே?"

"நான் சத்தியம் செய்து சொல்கிறேன். ஒரு தடவை கூட அவருடைய மருமகனோ,

அல்லது மகன்களோ என்னிடம் அரசு எடுக்கப் போகும் முடிவுகளைப் பற்றியோ அல்லது சலுகைகள் கேட்டோ பேசியது கிடையாது. என். டி. ஆரை லஞ்சம் வாங்கினார் என்று குற்றம் சாட்ட முடியாது. அவரை எதிர்ப்பதற்கு வேறு ஏதாவது காரணம் கூறியாக வேண்டுமே அதுதான் இதுபோல் பேசிக் கொண்டு திரிகிறார்கள்'' என்றார் பிரதிபா பாரதி.

''இதே பாஸ்கர ராவ் மீது சட்டசபையில் பலமான லஞ்ச ஊழல் குற்றச்சாட்டுகளைச் சுமத்தியவர்கள் காங்கிரஸ் கட்சியினர் தான். இன்று அவர்களே பாஸ்கரராவை ஆதரிப்பது பச்சை சந்தர்ப்பவாதம். ஆனால் சட்டசபையைக் கூட்டும் போது காங்கிரஸ் ஆதரிக்காது. காலை வாரி விடும் என்பது என் கருத்து'' என்றார் ப்ரஸன்னா.

தெலுங்கு தேச கட்சியில் பதினொரு பேர் பெண் எம். எல். ஏக்கள். அதில் ஆறுபேர் என். டி. ஆருடன் இருக்கிறார்கள்.

நாங்கள் பேசிக் கொண்டிருக்கும்போதே அழுது சிவந்த கண்களோடு ஒரு பெண்மணி வந்தார்.

''இவர் சித்தூர் தொகுதி எம்.எல்.ஏ. ஜான்ஸி லட்சுமி'' என்று கூறிவிட்டுத் தொடர்ந்தார் ப்ரதிபா பாரதி. ''இவர் பாஸ்கர ராவ் கோஷ்டியில் சேர்ந்துவிட்டதாக அறிவித்து இருக்கிறார்கள். இவர் புட்டபர்த்திக்குச் சென்று விட்டு இன்று காலைதான் வந்து எங்களுடன் சேர்ந்து கொண்டார். தொகுதிக்குச் சென்றவுடன் போலீஸ் அதிகாரிகள் இவரைச் சந்தித்து பாஸ்கர ராவுக்கு ஆதரவு தரும்படி கேட்டிருக்கிறார்கள். ஆனால் இவரோ மறுத்திருக்கிறார். இவரது மகன்கள் எதிரிலும், மருமகன்கள் எதிரிலும் கன்னாபின்னாவென்று திட்டியிருக்கிறார்கள். இரண்டு மாதத்துக்கு முன்தான் கணவரை இழந்தவர் இவர்.''

அவர் சொல்வதை மௌனமாகக் கேட்டுக் கொண்டு சோகமாய் உட்கார்ந்திருந்தார் ஜான்ஸி லட்சுமி.

''இந்த மிரட்டலுக்கெல்லாம் பயந்தவர்கள் நாங்களில்லை. மக்களின் எழுச்சியைப் பாருங்கள். இன்று என். டி. ஆர். அகில இந்திய ரீதியில் தலைவராக உயர்ந்து விட்டார். சத்தியம் வென்றே தீரும். இந்த நெருக்கடியான நேரத்தில் எங்கள் தலைவர் பக்கத்தில் இருப்பதே எங்களுக்கு மிகுந்த பலத்தைக் கொடுத்து இருக்கிறது. பாஸ்கர ராவ் ஒழிந்து விடுவார்'' என்று ஆவேசமாகக் கூறினார் ப்ரஸன்னா.

அப்போது ''ஹலோ'' என்று கூறிக் கொண்டு வந்தார் ஸீதாராம் என்ற இளைஞர். ஸ்ரீகாகுளம் மாவட்டத்தைச் சேர்ந்த எம். எல். ஏ. என்று அறிமுகமானார்.

''பாஸ்கர ராவ்...'' என்று நாங்கள் ஆரம்பித்த போதே தடுத்து நிறுத்தினார் ஸீதாராம். ''அந்தத் துரோகியைப் பற்றிப் பேசாதீர்கள். இளைஞர்களான 120 எம்.எல். ஏக்கள் ஒரு வருடத்துக்கு முன்பே பாஸ்கர் ராவை நீக்க வேண்டுமென்று கையெழுத்திட்டு எங்கள் தலைவரிடம் மனு கொடுத்தோம். ஆனால் அவரோ பெருந்தன்மையாக பாஸ்கரராவை மன்னித்து விட்டார். அதன் பலனை இப்போது அனுபவித்துக் கொண்டிருக்கிறோம். சென்னாரெட்டி, வெங்கட்ராம் அஞ்சையா ஆகியவர்களால் கைவிடப்பட்ட பாஸ்கரராவுக்கு அரசியல் வாழ்வு அளித்தவரே என். டி. ஆர். தான். அவருக்கே துரோகம் செய்து விட்டான். அந்தத் துரோகம் வெற்றி பெறாது. ஆந்திராவில் ஜனநாயகம் மலர்ந்தே தீரும்'' என்று கூறி நிறுத்தினார் ஸீதாராம். அவரது ஆக்ரோஷம் நம்மை அயர வைத்தது. அப்போது எங்களுடன் வந்து சேர்ந்து கொண்டார் விஜயவாடாவைச் சேர்ந்த ஜெயராஜு என்ற எம்.எல்.ஏ. ''பாஸ்கர் ராவ் சரியான பொய்யன். 'எனக்குப் பதவி வந்தால் குடிசையில் தான் குடி இருப்பேன்' என்று கூறினார். ஆனால் பெரிய மாளிகையில் தான் தற்போது குடியிருக்கிறார். ஏமாற்றுப் பேர்வழி. நரியைப் போன்றவர்'' என்று ஏசினார்.

அநீதிக்குத் தலைவணங்காத இந்த எம்.எல். ஏக்களிடம் பேசிய போது ஒன்று நிச்சயமாகப் புரிந்து கொண்டோம்: நீதியை நிலை நாட்ட நடக்கும் இப்போராட்டத்தில், தமது மோசமான உடல் நிலையைக் கூடப் பொருட்படுத்தாமல் இறங்கியிருக்கும் என்.டி. ராமராவ், அனைத்திந்திய ரீதியில் ஜனநாயகக் காவலராகப் பெரும்புகழ் பெற்று வானளாவ உயர்ந்திருக்கிறார்.

படங்கள்: ''சுதா'' நாமு
மேலட்டை
வண்ணப்படம்: சுபா

உரிமையில் முழுமை இல்லை!

நியூஸ்வீக் பத்திரிகை அமெரிக்கத் துணை ஜனாதிபதி பதவிக்குப்போட்டியிடும் திருமதி ஜெரால்டின் ஃபெர்ராரோ பற்றிய கட்டுரை ஒன்றை வெளியிட்டது. இக்கட்டுரையின் துவக்கமே ஜெரால்டினை ஓர் இல்லத்தரசி (house wife) என்று வர்ணித்தது. உடனே வீறு கொண்டு எழுந்த வாசகர் மேரி நியூஸ்வீக்கின் ஆசிரியருக்குக் கடிதங்கள் பகுதிக்கு எழுதினார்:

''ஓர் ஆண் அரசியல்வாதியைப் பற்றிப் பேசும் போது அவர் ஒரு கணவன் என்றோ தந்தை என்றோ குறிப்பிட்டா கட்டுரையை ஆரம்பிக்கிறீர்கள்? பெண்களின் சம உரிமை மனப்பூர்வமான அங்கீகாரம் பெறும் நாள் வெகு தூரத்தில் இருக்கிறது.''





அதிக சுவையானது அதிக முழுமையானது



நீங்கள் பாசத்துடன் ஊட்டும் ஒவ்வொரு கவளமும் உங்கள் பாப்பாவின் வளர்ச்சிக்குச் சிறந்ததாகும்.

பால் அடங்கிய ஃபாரெக்ஸ் திட உணவு. இதைக் கலப்பது எளிது. பாப்பாவுக்கு ஊட்டுவதும் எளிது.


பாப்பாவின் வளர்ச்சிக்கு இன்றியமையாத புரதம் நிரம்பியது. மிக ஆரோக்கியமான இரத்தத்திற்குக் கூடுதல் இரும்புச்சத்து கொண்டது. உறுதியான பற்களையும் எலும்புகளையும் பெற சரியான விகிதத்தில் கால்ஷியமும் ஃபாஸ்ஃபரஸும் அடங்கியது. பாப்பாவின் மென்மையான ஜீரண சக்திக் கென முன்கூட்டிப் பக்குவம் செய்தது.

பால் அடங்கிய ஃபாரெக்ஸ் திட உணவு. அதிக முழுமையான திட உணவு.

உடல் நலத்தின் உறைவிடம்—

இலவசம்! குழந்தையின் முதலாண்டுப் புத்தகம்: உங்களது பிரதியைப்பெற தபால் மற்றும் இதர செலவிற்கு ரூ. 1/— தபால்தலை உள் வைத்து எழுதுவீர் இம்முகவரிக்கு—தபால் பெட்டி எண் 19119, (FCM-19) பம்பாய் 400 025.

CLARION/B/GX/4/203 TAM


பொன்மனச் செம்மல் எங்கள் கருத்தறிந்து பஸ் கட்டணத்தை உயர்த்தி எங்கள் வயிற்றில் பால் வார்த்ததற்கு பெருமகிழ்ச்சியுடன் புளகாங்கிதமடைந்து பூரித்துப் போவதுடன் அடிக்கடி இம்மாதிரி செய்து எங்களை மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்த வேண்டுமென்று வற்புறுத்திக் கோருகிறோம்!
மக்கள்
மக்கள் கருத்தறிந்து சென்னை பஸ் கட்டணம் உயர்த்தப்படும் - செய்தி


ஜனாதிபதி ஆட்சி முறை தான்..
இல்லை... பார்லிமெண்டரி ஜனநாயகம்!
ஜனாதிபதியின் சர்வாதிகாரம்!
இல்லை.. சர்வாதிகார ஜனாதிபதி...
சர்வாதிகார பார்லிமெண்ட்!..
வேண்டாம்!.. பார்லிமெண்டரி சர்வாதிகாரம்!
சோஷலிச சர்வாதிகாரம்!
எதுக்கு?.. சர்வாதிகார சோஷலிசம் தான்!
எதுக்கு சுத்தி வளைச்சுட்டு.. சர்வாதிகாரம் தான் வேணும்னு பளிச்சுனு சொல்லுங்களேன்!
தேவலையே,... எல்லாருமே தேறிட்டீங்களே!


வண்ணம் சரியா இருக்கு! எல்லாரும் சட்டுனு தாளி கட்டுங்க!
பாஸ்கர ராவ்
ஆந்திர போலீசார்கள்



கல்கி

1984 செப்டம்பர் 9
மலர் : 43 இதழ் : 6
ரக்தாக்ஷி ஆவணி 24



அன்னையைக் கேட்காதீர்கள்; அவர் அப்பாவி!

''கவர்னர் பதவி எதற்கு? அது ஓர் அலங்காரப் பதவிதானே?'' என்று கேட்டனர் சிலர். ராஜாஜி சொன்னார்: ''தீயணைக்கும் படை இருக்கிறது. சிவப்பு வண்டியைத் துடைத்துப் புது மெருகு குன்றாது சும்மாதான் வைத்திருக்கிறார்கள். எங்காவது தீப் பற்றிக் கொள்ளும்போதுதானே அதன் உபயோகம் தெரிய வருகிறது!''

இன்று ஆளுனர் பதவி தீயணைப்பு இயந்திரம் போலவா பயன்படுகிறது? எரிகிற தீயில் மண்ணெண்ணெயை அல்லவா பீச்சியடிக்கிறார் எஸ். டி. சர்மா!

இவ்வாறு செய்யலாமா என்று அம்மையாரைக் கேட்காதீர்கள்! அவருக்கு ஒன்றும் தெரியாது. அவரை யாரும் கலந்தாலோசிப்பதில்லை!

மேலும் பதினேழு அமைச்சர்களைப் பதவிப் பிரமாணம் செய்து பாஸ்கரராவ் அமைச்சரவை விஸ்தரிக்கப்பட உதவியிருக்கிறார் புதிய ஆளுனர். சட்டப்படி தாம் செய்தது சரி என்கிறார். இந்தக் கூற்று சர்ச்சைக்குரியது என்பது ஒருபுறமிருக்க மக்கள் ராமராவ் தலைமையிலான தெலுங்கு தேசத்தைத்தான் தம்மை ஆளத் தேர்ந்தெடுத்தனர், பாஸ்கரராவின் தலைமையிலான தெலுங்கு தேசத்தை அல்ல என்ற அடிப்படையான ஜனநாயக, தார்மீகச் சிந்தனை வேண்டாமா?

அம்மையாரைக் கேட்காதீர்கள். அவருக்கு ஒன்றும் தெரியாது. ஆளுனர்கள் அவரைக் கேட்டு எந்தக் காரியமும் செய்வதில்லை. கட்சிமாறிகளுக்குத் தமது கட்சி ஆதரவு தரலாமா என்ற தார்மீகப் பிரச்சினை பற்றிக் கூட அவர் ஏதும் கூறுவதற்கில்லை!

ராமராவ் கட்சியிலிருந்த சபாநாயகர் சத்யநாராயணா, ராஷ்டிரபதி முன்பாக ராமராவ் தமது பெரும்பான்மையை நிரூபித்தபோது உடனிருந்தார். அங்கு கூடிய எம். எல். ஏக்களுக்கு அடையாளச் சீட்டுக்கள் வழங்கியவரே அவர்தான். இன்று பாஸ்கரராவ் அமைச்சரவையில் அவர் ஒரு மந்திரி! துணை சபாநாயகர் பீம் ரெட்டியோ கடிகார பெண்டுலம் போல இப்படியும், அப்படியுமாக ஆடி இன்று பாஸ்கரராவ் அமைச்சரவையில் இருக்கிறார். இத்தகைய மோசடிக்காரர்களை, கட்சிமாறிகளை, பதவிப் பித்தும், பணத்தாசையும் கொண்டவர்களை ஊக்குவிக்கலாமா?

அம்மையாரைக் கேட்காதீர்கள்; தில்லியில் இருக்கும் அவருக்கு ஹைதராபாத்தில் நடக்கும் எதுவுமே தெரியாது!

என். டி. ஆர்., எம். எல். ஏக்களைச் சிறை வைத்திருக்கிறார், என்றும் அது தமக்குப் பிடிக்காததால்தான் பாஸ்கரராவ் பக்கம் தாவியதாகவும் கூறுகிறார் சத்தியநாராயணா. எம். எல். ஏக்கள் சிறை வைக்கப்படவில்லை; மிரட்டல், ஆசை காட்டல் முதலியவற்றிலிருந்து கர்நாடகத்தில் பாதுகாக்கப் படுகிறார்கள் என்பது ஒருபுறமிருக்க, அவர்களை ஆந்திர மாநிலத்துக்குத் திரும்ப அனுமதித்துப் பாஸ்கரராவுக்குப் போதிய அவகாசமும் அளித்தால் என்ன நடக்கும் என்பதற்கு சத்தியநாராயணாவே சான்றாக இருக்கிறாரல்லவா? சதித்திட்டத் தொடர்கதையில் இப்போது படிக்கப்படும் அத்தியாயமே இதுதானே?

அன்னையிடம் கேட்காதீர்கள்; அவர் ஒன்றும் அறியாத அப்பாவி.

இப்படியெல்லாம் நடக்காதிருக்கவும் ஜனநாயக தர்மம் பாதுகாக்கப் படவும் எளிய வழி இருக்கிறதல்லவா? ஒருவர் கட்சி மாறினால் எம். எல். ஏ. பதவியைத் துறந்து மறுபடி வாக்காளரைச் சந்திக்க வேண்டும் என்றும் பெரும்பான்மை பலம் யாருக்கு இருக்கிறது என்பதைச் சட்டசபை கூடியே தீர்மானிக்க வேண்டும் என்றும் சட்டமியற்ற வேண்டியதுதானே?

அம்மையாரைக் கேட்காதீர்கள்! பாவம், அவருக்கு ஒன்றும் தெரியாது. அவரை யாரும் எதற்கும் கலந்தாலோசிப்பதில்லை!

தமிழ்த்திரு நாடு தன்னைப் பெற்ற -
தாயென்று கும்பிடடி பாப்பா -பாரதியார்

வெள்ளித்திரை

புதியவன்

புதிதான கதை இருக்கிறது என்று யாராவது சொன்னால் 'சரி' என்று தலையாட்டுங்கள். முதுகுக்குப் பின்னால் போய்ச் சிரியுங்கள். இரண்டு பேர். ஆண்–பெண். காதலிக்கிறார்கள். எப்படிக் காதல் ஆரம்பிக்கிறது என்பதற்குச் சில ஷுகர் கோட்டட் இன்ஸிடெண்ட்கள். எப்படி வளர்கிறது? மேலும் நிகழ்ச்சிகள். (பெரும்பாலும் பாடல்கள்) பின் கடைசியில் காதலர்கள் இணைகிறார்கள்? சாகிறார்கள்? — இதில் இணைகிறார்கள். நடுவில் பம்பாயின் வானளாவிய கட்டிடங்களுக்குக் கீழ் ஓட்டம். கடற்கரை மணலில் கொலை. செங்கல் சுவர்களை முட்டி,



விளக்கிச் சண்டைகள். கடைசியில் சுபம்.

அமீர்ஜான் டைரக்டர். மனிதர் நிறைய தெரிந்து வைத்திருக்கிறார். சுவைக்கும் படியாய் நிகழ்ச்சிகளை அமைத்திருக்கிறார். (உ–ம்: பம்பாய் நடுச்சாலைச் சண்டையின் போது ஓடிவரும் டாக்ஸி 'யார் சண்டை போட்டால் எனக்கென்ன?' என்று மெத்தனமாய் விலகி பெட்ரோலை மேலும் குடித்துக் கொண்டு ஓடுவது. சாப்பாட்டு மேஜையிலிருந்து க. நாயகன் எழுந்தவுடன் காமிரா சுறுசுறுப்பாய் நகர்ந்து சுவரின் 'The last supper'–ஐ Zoom செய்வது. சொல்லிக் கொண்டு போகலாம். இடம் பற்றாது!)

கதாநாயகனை அதீத கோபக்காரராகச் சித்திரிக்கிறார்கள். அவரும் விழிகளை அகல விழிக்கிறார். பல்லைக் காட்டுகிறார். 'கண்ணே கலர்' பாடலில் பொம்மை மாதிரி சேஷ்டை பண்ணுகிறார். சண்டைக் காட்சிகளில் நடிக்கும் இளமையைத் தூவுகிறார். கொஞ்சம் குட்டை! அதனாலென்ன? நெப்போலியன் கூடக் குட்டைதான்.

அடுத்தபடி ரவீந்தர். அந்த முட்டைக் கண்ணாடியுடன் ஒரு சமயம் அப்பாவி. இன்னொரு சமயம் அசல் சினிமா வில்லன். எந்த சமயம்? காசு கொடுத்து அடியாட்களை அரேன்ஜ் பண்ணும் சமயம். மற்றபடி டிஸ்கோவில் தோற்றுலும் இவர் டான்ஸ் வின் பண்ணுகிறது.

அனிதா (புதுமுகம்) முரளி பார்ட்டிக்கு வரவில்லை என்றவுடன் காதல் இல்லை என்கிறார். மறுபடியும் கால் உடைந்தது தெரிந்ததும் கண்ணாளா என்கிறார். அப்பாவைப் போட்டு கதாநாயகன் அடி அடி (நிஜமாகவே செமை உதை.) என்று அடித்தவுடன் 'யூ ப்ரூட்' என்று மறுபடி டூ விடுகிறார். காதலிக்கிற ஜாதி மொத்தமும் இப்படித்தான் கண்ணாமூச்சி ஆடுமோ?

கதையில் திருப்புமுனை முரளி செத்துப் போனதாய் பம்பாய் போலீஸ் முடிவு செய்வது.

முரளி ஸ்கேட் பண்ணுகையில் ரவீந்தரின் 'கடவுளே, விழுந்து காலை ஒடச்சிக்கணுமே' பிலாக்கணம் ஒரு லைட் ஹ்யூமர்.

'பையன் கொஞ்சம் கறுப்பு' என்று க. நாயகி சொன்னவுடன் 'கொஞ்சம் வொயிட் வாஷ் பண்ண வேண்டி வரும்' என்பதும்—

'நீ கச்சேரி பண்றேங்கறதால எமர்ஜென்ஸியா கொண்டு வர முடியும்?' என்னும் மற்றொரு வசனமும் மேற்சொன்ன ஹ்யூமர் ஜாதிதான். வசனம் கண்மணி சுப்பு.

அப்புறம் நரசிம்மன் இசை. எல்லாப் பாடல்களும் சிகரெட் பிடிப்போரைக் கூட அரங்கிலேயே இருத்திக் கொள்கின்றன.

புதியவன் கதை பழைய சோறுதான் என்றாலும், தயிர் விட்ட, வெங்காயம் அரிந்து போட்ட, பேரிச்சம்பழம் தொட்டுக்கொள்ள வைக்கப்பட்ட பழைய சோறு. சுவையாய்த்தான் இருக்கிறது.



நேரான கதை. நீதிக்கதை. பெண்டாட்டி தலையணை மந்திரம் சொல்லிக் கணவனை வசியப்படுத்தினால், கணவன் அமுக்கமாய் வேறு வீடு தேடிப் போவான் என்கிற நீதி!

இந்த நீதியைச் சொல்ல பாண்டியன், கலக்ஷ்மணா, சோ, வடிவுக்கரசி, புஷ்பலதா, கோபாலகிருஷ்ணன், ஆனந்தி என்று நட்சத்திரங்கள்.

அரசியல் அவ்வளவாய்க் கலக்காத சோ.

'டீடெய்ல் மிஸ்ஸாகுதே' என்று சொல்லிக் கொண்டு விழிகளை மேலும் விழிக்கும்போது அவருடைய மற்ற க்வாலிஃபிகேஷன்கள் (அரசியல் விமர்சகர், வக்கீல், பத்திரிகை ஆசிரியர்) மறந்துபோய், நல்ல காமெடியன் என்று சிரிப்பு தன்னால் வருகிறது.

'ஃபிஃப்டி டூ, ஃபிஃப்டி த்ரீயில பொண்ணுங்கள்ளாம்'—

'இப்ப அவங்கள்ளாம் பாட்டி ஆயிருப்பாங்க' என்று நெடுகப் புன்முறுவல் பூக்க வைக்கும் வசனங்கள்.

கலக்ஷ்மணா பாண்டியனின் காதை திமிண்டுவதும், தலைமுடியைச் சிலுப்புவதும் — மூட்வர வழைக்கிறாராக்கும் என்று பாண்டியன் காலை ஆட்ட, அதை நாயின் வால் ஆட்டலாய் கலக்ஷ்மணா கற்பனை செய்து பார்க்க—தியேட்டர் முழுவதுமே அதிர்கிறது.

வழக்கம்போல் வெடுக் வெடுக்கென்று பேசிப் பொரிகிறார் கலக்ஷ்மணா.

பாண்டியன் வருகிறார். மனைவியிடம் இழைகிறார். சண்டை போடுகிறார். டீஸண்ட் குடும்பத் தலைவனாய் இருக்கிறார். எல்லாம் சரிதான். ஆனால் வசனம் பேசும் போது மட்டும் வாள்க்கை (வாழ்க்கை) பளி (பழி) சந்தோசம் (சந்தோஷம்) என்று எதற்காகக் கொலை மேல் கொலை செய்கிறார்?

பாண்டியன் பெண்ணைத் தேடிப் போவதும், சோலையில் (ஸ்டுடியோ சோலை) பெண்கள் அவரைக் கிண்டல் செய்வதும் பாடுவதும், பதிலுக்கு இவர் பாடுவதும் — எத்தனையாவது தரம் இந்த மாதிரி படத்தில் பார்ப்பது?

கதையை சோ ஓடுவதிலேயே ஆரம்பித்திருக்கலாம். அதற்கு முந்தின பாட்டு வேஸ்ட். இருந்தாலும் தங்கச்சி உறவை முன்னாலேயே சொல்லி விடவேண்டும் என்று அந்த ஸீனா? என்னதான் சொல்லுங்கள், அது தேவையற்ற 'அப்பெண்டிக்ஸ்' தான்!

எங்கே, எங்கே என்று தேடிப் பார்த்து இரண்டு சண்டை ஸீன்களை வைத்திருக்கிறார்கள். சுமார்தான்.

பாடல்கள் ஒன்றும் ரீங்கரிக்கவில்லை என்றாலும்,

சோவும்,

தாய்மார்களை இலேசாக இடித்துரைத்தாலும் அவர்களே விரும்புகிற மாதிரி படத்தை அமைத்திருக்கும் விதமும்....

பத்தோடு இது ஒன்று என்று கலபமாய்ச் சொல்ல முடியவில்லை.

— ஜெயமன்மதன்

தலையணை மந்திரம்

மூலக்கனல்

அத்தியாயம் 22

''பத்திரிகையிலே உங்களைப் பற்றிக் கட்டுரை எழுதற எழில்ராஜா வேற யாருமில்லே! சண்பகத்திட்ட உங்களுக்குப்பிறந்த மகன்தான். நீங்க ராவணன்னு அவனுக்குப் பேர் வச்சீங்க! சண்பகம் அது பிடிக்காமே ராஜான்னு கூப்பிட்டா. அதுவே நிலைச்சுப் போச்சு! எழில்ங்கறது ஊர்ப் பேரோட தொடக்கம். ராஜாங்கிறது சொந்தப்பேரு''— என்று சர்மா விவரித்த போது திருவுக்குத் தலைசுற்றியது. சப்த நாடியும் ஒடுங்கினாற் போல ஆகிவிட்டது. சொல்லவும் முடியாமல், மெல்லவும்முடியாமல் அவன் பதறினான். எழில்ராஜாவைத் தீர்த்துக் கட்டச் சகல ஏற்பாடுகளுடனும் புறப்பட்டு விட்டவர்களை எப்படித் தடுப்பதென்று இப்போது புரியவில்லை. முகத்திலும், உடலின் மற்றபகுதிகளிலும் தெப்பமாக வேர்த்து விட்டது. ''என்ன? உங்களுக்கு என்ன ஆயிடுத்து இப்போ?'' என்று பதறிப்போய்க் கேட்ட சர்மாவுக்கு அவனால் எதுவும் பதில் சொல்ல முடியவில்லை. செய்வதறியாது அவன் கைகளைப் பிசைந்தான். ஏவி அனுப்பியிருக்கும் குண்டர்களைத் தடுப்பதற்கு வேறு சில குண்டர்களைப் பின் தொடர்ந்து அனுப்பலாமென்று டெலிஃபோனைச் சுழற்றினான். அவனுக்கு வேண்டிய எண் கிடைக்கவில்லை. அவன் எதையும் வாய் விட்டுச் சொல்லாததால் அப்போது அவனுடைய பதற்றத்துக்கும், குழப்பத்துக்கும் காரணம் என்னவென்று சர்மாவுக்குப் புரியவில்லை. அவர் திகைத்தார்.

திருவுக்கு உடல் பதறி நடுங்குவதையும் வேர்த்து விறுவிறுப்பதையும் பார்த்து அவருக்கு ஒன்றுமே விளங்கவில்லை. இதுவரை அவனை இப்படி நிலையில் அவர் பார்க்க நேர்ந்ததே இல்லை. ''சாமீ! கன்னையா எங்கயாவது ஆப்பிடுவானு பாருங்க...'' —என்றான் அவன். குரல் நடுங்கிக் குழறியது. அவர் கன்னையனைத் தேடிப் போனார். குடி, கூத்து என்று தாறுமாறாக வாழ்ந்ததனால் திடீரென்று அவனுக்கு உடல்நிலை கெட்டு ஏதோ ஆகிவிட்டதென்று நினைத்துக் கொண்டார் அவர். பங்களா முகப்பு, தோட்டம், அலுவலக அறை எல்லா இடங்களிலும் தேடிவிட்டுத் திருவின் உதவியாளனை கன்னையன் எங்கேயும் தென்படாததை உள்ளே அவனிடமே போய்த் தெரிவித்து விட்டு, ''உங்களுக்குத் திடீர்னு உடம்பு ஏதோ சரியில்லேன்னு நெனைக்கிறேன். டாக்டரைக் கூப்பிடணும்னு நானே ஃபோனில் கூப்பிடறேனே...? இல்லேன்னு வாசல்லே செண்ட்ரியா நின்னுண்டிருக்கானே அந்தப் போலீஸ் கான்ஸ்டேபிளைக் கூப்பிடச் சொல்லட்டுமா?'' — என்றார் சர்மா. நெஞ்சைப் பிசைந்து கொண்டு உட்கார்ந்து விட்ட திரு அவரிடம் வேண்டாம் என்பதற்கு அடையாளமாகத் தலையை மட்டும் ஆட்டினான். 'கொலை பாதகனே'— என்று அவனுடைய மனச்சாட்சியே அவனை இடித்துக் காட்டியது. அப்போது அந்த நிலையில் தன்னை யாரும் கவனிப்பதே அவனுக்குப் பிடிக்கவில்லை. 'நீர் போகலாம்' —என்பதற்கு அடையாளமாகச் சர்மாவை நோக்கி ஜாடை காட்டினான் அவன்.

''நான் வரேன். உடம்பைக் கவனிச்சுக் கோங்கோ. பம்பரமா அலையறேள். உங்களுக்கு ஒய்வு வேணும். அந்தத் தமிழ் இசை கான்பரன்ஸ் தலைமைப் பேச்சைத் தயாரிச்சுண்டு நாளன்னிக்கு மறுபடி வந்து பார்க்கறேன்'' — என்று சொல்லிக் கொண்டு சர்மா புறப்பட்டார்.

அதற்கு முந்திய விநாடி வரை திருவுக்குப் பாவ புண்ணியங்களில் நம்பிக்கை கிடையாது. நல்வினை, தீவினைகளை அவன் என்றும் பொருட்படுத்தியதே இல்லை. விதியை நம்பியதில்லை. இப்போது என்ன காரணமோ தெரியவில்லை, அவன் அந்தரங்கம் அவற்றை எல்லாம் எண்ணி நடுங்கியது. தான் செய்த பாவங்களும், தீவினைகளும் எல்லாம் சேர்ந்து தான் சொந்த மகனைத் தானே கொலை செய்ய நேரும்படி இப்படிச் சதி புரிந்து விட்டனவோ என்று தோன்றியது. ஏற்கெனவே பிளட்பிரஷர், நெஞ்சுவலி, எல்லாம் தொடங்கியிருந்தன. வயது வேறு ஆகி இருந்தது. திருடனுக்குத் தேள் கொட்டிய

நா. பார்த்தசாரதி

மாதிரி யாரிடமும் விட்டுச் சொல்ல முடியாமல் இப்போது திணறினன் அவன். ''இப்படி அநியாயமாக ஒரு பச்சிளங் குருத்தைக் கொல்லப் போகிறார்கள்! போய் யாராவது தடுத்து விடுங்களேன்'' — என்று அவனே சொல்லி மாட்டிக் கொள்ளவும் முடியாமல் இருந்தது.

சண்பகத்தின் லட்சுமீகரமான முகம் அவனுக்கு நினைவு வந்தது. அவனுக்கும் தனக்கும் முறிவு ஏற்பட்டபின் அரசியலில் - தன்னை எதிர்த்தே வேலை செய்த மைத்துனன் நினைவு வந்தான். சண்பகத்தின் மரணத்தின் போது மொட்டை போட்டுக் கொண்டு கொள்ளிச்சட்டி ஏந்திச் சென்ற இதே மகன் நினைவு வந்தான். விதி எவ்வளவு கோரமான சதியைச் செய்து விட்டது என்றெண்ணியபோது சிறுகுழந்தை போல் குமுறிக் குமுறி அழுதான் திரு. ஏதாவது அற்புதம் நடந்து எழில்ராஜா தன்னைக் கொல்வதற்குச் சூழும் ஆட்களிடம் இருந்து தப்பிவிடக் கூடாதா என்று கூட இவன் இப்போது



எண்ணினான். தன்னுடைய மகன் அன்று தெரியாமல் தானே அவனைக் கொல்ல ஆள் ஏவியதை மறுபடி நினைத்தால் கூடப் பாதாதி கேச பரியந்தம் நடுங்கியது. தான் ஆடாவிட்டாலும் சதை ஆடும் என்பார்களே அப்படிச் சதை ஆடியது. மனமும், உடலும், பெரும் பாதிப்புக்கு ஆளாகி அவன் மூர்ச்சையானான். நல்ல வேளையாக வெளியே போயிருந்த உதவியாளன் கன்னையா அந்த நேரத்தில் திரும்பியிருந்தான். உடனே திருவை அவனுக்கு மிகவும் வேண்டிய ஒரு டாக்டரின் தனியார் மருத்துவமனையில் சேர்க்க முடிந்தது. பத்திரிகைகளில் செய்தி வந்து விடும் என்பதாலும் பலர் பார்க்க வருவார்கள் என்பதாலும் வேறு சில இரகசியங்கள் கருதியும் திரு எப்போதும் மாடவீதியிலிருந்த இந்தத் தனியார் மருத்துவமனையில் சேர்ந்து – தனியிடத்தில் ஓய்வு எடுப்பதாக மட்டும் வெளியே தகவல் தெரிவிப்பது வழக்கம். யாரையும் தன்னைப்பார்க்க அநுமதிப்பதில்லை. இந்த இரகசிய ஏற்பாட்டால் ரோஸி முதல் தாண்டவராயன் வரை அவனோடு எப்போதும் போல் நெருங்கிப் பழக வாய்ப்பிருந்தது. சினிமா நடிகைகள், படத்தொழிலின் பெரும்புள்ளிகள் எந்நேரமும் அந்தரங்கமாகத் தேடி வந்து போக இந்தத் தனியார் மருத்துவமனை பெரிதும் உதவியாயிருந்தது. பொது மருத்துவமனையாகவோ, அரசாங்க மருத்துவமனையாகவோ இருந்தால் யார், யார் பார்க்க வருகிறார்கள் என்பது இரகசியமாயிராது. பத்திரிகை நிருபர்கள் சதாகாலமும் வளைய வளைய வந்து கொண்டிருப்பார்கள்.

ஏதோ திடீர் அதிர்ச்சி காரணமாக மிகவும் பாதிக்கப்பட்டிருப்பதாகவும் முழு ஓய்வு தேவைப்படுவதாகவும் டாக்டர் கூறினார். மருந்துகளும், தூக்க மாத்திரையும், கொடுத்துத் தூங்கச் செய்தார். விடிந்ததும், அவனுக்கு நினைவு வந்தவுடன் காலைப் பத்திரிகைகளைத் தேடினான் அவன். நெஞ்சு படபடக்கப் பத்திரிகைகளைப் புரட்டிப் படித்தால் மேலும் புதிர் நீடித்தது.

முந்திய இரவு ஒரு ரிப்போர்ட்டிங் விஷயமாக வெளியே சென்ற நிருபர் எழில்ராஜா வீடு திரும்பவில்லை என்றும் சமூக விரோதிகளால் அவர் கடத்தப்பட்டிருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுவதாகவும் மட்டுமே ஒரு சிறிய செய்தி வெளியாகி இருந்தது. அதுவும் சில பத்திரிகைகளில் மட்டுமே வெளி வந்திருந்தது. வேறு சில பத்திரிகைகளில் எந்த விவரமே இல்லை. மர்மம் தொடர்ந்தது. தான் ஏவிய ஆட்கள் அவனைக் கடத்திக் கொண்டு போயிருக்கும் பட்சத்தில் உயிரோடு தப்ப விட்டிருக்க மாட்டார்கள் என்பதிலும் அவனுக்குச் சந்தேகம் இருக்கவில்லை. காரியம் திட்டமிட்டபடி முடிந்து விட்டால் மறுபடி தன்னை அவர்கள் உடனே சந்திக்க வேண்டியதில்லை என்றும், திட்டமிட்டபடி முடியா விட்டால் மட்டுமே சந்திக்கலாம் என்றும் ஏற்பாடாகியிருந்தது. பதற்றத்தோடு கன்னையனைக் கூப்பிட்டு, ''நேற்றிரவு அல்லது இன்று காலை தன்னை யாராவது வீட்டுக்குத் தேடி வந்தார்களா?'' என்று விசாரித்ததில் அவன் கூர்க்காவிடமும் செண்ட்ரியிடமும் கேட்டு விட்டுத் திரும்பிவந்து தெரிவிப்பதாகப் புறப்பட்டுப் போனான்.

போய் விட்டுத் திரும்பி வந்து அவன் தெரிவித்த செய்தி ஏமாற்றமளிப்பதாக இருந்தது. நிமிஷவாரியாகப் பார்க்கவந்தவர்களின் பெயரை செண்ட்ரி குறித்து வைத்திருந்தான். வேணுகோபால சர்மா வந்து போனபின் இரவு யாருமே திருவைக்காண வரவில்லை. காலையில் மட்டும் சில கட்சி ஆட்கள், தொழிலதிபர்கள், இலாகாவைச் சேர்ந்த அதிகாரிகள் வந்திருந்தனர். முந்திய மாலை கொலைக்கு இரகசியமாக ஏவப்பட்டவர்களில் யாருமே திரும்பவும் அவனைப் பார்க்க வரவில்லை என்பதிலிருந்து காதும், காதும் வைத்தாற்போல் ஆளைக் கடத்திச் சென்று தீர்த்து விட்டிருப்பார்கள் என்றே அநுமானிக்க முடிந்தது. அவர்கள் அதைச் செய்திருந்த சாமர்த்தியத்தால் இதுவரை எதுவும் வெளியாகவில்லை. ஓரிரு நாட்களில் வெளியாகலாம். மேற்கொண்டு சிலதினங்கள் தாமதமும் ஆகலாம் என்று தோன்றியது.

மகனைக் கொன்றிருப்பார்கள் என்றெண்ணியதுமே மறுபடி அவனுக்கு மயக்கம் போட்டுவிட்டது. இப்போது டாக்டர்களுக்கே புரிந்துகொள்ள முடியாத மர்மமாயிருந்தான் அவன்.

மந்திரிக்கு மிகவும் நெருக்கமானவர்கள் என்று டாக்டர் புரிந்துகொண்டிருந்த தொழிலதிபர் தாண்டவராயனிடமும், ரோஸியிடமும் கன்னையனிடமும் மட்டும், ''ஏதோ பெரிய அதிர்ச்சி மூளையையும், இதயத்தையும் தாக்கிப் பாதிச்சிருக்கு! இப்ப இவரிடமிருந்தே அது என்னன்னு தெரிஞ்சிக்கவும் முடியாது. பார்க்கலாம். உங்களுக்கு ஏதாவது தெரியுமானா மறைக்காமே உடனே எங்கிட்டச் சொல்லுங்க'' – என்றார். உண்மையில் அவர்களுக்கு எதுவும் தெரிந்திருக்கவில்லை. திடசித்தமும், எதற்கும் கலங்காத வைராக்கிய முரண்டும் உள்ள திருவின் 'மனத்தைப் பாதிக்கும் நிகழ்ச்சி எதுவும் தனி வாழ்விலோ, பொது வாழ்விலோ நடந்திருக்க முடியாது' என்று அவர்கள் உறுதியாக நம்பினார்கள். வழக்கம் போல் திருவின் நிலை பற்றிப் பத்திரிகைகளில் எதுவும் வந்துவிடாமலிருக்க எச்சரிக்கை எடுத்துக் கொண்டான் கன்னையன். ஏதோ விரக்தியடைந்தவன் போல உணவு உண்ண மறுத்தான் திரு. மருந்து சாப்பிடுவதிலும், சிகிச்சை பெறுவதிலும் கூடச் சிறிதும் சிரத்தை காண்பிக்கவில்லை அவன். தொழிலதிபர் தாண்டவராயனும், ரோஸியும் இரவு பத்து மணிக்கு மேல் அவனைச் சந்திக்க வந்த போது தற்செயலாக அவனுக்கு நினைவு இருந்தது. ஆனால் அவன் அவர்கள் இருவரையும் வாயில் வந்தபடி திட்டி வெளியேறச் சொல்லிக் கூப்பாடு போட்டான். 'நான் பாவி – படுபாதகன் –' என்று திரும்பத் திரும்ப அவன் ஏன் தன்னையே குற்றம் சாட்டிக்கொண்டு கண்ணீருகுக்கிறான் என்பது டாக்டர்களுக்கே புரியாத மர்மமாயிருந்தது. எந்த நிகழ்ச்சி அவனை இப்படிப்பாதித்து அதிர்ச்சியடையச் செய்திருக்க

N.S.K.

ஃபைனான்சியர்ஸ்

கவர்ச்சிகரமான வட்டி விகிதங்களில்
ஃபிக்சட் டெபாசிட்டுகள் ஏற்றுக் கொள்ளப்படுகின்றன.
ஒவ்வொரு ரூ. 5000/- [குறைந்தது 5 வருடங்கள்] டெபாசிட்டுக்கும்

அன்பளிப்பு V.I.P. ஃபிரீப்கேஸ்

5 வருடங்களுக்கு குறைவான டெபாசிட்டுக்கும்
அன்பளிப்பு – வெள்ளி குத்து விளக்கு

வருடாந்திர வட்டி விகிதங்களின் மேல்
3% கூடுதல் வட்டி
இச்சலுகை 1.9.84 முதல் 30.9.84 வரை மட்டுமே.
இப்பொன்னான வாய்ப்பை தவற விடாதீர்கள்.



மற்றும் ஒரு பொன்னான வாய்ப்பு :—
உடல் ஊனமுற்றோர், பென்ஷனர்ஸ், விதவைகள், மைனர் இவர்களுக்கு மேற்கண்டுள்ள போனஸ் வட்டியையும் தவிர 1% கூடுதல் வட்டி (அதாவது- 25%) அளிக்கப்படுகிறது.

மாதாந்திர வட்டி விகிதங்கள்

6 மாதங்கள்	1 வருடம்	2 வருடங்கள்	3 வருடங்கள்	5 வருடங்கள்
15%	16%	17%	18%	21%

(Minimum deposit acceptable Rs. 1000/- multiples)

உங்களுடைய முதலீடு 48 மாதங்களில் எங்களது "கோல்டன் கேஷ் சர்டிபிகேட் திட்டத்தின்" மூலம் இருமடங்காகிறது.

முதலீடு செய்ய தொடர்புகொள்க:
பதிவு & நிர்வாக அலுவலகம்:
(தி.நகர் பேருந்து நிலையம் எதிர்புறம்) எண். 38B, பர்கிட் ரோடு
(முதல் மாடியில்) தி.நகர், சென்னை-600 017. போன்: 447135

எதிர்கால சேமிப்பிற்கு என்.எஸ்.கே.

வேண்டுமென்று அவர்களால் இந்த விநாடி வரை அநுமானிக்க முடியாமல் இருந்தது. அவனிடமே பேச்சுக் கொடுத்து அறியவும் இயலாதபடி அவன் நிலைமை மிகவும் மோசமாயிருந்தது. சித்தத் தெளிவற்ற நிலையிலும் காலை மாலைத் தினசரிகளில் திரு காட்டும் அளவு கடந்த ஆர்வம் டாக்டர்களை யோசிக்க வைத்தது. நர்ஸ் மூலமும் மற்ற உதவியாளர்கள் மூலமும் செய்தித் தாள்களில் திரு படிப்பது என்ன என்பதை இரகசியமாகக் கண்காணித்துக் கண்டறியக் கூட அவர்கள் முயன்றார்கள்...

''இளம்பத்திரிகை நிருபர் எழில்ராஜா காணமல் போய் இன்றுடன் பத்து நாட்களாகின்றன. அவரைக் கடத்திக் கொண்டு போய்க் கொலை செய்திருப்பார்களோ என்று சந்தேகப்படுகிறார்கள்'' — என்று முதல் முதலாகக் கொலை பற்றிய பிரஸ்தாபம் பத்திரிகைகளில் வெளிவந்த தினத்தன்று மீண்டும் தினசரிகளைப் படித்துக் கொண்டிருக்கும் போதே திரு மூர்ச்சையானான் திரு. இந்தப் பத்து நாள் வரை 'தனியார் மருத்துவமனை ஒன்றில் ஓய்வெடுக்கிறார்' — என்று மட்டுமே திருவைப் பற்றிய செய்தி வெளிவந்திருந்தது. ஒரே ஓர் எதிர்த் தரப்புப் பத்திரிகை மட்டுமே, ''அமைச்சர் திருவுக்கு சித்தப்பிரமை — அடிக்கடி நினைவு தவறுகிறது. திடுக்கிடும் உண்மை பொது மக்களுக்கு மறைக்கப்படுகிறது'' — என்று தலைப்புச் செய்தி வெளியிட்டுப் பரபரப்பூட்டியிருந்தது. கன்னையா மறுத்து அறிக்கை வெளியிட்டான். ''அமைச்சர் திரு அவர்களின் உடல்நிலை பற்றித் தாறுமாறாகவும், தவறுதலாகவும் பத்திரிகைகளில் வெளிவருகிற செய்திகளைக் கண்டித்து மறுத்து விட்டு, ''ஓய்வு கொள்வதாக'' வந்த பழைய செய்தியையே மீண்டும் உறுதிப்படுத்தியிருந்தான் கன்னையா.


முழுமையாக மாதம் ஒன்று ஓடிவிட்டது. கடத்தப்பட்டதாகக் கருதப்படும் எதிர்க்கட்சிப் பத்திரிகையாளர் எழில்ராஜா உயிரோடிருக்கிறாரா இல்லையா என்று கண்டு பிடிக்கக் கூடப் போலீஸுக்குத் துப்பில்லை'— என்கிற பாணியில் சில பத்திரிகைகளில் கண்டனத் தலைப்புக்கள் கூட வெளிவந்து விட்டன. தான் அனுப்பிய ஆட்கள் தன் மகனைத் துடிக்கத் துடிக்கக் கொன்று தீர்த்து விட்டார்கள் என்று இந்தச் செய்தியைப் பார்த்த பின் திரு நிச்சயம் செய்து கொள்வதைத் தவிர வேறு வழியில்லாமல் போயிற்று. அவன் உடல்நிலை மேலும் மோசமடைந்தது. அடிக்கடி நினைவு தவறியது. ஒழிந்த நாராகப் படுக்கையில் கிடந்தான் அவன். ஏதோ வேலையாக எழிலிருப்புக்குப் போயிருந்த வேணுகோபாலசர்மா சென்னை திரும்பியதும் திருவைச் சந்திக்க அவன் தங்கியிருந்த மருத்துவமனைக்குத் தேடி வந்தார். அவர் வந்த சமயம் திரு தன் நினைவற்றுக் கிடந்ததால் டாக்டர்கள் அவரைச் சந்திக்க அனுமதிக்கவில்லை. தற்செயலாகப் பேசிக் கொண்டிருந்த சர்மா டாக்டரிடம் அந்த விஷயத்தைச் சொல்ல நேர்ந்தது. ''கடத்திக் கொண்டு போய்க் கொல்லப்பட்டதாகக் கருதப்படும் எழில்ராஜா என்ற இளம் பத்திரிகையாளன் அமைச்சர் திருவின் சொந்த மகன்தான்! ஒருவேளை அந்தச் செய்தி அவரைப் பாதித்திருக்கலாம்'' என்று சர்மா கூறியதை டாக்டர் அலட்சியப்படுத்தவில்லை.

அன்று மாலையே டாக்டர் தனியே திருவின் அறைக்குச் சென்று அவனுக்குச் சுயநினைவு இருந்த சமயமாகப் பார்த்து, ''உங்களுக்குத் தெரியுமோ? அந்த இளம் பத்திரிகையாளன் கொல்லப்படவில்லையாம். சாமர்த்தியமாகத் தன்னைக் கடத்தியவர்களிடம் இருந்து தப்பி விட்டானாம்'' — என்று ஆரம்பித்ததுமே திருவின் முகத்தில் ஆவல், மலர்ச்சி எல்லாம் பளிச்சிட்டன.

''அப்படியா? அவனை நான் உடனே பார்க்கணும் டாக்டர்!''— என்று திரு படுக்கையில் எழுந்து உட்காரக் கூட முயன்றான். சர்மா கூறியது சரிதான் என்று டாக்டர் முடிவு செய்து கொள்ள முடிந்தது. மறுபடி சர்மாவை அழைத்து வரச் செய்து மேலும் விவரங்களைச் சேகரித்தார் டாக்டர். இதற்கிடையில் கட்சியில் அவனுக்குப் பயந்து ஒடுங்கியிருந்த அவனது எதிரிகள் மெல்ல அவனுக்கெதிராகப் போர்க்கொடி காட்டத் தொடங்கினார்கள்.'' எவ்வளவு நாள்தான் ஒரு சித்தஸ்வாதீனமற்ற ஆளை அமைச்சராக வைத்திருப்பது? லஞ்சம் மூலம் நிறையப்பணம் வேறு பண்ணியாயிற்று. ஆரோக்கியமாக இருந்த போது லஞ்சம். நோயாளியானபின்னும் பதவியா?'' என்று திருவுக்கு எதிராகக் குரல் கிளம்ப ஆரம்பித்திருந்தது.

(தொடரும்)

வியர்க்குருவினின்று நிவாரணம் பெற டால்கம் பவுடர் போதாது, நைஸில் வேண்டும்.



நைஸில் உபயோகியுங்கள்

வியர்க்குருவினின்று விரைவில் நிவாரணம் பெறுங்கள்.





HTB-GLL/8SC6

நைஸில், மருந்துக்கலவையுள்ள பவுடர் ஆகும். வியர்க்குருவின் எந்தவிதத் தொல்லையிலிருந்தும் உடனடியாக நிவாரணம் அளிப்பதற்கென்றே விசேஷமுறையில் தயாரிக்கப்பட்டதாகும். டால்கம் பவுடர்களைப் போலன்றி, பிரச்சினை மோசமாவதனின்றும், பரவுவதனின்றும் எதிர்த்துக் காக்கிறது இது.

1. அளவுக்கு மீறிய வியர்வையைத் தடுக்கிறது.
2. வியர்வையை உறிஞ்சுகிறது.
3. துர்நாற்றம் ஏற்படுத்தும் கிருமிகளை அழிக்கிறது.
4. சருமத்திற்கு இதமளிக்கிறது.

2 திணுசு டப்பாக்களில் கிடைக்கிறது. 'நீலம்', சந்தனம்'.

உடல் நலத்தின் உறைவிடம்

க்ளாக்ஸோ

நெருப்புமலர்

இந்துமதி

6

ஆக்ராவிலிருந்து பதேபூர் ஸிக்ரிபோய், மதுரா கிருஷ்ணனைத் தரிசனம் பண்ணிவிட்டு மீண்டும் டில்லி திரும்பிய போது இரவு மணி பதினொன்றாகி விட, அதற்குமேல் ஹாஸ்டலுக்குப் போகாமல் அர்ஜுனின் வீட்டிலேயே தங்கி விட்டாள் கிருத்திகா. நல்லவேளையாக அந்த சனிக்கிழமையும், ஞாயிற்றுக்கிழமையும் வெளியில் தங்குவதற்கு வார்டனின் அனுமதியை முன்பே பெற்றிருந்தாள். அதனால் ஹாஸ்டல் பிரச்சினையற்று அர்ஜுனுடன் போக முடிந்தது. ஆனாலும் சற்றுத் தயங்கி மெதுவாகக் கேட்டாள்.

''நான் வீட்டிற்கு வந்து தங்குவதால் உங்களுக்குப் பிரச்சினை எதுவும் ஏற்படாதே...?''

''என்ன மாதிரிப் பிரச்சினையை எதிர்பார்க்கிறாய் கிருத்திகா...?''

''இல்லே. அப்பா இருக்கிறாரே, ஏதாவது சொல்லப் போகிறாரே, என்று கேட்டேன்.''

அதைக் கேட்டு மென்மையாய்ச் சிரித்தான் அவன்.

''உனக்கு அப்பாவைப் பற்றித் தெரியாது. நாளைக்கு நேரில் சந்திக்கிற போது நீயே தெரிந்து கொள்வாய். அதற்கு முன் நான் எதுவும் சொல்லப் போவதில்லை.''

அவர்கள் வீட்டிற்குப் போன போது ராம்சிங் தூங்காமல் காத்திருந்தான். கிருத்திகாவை சந்தோஷமாக வரவேற்றான். ரகசியமாக அர்ஜுனிடம் சொன்னான். ''மேம்ஸாப் ரொம்ப அழகாக இருக்கிறார்கள் ஸாப். அம்மா இருந்து பார்த்திருந்தால் இன்னமும் சந்தோஷப்பட்டிருப்பார்கள்...''

''அதற்குப் பதிலாகத்தான் நீ சந்தோஷப்படுகிறாயே ராம்சிங்...அப்பா எங்கே, தூங்கி விட்டாரா...?''

''வழக்கப்படி ஒன்பது மணிக்கே தூங்கப் போய் விட்டார்...''

''சரி. காலையில் அவருக்கு அறிமுகப்படுத்தி வைக்கிறேன். இப்போது எங்களுக்குப் பால் மட்டும் குடிக்கத் தந்துவிட்டு கெஸ்ட் பெட்ரூமை கிருத்திகாவிற்காக ஒழித்துக் கொடுத்து துணைக்கு அறை வாசலிலேயே படுத்துக் கொள்ளணும் ராம்சிங்..''

''ஓ... சந்தோஷமாகச் செய்கிறேன் சோட்டா சாஹப். ஆமாம், உங்களுக்குச் சாப்பாடு...?''

''மதுராவிலேயே ஒரு மதராஸி ஓட்டலில் முடித்துக் கொண்டாகி விட்டது. இப்போது பால் மட்டும் போதும்...''

சூடாக மிதமாய்ச் சாக்கரைவிட்டு இரு பெரிய கண்ணாடித் தம்ளர்களில் பால் கொண்டு வந்து வைத்துவிட்டு விருந்தினருக்கான படுக்கையறையைச் சரி பார்த்து விட்டு ஹாலுக்கு வந்து சொன்னான்.

''மேம்சாபின் அறை தயாராக இருக்கிறது அர்ஜுன் சாஹப். அவர்கள் போய்ப் படுத்துக் கொள்ளலாம்...''

''மேம்சாபா...?'' என்று கிருத்திகா திடுக்கிட்டு நிமிர்ந்தாலும் அந்தத் திடுக்கிடலில் ஒரு இனிமை தெரிந்தது. அதைப் பார்த்துச் சிரித்தான் ராம்சிங்.

''இந்த வீட்டுக்கு நீங்கள் எஜமானியாக வரப் போகிறவர்தானே?... இப்போதே மேம்சாப் என்று கூப்பிடுவதில் என்ன தவறு...?''

படுக்கை அறை வாயில் வரை அவளோடு துணையாகப் போன அர்ஜுன் விவரித்தான்.

''ராம்சிங்கை நீ தப்பாக எடுத்துக் கொள்ளக் கூடாது கிருத்திகா. அவன் வெறும் வேலைக்காரனில்லை. இந்த வீட்டிற்கு அவன் வந்து சேர்ந்த போது நான் பிறக்கக் கூட இல்லை. அம்மா செத்துப் போனபின்பு எனக்குத் தாயாக — அப்பாவிற்கு ஒரு பெரிய துணையாக இருந்ததெல்லாம் அவன் தான். அதனால் அவனுக்கு இங்கு சகலமரியாதைகளும் உண்டு...''

''அப்படியா...?'' என்ற கிருத்திகா, ''ரொம்ப நல்லவராக இருப்பார் போலிருக்கிறதே...?'' என்றாள்.

''ரொம்ப, ரொம்ப...'' என்று பதிலளித்த அர்ஜுன், ''இதுதான் உங்கள் படுக்கையறை. எந்த பயமுமில்லாமல் நீ இங்கே தூங்கலாம். எதிர் அறையில் நான் தூங்கப் போகிறேன். உனக்குத் துணையாக அறை வாசலில் ராம்சிங்கைப் படுக்கச் சொல்லியிருக்கிறேன். எதுவேண்டுமானாலும் எழுப்பிக் கேட்கலாம். இப்போது ஏதாவது தேவையா கிருத்திகா...?''

''கொஞ்சம் தூக்கத்தைத் தவிர வேறு எதுவும் தேவையில்லை...''



''ஐயாம் ஸாரி. இன்று முழுவதும் அலைந்தது உனக்குக் களைப்பாக இருக்கிறது. நாங்கள் ராணுவக்காரர்கள். களைப்பு, தூக்கம், பசி, தாகம் எதுவும் அறியாத வர்கள். என்னை மாதிரியே உன்னையும் நினைத்து நிற்க வைத்துப் பேசிக் கொண் டிருக்கிறேன். பார். போய்ப் படுத்துத் தூங்கு இருத்திகா. காலையில் சந்திக்கலாம். குட்நைட்...''


''குட்நைட்.''

மறுநாள் காலை அவள் எழுந்தபோது மணி ஒன்பதுக்கு மேல் ஆகியிருந்தது. அத்தனை நேரம் தூங்கி விட்ட பரபரப்பில் எழுந்து வெளியில் வந்த போது அறைவாச லில் ராம்சிங்கைக் காணவில்லை. அர்ஜுனின் அறைக் கதவு இன்னமும் திறக்கப் படாத தால் அவன் எழுந்திருக்காதது புரிய, அவள் மீண்டும் உள்ளே போய்ப் பல் துலக்கி முகம் கழுவிக் கொண்டு படியிறங்கி வந்த போது ஹால் சோபாவில் உட்கார்ந்து செய்தித் தாளைப் படித்துக் கொண்டிருந்த பெரியவரைப் பார்த்தாள். கோடு போட்ட பைஜாமா, ஜிப்பாவுடன் கம்பீரமாக இருந் தார். உட்கார்ந்த தோற்றத்திலேயே உயரம் தெரிந்தது. அத்தனை வயதிற்கப்புறமும் நல்ல நிறமாக இருந்தார். தலையில் மட்டும் மொத்த முடிகளும் உதிர்ந்து பளபளக்க பைப்பில் புகைத்துக் கொண்டிருந்தவர், இருத்திகா இறங்கி வந்த லேசான சத்தத்தி லேயே படிப்பதிலிருந்த கவனம் கலைந்து நிமிர்ந்தவர் பெரிதாகப் புன்னகைத்துத் தானே ''ஹலோ...'' சொன்னார்.

''குட்மார்னிங் சைல்ட். இப்போதுதான் எழுந்திருந்தாயா? இரவு நன்றாகத் தூக்கம் வந்ததா...?''

—அறிமுகம் கூட இல்லாமல் சகஜமாக வும், அன்பாகவும் ஆங்கிலத்தில் சரளமாகப் பேச ஆரம்பித்த தோரணை அவளை ஆச்சரியப் படுத்தியது.

அர்ஜுனின் அந்த மென்மைக்கும், இயல் பான பேச்சிற்கும் இவர்தான் காரண மென்று தோன்றியது. பொதுவாகப் பட் டாளக்காரர் வீடு என்றால் ராணுவக்கட்டுப் பாடும், கடுமையும் தான் நிறைந்திருக்கும்



என்ற அபிப்பிராயத்தில் இருந்தவனுக்கு இந்தப் பட்டாளத்து வீடு மென்மையும், இனிமையும், அன்புமாக வித்தியாசமாகத் தெரிந்தது. இத்தனைக்கும் பெண் வாசனை யற்ற வீடு. ஒருவேளை பெண் வாசனையே இல்லாத காரணத்தினால் தான் அர்ஜுன் சொன்ன மாதிரி இத்தனை மென்மை வந்து சேர்ந்திருக்கிறதோ...? மௌனமாய் யோசித்தபடி பதில் சொல்கிற பிரக்ஞை யற்று எதிரில் வந்து நின்றவளை செய்தித் தாளை மடித்து வைத்துவிட்டு நிதானமாகப் பார்த்தார்.

''என்னம்மா யோசனை...?''

சட்டென்று சலைந்து நிமிர்ந்த இருத்திகா மதிப்பும், மரியாதையுமாகக் கைகூப்பித் தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டாள்.

''என் பெயர் இருத்திகா. மதராஸி லிருந்து படிக்க வந்திருக்—''

''ஓ...'' என்று அவளை இடைமறித்த பிரிகேடியர், ''மீதியை நான் சொல்கிறேன். உட்கார்ந்து உன்னை முதலில் ஆசுவாசப் படுத்திக் கொள்'' என்றார். அவள் உட்கார்ந்ததும் ராம்சிங்கைக் கூப்பிட்டு டீ கொண்டு வரச்சொல்லி, பின் மீண்டும் பைப்பை நிரப்பிப் பற்ற வைத்துக்கொள் ளும் முன் மரியாதைக்காக அவளிடம் அனு மதி கேட்டார்.

''ஸாரி மை சைல்ட். இது இல்லாமல் என்னால் பேச முடியாது...''

''ஓ... நீங்கள் தாராளமாகப் புகைக்க லாம்...''

''தாங்க் யூ...'' என்று ஒரு முறை நெஞ்சைப் புகையால் நிரப்பிக் கொண்டு, ''ம்... எங்கே நிறுத்தினேன்...? எஸ்... இப்போது உன்னைப் பற்றிய விவரங்களை யெல்லாம் சொல்கிறேன். கேட்டுக்கொள். உன் பெயர் இருத்திகா. மதராஸைச் சேர்ந் தவள். அப்பா இல்லை. அம்மா ஒரு பின் னணிப் பாடகி. நீ இங்கே படிப்பதற்காக வந்திருக்கிறாய். ரயிலில் அர்ஜுனைச் சந்தித் திருக்கிறாய். இரண்டு பேர் சந்திப்பும் அன் பாக மாறி இப்போது ராம்சிங் உன்னை மேம்சாப் என்று கூப்பிடுகிற அளவில் வளர்ந்திருக்கிறது. என்ன...? என் புள்ளி விவரங்கள் சரியா...?''

அரண்டு போய் எழுந்து நின்றுவிட்டாள் இருத்திகா. என்ன பதில் சொல்வதென்று தெரியாமல், ''சார், சார்...'' என்று தடு மாற... பிரிகேடியர் சிரித்தார். அந்தச் சிரிப்பு குழந்தைத்தனமாகத் தெரிந்தது.

''வில் யூ ப்ளீஸ் கட் தட் சார். வருங்கால மாமனாரை இப்படியா சார் போட்டுக் கூப்பிடுவது...? ஏம்மா; இதுதான் உங்கள் மதராஸிப் பாணியா...?'' என்று குறும்பாகச் சிரித்தபடி கேட்க, அவள் அதற்குப் பதில் சொல்கிற வகை தெரியாமல் பேசாமலிருந் தாள். டீயைக் குடித்து முடித்து கோப் பையை வைத்தவர், ''ஏம்மா, உனக்குத் தான் அப்பா இல்லையே...? அந்த ஸ்தானத் தில் என்னை வைத்து அழகாக அப்பா என்று கூப்பிடக் கூடாதாம்மா...? என்றார்.

சடாரென்று எழுந்து நின்ற இருத்திகா வின் கண்கள் கலங்கிக் கிடந்தன. உள்ளம் தாங்க முடியாத நெகிழ்ச்சியில் கரைய, ''அப்பா...'' என்று கூப்பிட்டு அவர் காலில் விழுந்து நமஸ்கரித்த போது குரல் தடுமாறிற்று.

அவளிடமிருந்து அப்படிப்பட்ட உணர்ச்சிப் பெருக்கை எதிர்பார்க்காத பிரிகேடியரும் கலங்கித்தான் போனார். ''எழுந்திரும்மா..'' என்று அவளை எழுப்பி அணைத்துத் தலையை வருடி, ''ஐ விஷ் யூ ஆல் தட் யூ விஷ் மை டியர் சைல்ட்...'' என்றவர் சட்டென்று சோபாவில் உட்கார்ந்து ஒரு விநாடி மௌனித்தார். பின் மீண்டும் பைப்பை நிரப்பிக் கொண்டு அவளைப் பார்த்தபோது பழைய திடமான பிரிகேடியர் தெரிந்தார்.

''வாசல் புல் தரையில் நடந்துகொண்டே பேசலாமாம்மா...?''

''ஓ. எஸ். வாருங்கள். போகலாம்ப்பா..''

''அந்த வாக்கிங் ஸ்டிக்கைக் கொண்டு வாம்மா...''

மூலையிலிருந்த கைத்தடியைக் கொண்டு வந்து கொடுத்த பின் இரண்டு பேரும் புல் தரைக்குப் போனார்கள். புல் தரையில் நிதானமாகக் குறுக்கும் நெடுக்குமாக நடந்து கொண்டே பேச ஆரம்பித்தார் பிரிகேடியர்.

''உனக்குச் சில உண்மைகளை இந்த நேரத்தில் எடுத்துச் சொல்ல வேண்டியது என் கடமைம்மா. எப்படி அர்ஜுன் எனக்குப் பையனோ அதே மாதிரி நீ என் பெண். இன்று காலையில் ராம்சிங் என்னிடம் மொத்த விஷயத்தையும் சொல்லி, ''மேம் சாப் ரொம்ப அழகு ஸாஹேப்'' என்று சந்தோஷப்பட்டான். அர்ஜுன் ஒருத்தியைத் தேர்ந்தெடுத்திருக்கிறானென்றால் அதுவெறும் அழகிற்காக மட்டும் இருக்காது என்பது எனக்குத் தெரியும். சாதாரண புற அழ கிற்கு அடிமையாகி விடக் கூடிய சாதாரண பையனை இல்யா பெறவில்லை. இல்யா யார் தெரியுமாம்மா...? என் மனைவி. அற்புத மான அழகி மட்டுமில்லை. நல்ல குணவதி. நானும் காதலித்துக் கல்யாணம் பண்ணிக்

கத்திய மகராசி!

மளிகைக் கடைக்காரர்: ''நல்ல வேளையம்மா... நீ கத்தினாய்! திருடன் ஓடிட்டான். இல்லாவிட்டால் என் கடையில் ஒரு திருட்டல்லவா நடந்திருக் கும் மகராசி! அதெப்படி அவன் திருடன்தான் என்று கண்டுபிடித்துக் கத்தினாய்?''

''அவனை யார் பார்த்தா? நீங்கள் சொன்ன விலையைக் கேட்டல்லவா நான் 'ஐயோ' என்று கத்தினேன்!''.

—இராம. சண்முகம்.





எனது ஆறு வயதுச் செல்வி பரத நாட்டியம் நன்கு ஆடுகிறாள். நானிலய உலகமே அவளது மேடையாம்."
போர்ன்விடாவின் இனிமைக் காலம்
போர்ன்விடா அளித்தவரை பாச மனங்கள் நேசத்தோடு நினைத்து மகிழும் ஒருநாள்!
1 கிலோ பேக்கிலும் கிடைக்கிறது. அதன் உள்ளே ஒரு இலவசக் குவளை.
வளரும் குழந்தைகள் வேறு எந்த மால்ட்டட் பானங்களையும்விட போர்ன்விடாவை விரும்புவதேன்? போர்ன்விடா அருந்தி வளர்ந்த இரு தலைமுறையினர் தங்களுடைய குழந்தைகளுக்கு போர்ன்விடா தவிர வேறு எதுவும் உகந்ததல்ல என்று வலியுறுத்திக் கூறுவதேன்?
அதில்... உற்சாகம் துள்ளும் சுவை மட்டுமல்ல, காட்பரியின் பிரபல பெயர் மட்டுமல்ல. அவற்றைவிட அதிகமோ அதிகம். அதுதான் போர்ன்விடா! அதோடு வளருங்கள்.
காட்பரீஸ்
போர்ன்விடா
நல்ல வளர்ச்சி,
போர்ன்விடா பயிற்சி.
Bournvita
Bournvita
SAVE Rs.1.50
The Tonic Food Drink

கொண்டவன்தான். சந்தோஷம் என்றால் என்ன என்பதை நன்றாக அனுபவித்தவன். ஆனால் எல்லாமே கொஞ்ச நாள்தான். பட்டாளத்துக்காரனைக் கல்யாணம் பண்ணிக் கொள்ள — கல்யாணம் பண்ணிக் கொடுக்க எல்லாரும் தயங்குவார்கள். காரணம் அவன் அற்பாயுசில் முடிந்து போனாலும் போவான் என்பார்கள். ஆனால் என் விஷயம் அதற்கு நேர்மாறாக முடிந்து போய் விட்டது... இல்லா போய் நான்... நான் மட்டும் இன்னமும்...''

அதற்கு மேல் பேச இயலாமல் உதடுகள் நடுங்கிக் குரல் அடைக்க பிரிகேடியர் நடப்பதை நிறுத்திச் சிறிது நேரம் எங்கோ வெறித்தார். இரண்டே விநாடிகளுக்குப் பின் ஒரு ஆழமான பெருமூச்சுடன் கிருத்திகாவைப் பார்த்தார். சகஜமான குரலில் மீண்டும் பேச்சைத் துவக்கினார். ''எதற்குச் சொல்ல வந்தேன் தெரியுமாம்மா. பட்டாளத்துக்காரனைக் கல்யாணம் பண்ணிக் கொள்வதென்பது சாதாரணமான விஷயமில்லை. மற்ற பெண்களை விட பட்டாளக்காரனை மணப்பவள் நிறைய தியாகங்கள் செய்ய வேண்டியிருக்கும். அவனுடைய வாழ்க்கை நிச்சயமில்லை. யுத்தம் என்று வந்து விட்டால் எதுவும் நிகழலாம். அதனால் எதற்கும் நீ தயாராக இருக்க வேண்டும் அம்மா...''

கிருத்திகா அமைதியாகஅவரைப்பார்த்துச் சொன்னாள்.

சட்டம் எப்படி இருக்கிறது!

சுதந்திரப் போராட்ட காலத்தில் நாகபுரி கொடி சத்தியாக்கிரகத்தில் கலந்து கொள்ள வார்தாவிலிருந்து வினோபா பாவே புறப்பட்டுச் சென்ற போது அவரை பிரிட்டிஷ் அரசாங்கம் நாடோடி என்று கைது செய்தது.

இதுகுறித்து வினோபாபாவே பேசும் போது சொன்னார்: ''என் ஊரை விட்டு நான் சில மைல் தூரம்தான் போனேன். அதற்குள் என்னை நாடோடி என்று கூறி 109-வது பிரிவின் கீழ் கைது செய்தார்கள். அதே சட்டம் ஆயிரக்கணக்கான மைல்கள் தூரம் தேசத்தை விட்டு வந்த ஆங்கிலேயர்களை நாடோடிகள் என்று கருதவில்லையே!''

—முல்லை முத்தையா எழுதிய 'அறிஞர்களின் வாழ்க்கையில் நகைச்சுவை' என்ற 'புத்தகத்திலிருந்து.

—ஆர்.சிவராஜ்.



''அப்பா, இப்படிப்பட்ட அன்பான, பண்பான ஒரு குடும்பத்தோடு வந்து சேர்ந்தது நான் செய்த புண்ணியம்னு நினைச்சுண்டிருக்கேன்—''

இடையில் குறுக்கிட்ட பிரிகேடியர், ''நிஜமாகவே அர்ஜுனைக் கல்யாணம் பண்ணிக்க நீ புண்ணியம் பண்ணியிருக்கணும்னுதான் நானும் நினைக்கிறேன். என் பிள்ளை என்பதற்காகச் சொல்லவில்லை. நிஜமாகவே அவன் ரொம்ப வித்தியாசமானவன் அம்மா...''

அதில் பெருமை உங்களுக்கு மட்டுமில்லை என்கிறாற்போல் புன்னகைத்தாள் அவள். சிறிது நேர யோசனைக்குப் பின் சொன்னார் அவர்.

''ஆனால் கல்யாணத்திற்குத்தான் நீங்கள் இரண்டு பேரும் கொஞ்சம் காத்திருக்கணும். இந்த வயதில் அவன் காப்டனாக வந்திருக்கிறான் என்றால் அது சாதாரண விஷயமில்லை. அர்ஜுன் பிரிகேடியராக இன்னும் மூன்றே படிகள் தான் இருக்கின்றன. மேஜர், லெஃப்டினன்ட் கர்னல், கர்னல்— இந்த மூன்றுதான். அதற்கப்புறம்தான் அவனுக்குக் கல்யாணம் பண்ணணும்னு நினைச்சுண்டிருக்கேன். ஆனால் நீ... உனக்கு..''

''எனக்கு ஒரு பிரச்சினையும் இல்லை அப்பா. நானும் என் படிப்பை முடிக்கணும் இல்லையா. அதனால் இதைப் பற்றி நீங்கள் கவலைப்படவே வேண்டாம்...''

''குட். வெரிகுட்...'' என்று உள்ளுக்குள் அதிகம் சந்தோஷித்த பிரிகேடியர், ''ஏம்மா அதுவரை நீ ஏன் ஹாஸ்டலில் தங்கணும்? அங்கே ஏன் தனியாக இருக்கணும்? இங்கே வந்து எங்களுடனே இரேம்மா. அது எங்களை ரொம்ப ரொம்ப சந்தோஷப்படுத்தும்...''

இந்த வேண்டுகோளுக்கு உடனே பதில் சொல்லி விடவில்லை அவள். சிறிதுயோசித்து நிதானமாக அவர் மனம் புண்படாதவகையில் சொன்னாள்.

''எனக்கும் சந்தோஷமாகத்தான் இருக்கும் அப்பா. ஆனால் நான் ஹாஸ்டலிலேயே தங்கலாம்னு நினைக்கிறேன். தனியாக அப்படித் தங்குவது எனக்குள் ஒரு நம்பிக்கையையும், மனோ திடத்தையும் கொடுக்கும்னு தோணுறது. ஆனால் நான் இங்கே தான் தங்கணும்னு நீங்க நினைச்சா அதை மறுக்க நான் இஷ்டப்படலே...''

''நோ... நோ...'' என்று தலையாட்டினார் பிரிகேடியர். ''பெண்களுக்கு ஏராளமான மனோதிடமும், அசட்டுத்தனமில்லாத தைரியமும் அவசியம் தேவை என்று நினைக்கிறவன் நான். மனசால் ஒன்று பட்ட பின் உடம்பால் பிரிந்தால் தான் என்ன...? பிரிவு என்றால் ஆயிரம் மைல் தள்ளியா இருக்கப் போகிறாய்? இதோ பத்து நிமிட டிரைவ். அதனால் நீ ஹாஸ்டலில் தங்குவதில் எனக்கு எந்தவித ஆட்சேபணையும் இல்லையம்மா...'' என்றவர், சற்றுக் களைப்படைந்திருப்பதை உணர்ந்து.

''உள்ளே போய் அர்ஜுன் எழுந்து விட்டானா என்று பார்த்து இன்னொரு டீ குடிக்கலாமாம்மா...?'' என்று கேட்டதும் ''ஓ... போகலாம்ப்பா...'' என்றாள்.

(தொடரும்)

தலைவலி பலவகை உண்டு



சிகிச்சை ஒன்றே ஒன்று!

அனாசின்

இதில் அதிக அளவில் வலி-நிவாரணி அடங்கியுள்ளது

துரித நிவாரணம் அளிக்க, உலகெங்கும் டாக்டர்கள் மிக அதிகமாக சிபாரிசு செய்யும், வலி-நிவாரணி மருந்து அதிக அளவில் கொண்டது—அனாசின்.

தலைவலி, ஜலதோஷம், ஃப்ளூ, முதுகு வலி, தசை வலி, பல் வலி ஆகியவற்றிற்கு நல்ல பலனளிக்கிறது.

அனாசின் மீது மட்டுமே நம்பிக்கை வையுங்கள்.

இப்போது பாதுகாப்பான ஃபாயில் உறையில்.



சக்தி வாய்ந்த, நம்பகமான
மேனர்ஸ்
அனாசின்*

இந்தியாவின் புகழ்பெற்ற வலி-நிவாரணி மருந்து

* Licensed user of T.M. : Geoffrey Manners & Co.Ltd.

GM-1-83 TM

போட்டிக்கதை: 2

ஜோதியில் வித்யாசம் இல்லை!

ரஞ்சனியின், அழகான, சிவந்த முகத்தில் முத்துக்களின்பிரதிநிதிகளாய் வியர்வைத் துளிகள் கூட்டம் போட ஆரம்பித்தன. முகம் சிவந்து, தாடைகளும் பற்களும் இறுகிக் கொண்டன. கீழுதடு பல்வரிசைகளுக்கிடையே அகப்பட்டுக் குங்குமச்சிவப்பில் அவஸ்தைப்பட்டது. வாய் ஒரு பக்கமாய்க் கோணிக் கொள்ள முயன்றபோது ''ம்ம்ம்மா...'' என்ற ஈனமான அழைப்பு அடிவயிற்றிலிருந்து அனிச்சையாய்ப் புறப்பட்டது.

கௌரியம்மாள் மகளை மகா கலக்கத்துடன் பார்த்தாள். வலி! வலி எடுத்துவிட்டது. இது நிஜவலி. நன்றாய்ப் புரிந்தது அவளின் அனுபவம் மிக்க கண்களுக்கு. வயிற்றில் இருக்கும் சின்ன ஜீவனுக்கு அவசரம் பிறந்து விட்டது வெளியுலகக் காற்றைச் சுவாசிக்க!

சாதாரணமாய் கௌரியம்மாளின் வயதுக்கும், பலருக்குப் பிரசவம் பார்த்த அனுபவத்துக்கும் இந்த மாதிரியான பிரசவ வலியைப் பார்த்துக் கலக்கம் ஏற்பட நியாயம் இல்லை.

ஆனாலும்—

இதேமாதிரி இதற்கு முன்பு ஒருமுறை தனது முதல் சிசுவை வயிற்றில் தாங்கி எதிர்பார்ப்பும் ஏக்கமுமாய் ரஞ்சனி காத்திருந்தபோது, கடைசி நிமிடத்தில் குழந்தையும், தாயும் எமனுடன் போராடி, முடிவில் குழந்தையைக் காணிக்கையாய்க் கொடுத்துத்தான் தன்னை மீட்டுக் கொண்டு வர முடிந்தது அவளால். ஒன்றரை வருஷங்களுக்கு முன்பு நடந்த சமாசாரமானாலும் இப்போதும் கூட அது போன நிமிடத்துச் சம்பவம் போல் மனத்தை நெருடிக் கொண்டுதான் இருந்தது.

அந்த நினைவு தந்த அவஸ்தையில், 'மெய்யோ, பொய்யோ' என்றிருந்த நிமிடம் முதலே, நகரின் பெரிய ஆஸ்பத்திரி ஒன்றில் முறையான செக்—அப் ஆரம்பமாயது.

எப்போது வலி எடுக்கிறதுபோலத் தோன்றுகிறதோ, அந்த நொடியே ஆஸ்பத்திரிக்கு அழைத்து வந்துவிடுமாறு, ரஞ்சனியைக் கவனிக்கும் லேடி டாக்டர் மிகக் கண்டிப்பாய்ச் சொல்லியிருந்தார்.

இப்போது ரஞ்சனியின் முகத்தைப் பார்க்கவே கௌரிக்குக் கலக்கமாய் இருந்தது. உடனடியாய், சற்றும் தாமதிக்காமல் ஒரு டாக்ஸி பிடித்து வரவேண்டும். ஹூம். இன்னும் ரமேஷ் வேறு வரவில்லை. அவன் கூடமாட இருந்தால், எத்தனை உதவியாகவும் தெம்பாகவும் இருக்கும்! ரமேஷ் ரஞ்சனியின் தம்பி. வேலைக்குப் போகும்— தோளுக்கு மிஞ்சிய தோழன்!

அவன் கூட இப்போதெல்லாம் முன்பு மாதிரி இருப்பதில்லை... அதுவும்... நாலு நாட்கள் முன்னால் அந்த வீட்டில் நடந்த வாக்கு வாதங்களுக்குப் பிறகு, அவன் அடியோடு மாறித்தான் போய்விட்டான். இப்போதெல்லாம் நேரத்துக்கு வீட்டுக்கு வருவது கூட இல்லை.

ரமேஷ் இன்னும் வீட்டுக்கு வராதது பற்றியோ, சமீபத்தில் வீட்டில் ஏற்பட்ட குழப்பங்களைப் பற்றியோ கவலைப்பட நேரமில்லாதவளாய் மகளை மறுபடியும் திரும்பிப் பார்த்தாள்.

''ஒருநிமிஷம் பொறுத்துக்கோடிம்மா... இதோ எதிர் வீட்டுப் பையனை ஓடிப்போய் டாக்ஸி பிடிச்சுண்டு வந்துடச் சொல்றேன் அரை நொடியிலே...'' என்று கௌரி வயதுக்குப் பொருந்தாத வேகத்துடன் படியிறங்கி அவசரமாய் ஓடினாள்.

அதே நேரத்தில்—

தன் வீடு எக்கச்சக்கமாய் அமர்க்களப்பட்டுக் கொண்டிருப்பது தெரியாமல், ரமேஷ் அந்த விசாலமான பூங்காவின் பசுமைக்கும், வண்ணங்களுக்கும் இடையேமெத்தென்று விரித்திருந்த அரை ஈரப் புல்தரையில் ஆகாயம் பார்த்துப் படுத்திருந்தான்.

அம்மாவின் எதிர்ப்பு, தான் ஏற்கெனவே எதிர்பார்த்த சமாசாரம்தானே! கணவன் இல்லாத நிலையில் எந்தப் பெண்மணியும் தன் மகனாவது தன் சொல்படி கேட்டு, தன் கைக்கு அடங்கி இருக்க வேண்டும் என்று எதிர்பார்ப்பது இயல்புக்கு விரோதம் அல்லவே!


''அம்மா! நான் ஒரு பெண்ணைக் காதலிக்கிறேன்! அந்தப் பொண்ணு நம்ம ஜாதி இல்லை... அவ... ஒரு கிறிஸ்துவப் பொண்ணு...'' என்று சொல்லி அடுத்த நிமிஷம் அவளின் சந்தோஷப்புன்னகையுடன் சம்மதத் தலையாட்டலை முட்டாள்தனமாய் எதிர்பார்த்தான் அவன்.

''இதோ பாருடா.. இந்த வீட்டுல புதுப் பழக்கங்களையெல்லாம் கொண்டுவர முயற்சி செய்யாதே. எவ்வளவு ஆயிரம் பற்றுப் பாத்திரம் தேய்ச்சு, எத்தனை ஆயிரம் துணிகள் துவைச்சு எவ்வளவு கல்யாணச் சமையல்களோடு வெந்து உன்னை ஆளாக்கினேன்னு உனக்கு லிஸ்ட் ஒப்பிச்சு அதுக்குப் பிரதியாய் உன்னை இந்த வீட்ல மடக்கிப் போடறது என்னோட நோக்கமில்லை... உன்னோட அக்காவையும் ஒரு கௌரவமான இடத்தில் குடுத்தாச்சு... இதுக்கு மேல... என் சம்மதத்தோட என்

வேதா கோபாலன்

ஆசீர்வாதத்தோட தான் உன் கல்யாணம் நடக்கணும்னு விருப்பப் பட்டியானு அதுக்குத் தகுந்த மாதிரி நடந்துக்கோ... இல்லே... அம்மாவை எட்டி உதைச்சுட்டு அந்தக் காலோடு வெளியேறித் தான் உன் சுகதுக்கங்கள் நிர்ணயம் பண்ணிக்கணும்னு தீர்மானிச் சாச்சுன்னு... என்கிட்ட அனுமதியே கேட்க வேண்டாம் நீ. சுலபமாய் இந்த வீட்டு வாசலுக்கு வெளியே உன் காரியத்தைச் சாதிக்கலாம்... முன்மாதிரியே என் வயிற்றைக் கழுவிக்கக் கை யிருக்கு...''

மெலிந்து தளர்ந்து நரம்புகள் புடைத்திருந்த அம்மாவின் கை நீண்ட வாசல் இருந்த திசையை நோக்கியிருந்தது. அவனின் சப்த நாடியும், சர்வ நரம்புகளும் அதிர்ந்து அடங்கின.



எப்படியோ! அவன் அவசரப்பட்டுவிட்டானே... அம்மா அவசரப்பட்டுவிட்டாளோ! விஷயம் கைநழுவிய கண்ணாடியாகிவிட்டது. ஆனாலும், அவனுக்கு இன்னும் நிறைய நம்பிக்கை மிச்சமிருந்தது. எப்படியாவது இன்னும் போராடியாவது அவளிடம் விஷயத்தைச் சாதித்துக் கொண்டாக வேண்டும்.

ஸ்டெல்லாவின் சிரித்த முகம் மொழு மொழுவென்று கொழு குழந்தையைப் போல் அவன் மனம் முழுவதையும் எவ்வளவுக்கெவ்வளவு ஆக்கிரமித்துக் கொண்டு பரந்திருக்கிறதோ, அவ்வளவுக்கவ்வளவு அம்மாவின் வயதான கருங்கிய சுருக்கமுகம் சிம்மாசனம் போட்டு உட்கார்ந்திருந்தது. எனவே, கடைசி வரை நம்பிக்கை தளர்வதில்லை என்று தீர்மானித்துக் கொண்டு தெளிவுடன் எழுந்தான்.

டாக்ஸி பிரேக் போடுவதற்கும், முன்னாலேயே கதவைத் திறக்க முயற்சிசெய்து, கதவின் எந்திரத்தனமான எதிர்ப்பைக்கண்டு ''கதவைத்திறந்து விடுப்பா...'' என்று எரிச்சல்பட்டதும் டாக்ஸி டிரைவர் சாந்தமாய் இறங்கிக் கதவைத் திறந்து விட்டான்.

எதிர்ப்பட்ட இரண்டு நர்ஸ்களைப் பார்த்து ''இதோ பாருங்கம்மா... பிரசவ கேஸ்... நோவு எடுத்து நாழியாயிடுத்து... சீக்கிரம் சீக்கிரம் ஒருகை பிடிச்சு உள்ள கூட்டிண்டு போம்மா...'' என்றான் பதற்றத்துடன். பளீரென்ற வெள்ளை உடையில் தேவதையின் புன்னகையுடன் இருந்த அவர்கள் சௌரிக்குச் சற்றே ஆறுதல் தந்தனர்.

மகளின் சங்கடத்தையும் வலியால்துடித்த துடிப்பையும் பார்த்து இன்னமும் அரை மணி நேரத்திற்குள் பனிக்குடம் உடைந்து விடுமாக்கும் என்று நினைத்துக் கொண்டிருந்த



சில்லறைச் சாராயம்!

மதுரையில் உள்ள சாராயக்கடைகள் சிலவற்றில் 25-ரூபாய் சில்லறைகொடுத்தால் 100 மில்லி சாராயம் இலவசமாகத் தருகிறார்கள். கள்ளுக் கடையில் ஒரு லிட்டர் இலவசம்!

—ஜெகவை பால்ராஜ், மதுரை-9.

கௌரியம்மாள், கிட்டத்தட்ட இரண்டரை மணி நேரமாக உட்கார்ந்து கொண்டிருக்கிறாள்.

சட்டென்று டெலிவரி அறையின் தள்ளு கதவைத் தள்ளிக்கொண்டு விரைந்துவந்தாள் நர்ஸ்.

''அம்மா... வந்து... கூட யாரும் ஆம்பிளேங்க வரலையா? உங்க... மகளுக்கு ரத்தம் ஏத்த வேண்டியிருக்கும்... கொஞ்சம்... கொஞ்சம்... வீக்காய் இருக்காங்க... டெலிவரி ஆனதும் ரத்த சேதம் நிறைய இருக்கும்னு தோணுதாம்... அதனலெ... டெலிவரி ஆன உடனேயே ரத்தம் ஏத்த வேண்டியிருக்கும்...''

''என்... உடம்புலேர்ந்து வேணுமானு எத்தனை ரத்தம் வேணும்னாலும் எடுத்து என் குழந்தைக்குச் செலுத்துங்க...'' பரிதாபமாய்க் கேட்டாள்.

''வேணும்மா. உங்க ரத்தம் உங்க மகளுக்குப் பொருந்தினாலும் கூட எடுக்க முடியாது. நீங்களே ரொம்ப பலவீனமாயிருக்கீங்க... வயசானவங்க வேறே! நான் வேற ஏற்பாடு செய்ய முயற்சி பண்றேன்'' என்றாள் கனிவுடன்.

''நான் என்ன செய்யணும்னு தயவுசெய்து சொல்லும்மா...'' என்றாள்.

அத்தனை அவசரத்திலும் ஒரு சின்னஞ்சிறு புன்னகையுடன் அவளை நிமிர்ந்து பார்த்தாள் அந்த நர்ஸ்.

''உங்களால் முடிஞ்ச ஒண்ணைச் சொல்றேன்...செய்யுங்க...பிரார்த்தனை!'' சொல்லிவிட்டுத்தன்கடமையைத் தொடர மறைந்துவிட்டாள் அந்த நர்ஸ்.

என்றைக்கோ அவள் கருமாரியம்மனுக்கு வேண்டிக் கொண்டது நினைவுக்கு வந்தது. 'தாயே என் மகளுக்கு இந்தப் பிரசவமாவது நல்லபடி முடிந்து தாயும், சேயும் நலமாய் வீடு திரும்ப வேண்டும். உன் கோவிலில் நூற்றி ஒரு விளக்குகள் ஏற்றி வைக்கிறேன்'' என்றல்லவா நேர்ந்து கொண்டாள். அம்பாள் தன் காணிக்கையை மறைமுகமாய் இந்த இளம் பெண் மூலமாகக் கேட்கிறாளோ?

சக்கர நாற்காலியில் யாரோ ஒரு நோயாளியை வைத்துத் தள்ளிக் கொண்டு லிஃப்டை நோக்கி நடந்த ஆஸ்பத்திரி சிப்பந்தியை அணுகினாள். ''ஏம்ப்பா... இங்கே அம்பாள் கோயில் ஏதாவது பக்கத்தில் இருக்காப்பா?'' பொறுமையாகக் கேட்டாலும் குரல் படபடத்தது.

அவன் பொங்கி வந்த சிரிப்பை அடக்கிக் கொள்ளப் பிரயத்தனப் பட்டவன் போல் வாயைப் பொத்திக் கொண்டான். ''இங்கே ஏதுங்க மாரியம்மன் கோயில்? இது கிறிஸ்துவ ஆஸ்பத்திரி... பக்கத்துல சர்ச்சுதான் இருக்கு... வேணும்னா மாரிக்குப் பதில் மேரியை நமஸ்காரம் பண்ணிக்குங்க...''

அவன் சொன்னதென்னவோ கிண்டலுக்குத்தான். ஆனால் அதுவே அவளின் மனத்தில் மாபெரும் வெளிச்சம் ஒன்றைக் காட்டிவிட்டது. இப்போது இருக்கும் அவ

சரத்துக்கு, ஏதாவது ஒரு தெய்வத்திடம் உடனடியாக மன்றாடியே தீரவேண்டும். மதங்களும், பிரச்சினைகளும் மனிதர்களுக்கு வேண்டுமானால் இருக்கலாம்! தெய்வங்களுக்குள் ஏது வேறுபாடு!

நினைத்த மாத்திரத்தில், முழு மனத்துடன் தேவாலயத்துக்குச் சென்று மிக சிரத்தையாய் மெழுகு வர்த்திகள் ஏற்றி, அந்த மெழுகைப் போலவே மனமுருக வேண்டிக் கொண்டு, சுற்றியிருந்த அத்தனை பேர்களின் ஆச்சர்யமான பார்வைகளையும் கடந்து நிதானமாய் வெளியேறிய போது, மனத்தில் எள்ளளவும் சந்தேகம் இல்லாமல் முழுமையாய் நம்பிக்கை பூத்துக் குலுங்குவது கௌரிக்கே புரிந்தது.

ஆவல் ததும்பும் மனத்தை அடக்கும் பொருட்டு நிதானமாய் — மிக நிதானமாய்ப் படிகளில் ஏறி மாடியை அடைந்த போது—

அந்தச் செய்தி அவன் மூலம் அவளுக்குக் கிடைத்தது! ரமேஷ்! இவன் எப்போது வந்தான்!

''கங்ராஜுலேஷன்ஸ் அம்மா! கூச்சப்படாமல் இப்படிக் கொண்டா கையை. நீ பாட்டியாயிட்டே, நான் மாமாவாக்கும்! உனக்குப் பேரன் பிறந்திருக்கான்... ரஞ்சனி அபாயக் கட்டத்தைத் தாண்டிட்டாளாம்..'' உண்மையான மகிழ்ச்சியுடன் இருந்தான் அவன்.

''நீ... நீ... எப்படி இங்கே வந்தே!'' அதீத சந்தோஷம் தாங்காமல் பெஞ்சின் மேல் சரிந்து அமர்ந்த தாயைக் கைத்தாங்கலாய்ப் பிடித்து உட்கார வைத்த ரமேஷ் சிரித்தவாறு பதில் சொன்னான்:

''வீடு பூட்டியிருக்கவே, அக்கம்பக்கத்தில் விசாரிச்சச் செய்தி தெரிஞ்சண்டு வந்தேன்!''

''நான்... சர்ச்சில் மெழுகுவர்த்தி ஏற்றி வைக்கிறதுக்காகப் போயிருந்தேன்... அதுலதான் நீ வர்ற போது நான் இங்கே இல்லே!''

தன் காதில் விழுந்த செய்தி உண்மையில் ஐயோ என்ற பிரமிப்புடன் தாயாரை நிமிர்ந்து பார்த்தான் ரமேஷ். அம்மாவா?

''நிஜமாய்த்தான்டா, மனுஷனுக்குத் தேவையும், அவசரமும் வர்ற போதுதான் தெய்வங்களோட அவசியமே புரியறது!'' என்றவள், தான் சர்ச்சில் மெழுகுவர்த்தி ஏற்றி வைத்து விட்டு வந்ததன் காரணத்தையும், அவசியத்தையும் சிறிதுசிறிதாய் விளக்கினாள்.

''அடேடே... வந்துட்டீங்களாம்மா..! உங்களுக்குப் பேரன் பிறந்த செய்தியைச் சொல்லத்தான் ஓடி வந்தேன். உங்களைக் காணோம்! இவர்தான் நின்னுக்கிட்டு இருந்தாரு... நீங்க எங்கேம்மா போயிட்டீங்க சமயத்துக்கு?'' முதல் முதலில் உதவி செய்த இரண்டு நர்ஸ்களில் ஒருத்தி!

டெட்ராயிட் என்னும் நகரில் ஒரு பெண் தன்னுடைய அறையில் படுத்திருந்தாள். நள்ளிரவில் அறையில் ஏதோ சப்தத்தைக் கேட்டு விழித்துக் கொண்டாள். அந்த அறைக்குள் ஒரு திருடன் நிற்பதைக் கண்டு 'ஓ'வென்று அலறினாள். அந்த ஓல ஒலி காதையடைக்கவே திருடன் மூர்ச்சையடைந்து விழுந்து விட்டான்!

தகவல்: ஜா.ரவி.

ஆதாரம்: கதை இன்பம்.



அவள் கேள்விக்குப் பதில் சொல்வதைக் காட்டிலும் முக்கியமாய்க் கேட்க வேண்டியதைக்கேட்டாள் கௌரி. ''நான் சர்ச்சுக்குப் போனேன் வேண்டிக்க...அது இருக்கட்டும்.. உன்னோடு இன்னொரு 'நர்ஸ் இருந்தாங்களே அவங்க எங்கே... எனக்கு முழு தைரியமும், நம்பிக்கையும் கிடைச்சதே அந்தப்பெண்ணோட வார்த்தைகளால்தானே... அந்த நர்ஸ்... வேலை நேரம் முடிஞ்சு கிளம்பிப் போயிட்டாங்களா என்ன...?''

''ஓ... நர்ஸ் ஸ்டெல்லாவைக் கேட்கறீங்களா? அவங்க உள்ளே பிஸியாய் இருக்காங்கம்மா! நீங்க செய்த புண்ணியமோ, உங்க மகளோட அதிருஷ்டமோ, அந்த நர்ஸ் ஸ்டெல்லாவின் ரத்தம் உங்க மகளோட பிளட் குரூப்போட பொருந்திடுத்து. அவங்கதான் உங்க மகளுக்கு ரத்தம்குடுத்துக் காப்பாத்தினது. நீங்க சர்ச்சுக்குப் போய் வேண்டிக்கிட்டதாலோ என்னவோ இறைவன் ஒரு கிறிஸ்துவப் பெண்ணை விட்டே உங்க மகளைக் காப்பாத்திட்டாரு!''

கௌரியம்மாளுக்கு ஏதோ புரிவதுபோல் இருந்தது. ''ரமேஷ்... அவசரப்பட்டு உன் ஆசைக்குத் தடை போட்டுட்டேன்! நைல் நதியானாலும் கங்கை நதியானாலும் அதுல ஓடறது தண்ணீர்தான். ஸ்டெல்லாவானாலும், ரஞ்சனியானாலும் அவங்க உடம்புல ஒரே ரத்தம் தான் ஓடறது! இதைஒரே சாயந்தரத்துல எனக்கு இறைவன் புரிய வைச்சுட்டான்! மாரியம்மனுக்கு ஏத்தற தாய் வேண்டிக்கிட்ட விளக்கை, மேரியம்மா முன்னாடியும் மெழுகுவர்த்தி வடிவுல ஏத்தலாம்! அகல் வடிவமானாலும் மெழுகுவர்த்தியானாலும் ஜோதியோட வடிவம் ஒண்ணுதான்!'' என்றபோது கௌரிக்குத் தொண்டை அடைத்தது. ரமேஷுக்கும்தான்! ஆம்! அவன் காதலி ஸ்டெல்லாதான் அவன் அக்காவுக்கு உயிரூட்டியவள் என்பதையும் அம்மா அறிந்தால்...?


உள்ள மதிப்புக்கு மேல் ஒற்றை ரூபாய் கூட
தந்துவிட மாட்டாள் லலிதா...

அதனால் தான் அவள் ஸர்ஃப் வாங்குகிறாள்.

''ஆமா. ஸர்ஃப் தான் எனக்கு. அதுக்குக் கொடுக்கற பணம் முழுக்க முழுக்க மதிப்பு. அதுக்குக் குறைஞ்சு போவானேன் நான்—அதுவும் இந்த நாளிலே போய்.''

இருந்தாலும், மலிவு வாஷிங் பவுடர் வாங்கினீங்கன்னு பணமிச்சம் இருக்கத்தானே இருக்கும்?

''கேலிக்கூத்து! மலிஞ்ச சரக்கு வாங்கறதுக்கும் மதிப்புள்ள பண்டம் வாங்கறதுக்கும் ஏகப்பட்ட வித்தியாசம் உண்டே.''

ஒத்துக்கறேம். மலிவுப் பவுடர்களைவிட அதிகமா அப்படி என்ன மதிப்பு இருக்கு ஸர்ஃப்லே?

''அப்படிக் கேளுங்க. மலிவுப் பவுடரோட 1 முழுக் கிலோ பைக்குள்ளே இருக்கற அதே அளவுப் பவுடர் ஸர்ஃப் ½ கிலோ பேக்கிலே இருக்கு.''

ரெண்டு மடங்கா? அதென்னமா?

''அதுதானுங்க ஸர்ஃப்! ஸர்ஃப் ½ கிலோ பேக்குலே உள்ள பவுடரை எடுத்து, மலிவுப் பவுடரோட காலியான 1 கிலோ பைக்குள் அப்படியே கொட்டினா கணக்கா பை ரொம்பிடும்.''

அப்படியேதான் இருந்தாலும்...

''இருங்க. எடை பார்க்கப்போனா, ஸர்ஃப் மதிப்பு ரொம்ப ரொம்ப அதிகம்தான். ஸர்ஃப் மாதிரி வெளுப்பை எந்த மலிவுப் பவுடரும் தந்துட முடியாது. கலர்த் துணிகளோட பளபளப்பை ஸர்ஃப் மாதிரி எதுவுமே காப்பாத்தாது. என்னமா வெளுக்குது ஸர்ஃப், எங்க வீட்டுத் துணிகள் ஒண்ணொண்ணையும் புதுசுபோல சோபிக்க வைக்குது சலவைக்கு சலவை.''

நியாயம் இருக்கு நீங்க சொல்றதுலே...

''சொல்ல இன்னும் எவ்வளவோ இருக்கு. கடூரமான மலிவு பவுடருங்க சருமத்துக்கே கேடு. ஸர்ஃப் அப்படி இல்லே, அலசற என் கைகளைத் துளிக்கூட பாதிக்காத சுகமான பவுடர். அனுபவத்துலே சொல்றேன்.''

புரியுது, நல்ல மதிப்புன்னு நீங்க எதைக் கண்டு வாங்கறீங்கன்னு தெரியுது...

''ஆமா! சொல்ப ரூபாய்களை மிச்சம் புடிக்கறதுக்காக மாசாமாசம் இவ்வளவு அனுகூலங்களையும் கோட்டைவிட நான் தயாராயில்லே. கஞ்சத்தனமா சில்லறை சேர்க்கறதுக்கும் செழிப்பா குடுத்தனம் நடத்தறதுக்கும் வித்தியாசம் என்ன, கொஞ்சாஞ்சமா!''



எடைபோட்டு மதிப்பிட்டால் புரியும்: ஸர்ஃப் வாங்குவதே புத்திசாலித்தனம்.

LINTAS SU 320 20 25 TM

இந்துஸ்தான் லீவரின் தரமான தயாரிப்பு



வைரத்தோடு போடுவார்களா?

கோவை அனுராதா

"சிவராமா... உனக்கே இது நல்லா இல்லையடா. ஜானகி எவ்வளவு அழகா இருக்கா. வீணையைக் கையிலெடுத்தா அசல் சரஸ்வதியே நேரிலே வந்த மாதிரி இருக்கு. இவளைப் போயி வேண்டாம்னு சொல்லிட்டியே"

பஸ்ஸில் ஜன்னலோரம் உட்கார்ந்து கொண்டு, எதையோ வெறித்துப் பார்த்துக் கொண்டு வந்த சிவராமனின் கற்பனையைக் கலைத்தாள் சாரதா. அவன் அக்கா.

"அக்கா... நீ பேசாமல் இரு... பொம்பளைங்க மத்தியிலே நீ எப்படியோ தப்பிப் பொறந்துட்டே. நம்ம வீட்டுக்கு வரப் போற மருமகள் நிச்சயமா வைரத்தோடு போட்டுக்கிட்டுத்தான் வரணும். அதுதான் அப்பா, அம்மா, ஏன் என்னோட ஆசையும் கூட. ஜானகி அழகா இருந்தால் மட்டும் போதுமா?"

"ஏன்டா... நீ சின்னப்பையன்... இந்தக் காலத்துப் பசங்க வரதட்சணை, சீர் வாங்கக் கூடாதுன்னு, அப்படி இப்படிப் பேசி சங்கமெல்லாம் நடத்தறாங்க... நீ என்னடான்னா கிழவன் மாதிரி பேசிப பிடிவாதம் பிடிக்கறியே?"

"நான் ஒண்ணும் பிடிவாதம் பிடிக்கல்லே. என்னோட அண்ணி ரெண்டு பேரும் வைரத்தோடு போட்டுக்கிட்டு வந்திருக்காங்க. நான் அண்ணன்களைவிட நிறைய சம்பாதிக்கிறேன். நானும் அந்த அளவு அந்தஸ்தோட எதிர்பார்க்கறது என்னக்கா தப்பு?" — அவன் தன் எதிர்பார்ப்புக்கு நியாயம் கற்பித்தான்.

"எப்படியோ போடா... நான் கல்யாணம் ஆகி, வேற வீட்டுக்குப் போனவ. என் பேச்சு இந்த வீட்டுல எடுபடாது" என்று வறட்டுப் பிடிவாதம் செய்யும் தம்பியிடமிருந்து ஒதுங்கினாள் சாரதா.

சிவராமன் பார்ப்பது இது எட்டாவது பெண். தற்செயலாக ஊருக்கு வந்திருக்கும் அக்கா சாரதாவையும் பெண் பார்க்க அழைத்து வந்திருந்தான். சற்று முற்போக்கு எண்ணம்கொண்ட சாரதா, 'பெண் அழகாக இருக்கிறாள்..வைரத்தோட்டைப்பற்றி கவலை படாதீர்கள்' என்று சொல்லிப் பார்த்தாள். ஆனால் யாரும் மசியவில்லை. வழக்கம் போல இந்த இடமும் வைரத்தோடு போட முடியாத காரணத்தினால் தகையாமல் போனது. சிவராமன் அதற்காகக் கவலைப்பட்டதாகத் தெரியவில்லை. பார்க்கும் பெண்களின் கண் வீச்சு எல்லாம் அவனைத் தொட முடியாத அளவிற்கு மனத்தை வைரமாக வைத்திருந்தான்.

ஊருக்குப் புறப்படும் சமயம், ஆட்டோவில் ஏறப்போன சாரதா தம்பியைத் தனியே கூப்பிட்டாள்.

"சிவா... உனக்கு இப்பவே வயது முப்பதாச்சு. பிடிவாதமா வைரத்தோட்டைக் கேட்டுண்டிருந்தா, அப்புறம் உனக்கு வைரக் கடுக்கன் போடற அளவுக்கு வயசாயிடும். புத்திசாலித்தனமா நடந்துக்கோ..." ஊதற சங்கை ஊதி வைப்போம் என்று சொல்லி விட்டுப் போய் விட்டாள் அவள்.

ஆனால் சிவராமன் ஏமாந்து விடவில்லை. அவன் மனத்துப் படியே ஆறு மாசத்தில் ஒரு வரன் பிடித்து விட்டான். பெண் எம். ஏ. படித்தவள், சந்தன கலர், கொள்ளை அழகு. எல்லாவற்றிற்கும் மேலாக ஒரு ஜதைகேட்டதற்கு, இரண்டு ஜதையாக வைரத்தோடு. ஒரே பெண் என்பதால் சிவராமனின் மாமனார் தங்க கவசம் போடாத குறையாக நகைகளைச் சொரிந்து அனுப்பியிருந்தார்.

கல்யாணப் பந்தலில் அக்கா சாரதாவை அலட்சியமாகப் பார்த்தான் சிவராமன். என் சாமர்த்தியத்தைப் பார் என்பது போல் இருந்தது அது.

முதல் இரவு. தன் நெடுநாளைய கனவுகள் நிறைவேறும் நேரத்தை எதிர்பார்த்துக் காத்திருந்தான் சிவராமன். ஜனனி... அவன்

திறமைக்குக் கண் இல்லை!

'ஹொனொலுலு' நகர ஓட்டல் ஒன்றில் சர்வராகப் பணிபுரிபவர் 'ஷெரி நெல்சன்' என்றபெண். இவர் ஒரு குருடர்! இருப்பினும், ஊன்றும் தடிகூட இன்றி இவர் எல்லோருக்கும் மிக வேகமாக 'சர்வ்' செய்கிறார்! இவர், கண் தெரியா விட்டாலும் சாப்பிடுபவர் தட்டிலிருந்து எழும் 'ஸ்பூன்' ஓசையைக் கொண்டே, தட்டு காலியாகி விட்டது என்று தெரிந்து கொள்கிறார்! அதுபோல், டம்ளரில் நீர் ஊற்றும் போது, நீரின் ஓசையைக் கொண்டே டம்ளர் நிரம்பி விட்டதா என்பதை அறிந்து கொள்கிறார்! இவர் வேகமாக சர்வ் செய்வதை பார்ப்பவர்கள், இவர் குருடர் என்றே நம்ப மாட்டார்கள்!

—சம்பத்குமாரி.

ஆதாரம்: 'காரவான்.'

ஆசை மனைவி... வைரத்தோடு நாயகி... அன்ன நடை போட்டுப் பாலுடன் உள்ளே வந்தாள்.

பால் டம்ளரை அங்குள்ள மேஜையின் மேல் வைத்து, அங்கிருக்கும் கத்தியை எடுத்தாள். ஆப்பிள் ஒன்றை நறுக்கினாள்.

கட்டிலில் அமர்ந்து அவளைக் கவனித்துக் கொண்டிருந்த சிவராமன் பொறுமையை இழந்தான்.

''ஜனனி... ஆப்பிளுக்கு இப்போது என்ன அவசரம்...? வாயேன்'' கொஞ்சும் குரலில் அழைத்தான்.

ஜனனி ஆப்பிள் நறுக்கிக் கொண்டிருந்தாள்.

''உன் கன்னம் தான் எனக்கு ஆப்பிள்... இதழ்தான் திராட்சை... வாயேன் ஜனனி.''

இன்னும் என்னென்னவோ சினிமா வசனங்களைப் பேசினான்.

எதையும் லட்சியம் செய்யாமல் ஆப்பிள் நறுக்குவதிலேயே கண்ணாக இருந்தாள் ஜனனி.

சிவராமனுக்குக் கோபம் பொத்துக் கொண்டு வந்தது. 'பணக்காரி என்ற திமிர், முதல் இரவன்றே கணவனை மதிக்கவில்லையே' என்று நினைத்து அருகில் சென்று தோளைப் பற்றி உலுக்கினான்.

''ஜனனி... எத்தனை முறை கூப்பிட்டேன். உனக்கு இவ்வளவு அலட்சியமா?'' கோபத்தில் பக்கத்து அறைக்குக் கேட்பது போல இரைந்தான்.

ஜனனி திரும்பினாள். கைகள் நடுங்க... அவள் கண்களில் கண்ணீர்.

''அத்தான்! என்னை மன்னித்து விடுங்கள். எனக்குக் காது சரியாகக் கேட்காது. இந்த உண்மையை மறைத்து அப்பா இந்தக் கல்யாணத்தைப் பண்ணிவிட்டார் போல் இருக்கிறது.'' சிவராமனின் கால்களில் விழுந்தாள் அவள்.

ஜனனியின் காதுகளில், சிவராமன் நீண்ட நாட்களாக எதிர்பார்த்த வைரத்தோடு கண்களைப் பறித்துக் கொண்டிருந்தது!





கே. ஆர். விஜயா—சிவாஜிகணேசன்

எத்தனை முறை பார்த்தாலும் அலுக்காத காட்சிகள்: சுருள் குழலில் மல்லிகைச்சரம் அசைந்தாட மோகனப் புன்னகையும், காந்தக் கண்களும் மொழி பேச... இந்த அழகு பிம்பத்தை ரசனையும் பாசமும் கலந்த பார்வையால் சிவாஜி அரவணைக்க... குடும்பப் பாங்கான காட்சி.

ஆர். சண்முகம், பாண்டிச்சேரி

எஸ். எஸ். ஆர்.-விஜயகுமாரி

நிஜ வாழ்வில் கணவன் மனைவியாய் இருந்தாலும் ஒவ்வொரு படத்திலும் புதிதாய்க் காதலிப்பவர்கள் போல் இயற்கையான உணர்வுகளைக் காட்டி, தென்றுதமிழ் வசனங்களை அழகாய் உச்சரித்தவர்கள்.

க. இராசாமணி, ஸ்ரீவில்லிப்புத்தூர்

ரஜினி—ஸ்ரீதேவி

ஆண்மையின் முரட்டுத் தனத்தையும், வேகத்தையும் வெளிப்படுத்தும் ரஜினி. பெண்மையின் மென்மையாய், பூப்போல் சிரித்து, அகலக் கண்களில் பிரேமையைத் தேக்கும் ஸ்ரீதேவி. எதிரெதிர் துருவங்கள் தானே ஒன்றையொன்று ஈர்க்கும்.

ஆர். கிறிஸ்டிகு, மதுரை-9



போதும் கண்டேன். உருவத்திலும் நடிப்பிலும் ஒத்துப் போகும் ஜோடி.

ச. கொற்கைநிதி, தஞ்சை-1

தங்கவேலு—எம். சரோஜா

இந்த ஜோடியின் சரசத்தில் திகழும் இயல்பான நிகழ்ச்சிகள் நம்மை குலுங்கக்குலுங்கச் சிரிக்க வைத்தவை. இன்றுவரை இவர்களைப் போல் புகழ் பெற்றவர் யாரும் இல்லை.

ரமணி ரங்கநாதன், சென்னை-106

சிவாஜி—பத்மினி

இந்த நூற்றாண்டின் தமிழகக் காதலை
கல்வெட்டுக்குப் பதிலாக
செலுலாய்டு ஃபிலிமில் பதித்த
திரையுலக மார்க்கண்டேயர்கள்

வி. எம். திருமலைசாமி, சென்னை-41.

ஜெமினி கணேசன்—சாவித்திரி

காதலுக்குப் புது மெருகு கொடுத்து.

திலீப்குமார்—மீனாகுமாரி

காதலின் கனிவும், களிப்பும், சோகமும் தீவிரமும், எல்லாம் கலந்து நம்மை













ஒரு புதிய நவினமான பாணியை உருவாக்கி, கிளுகிளுப்பு ஏற்படுத்தியவர்கள்.
எஸ். வத்லலா, மன்னார்குடி-1.

பாண்டியன்—ரேவதி

பாத்திரத்தை உணர்ந்து இயல்பாக நடித்து, இன்றைய திரை உலகில் சகாப்தம் படைத்து வரும் இளைய, இனிய ஜோடி.
சி. ராஜசேகரன், சேலம்-7,

நாகேஸ்வர ராவ்—சாவித்திரி

உணர்ச்சிகளைத் தத்ரூபமாகக் காட்டி, காதல் காட்சிகளில் நம்மைக் குழையச் செய்து, சோகக் காட்சிகளில் நெஞ்சை உலுக்கிய இந்த ஜோடியின் உயரத்தை எட்டிப் பிடிக்க இது நாள் வரை ஒருவரும் தோன்றவில்லை.
அ. சம்பத், தஞ்சாவூர்-9.



சஞ்சீவ்குமார்—ஷர்மிளா டாகூர்

பிரியும் போதும், கூடும் போதும் தங்கள் முகபாவங்களால் உணர்ச்சிகளைப் பரிமாறிக் கொள்ளும் ஆற்றலைச் சமமாகப் பெற்றவர்கள். இவர்கள் இணைந்து நடித்த பல படங்கள் வெற்றி கண்டன..
ஜெனி கிறிஸ்டி, கன்னியாகுமரி

ஏ. வி. எம். ராஜன்—புஷ்பலதா

காதலித்து மணந்து கொண்டது முதல் இதுவரை உதாரண திரையுலக ஜோடியாக இணைபிரியா வாழ்க்கை நடத்தும் ஜோடி இந்த ஜோடிதான்.
சித்திரப்ரியா' பெங்களூர்-53

நாகேஷ்—மனோரமா

இந்த நகைச்சுவை ஜோடி நிலைத்திருந்தால் தரமான நகைச்சுவையைத் திரையுலகம் இழந்திருக்காது என்பதை யாரும் மறுக்க மாட்டார்கள்.
ரேவதி சேதுராமன், நெய்வேலி-1

ஸ்ரீகாந்த்—லக்ஷ்மி

சில நேரங்களில் சில மனிதர்களில் கல்வியிற் சிறந்த அறிவு ஜீவிகளாக நடித்தபோது இருந்த இயற்கைத் தன்மையை 'இக்கற்ற பார்வதியில்' பாமர வேடத்தில் நடித்த

மகிழ்வித்த திலிப்குமார் — மீனு குமாரி ஜோடிக்கு நிகர் இல்லை.
வி. சாரதா, வடக்கு பரூர்

என். எஸ். கிருஷ்ணன்—டி. ஏ. மதுரம்

130 படங்களில் ஜோடியாக நடித்துச் சாதனை ஏற்படுத்தியிருக்கும் கலைவாணர் என். எஸ். கே.யும் டி. ஏ. மதுரமும் அந்த 130-க்குப் பிறகும் சலிப்பூட்டவில்லை என்பதே சாதனை.
ஜி. லலிதா, சென்னை-83







சுகாசினி—சந்திரசேகர்

வெறியூட்டும் நடனங்கள் ஆடி, செயற்கை வசனங்கள் பேசாமல் அமைதியான நீரோடையைப் போல் ஆழ்ந்த, தெளிந்த காதலை வெளிப்படுத்தும் சுகாசினி—சந்திரசேகர் ஜோடி.
வி. கீதா, பொறையார் (தஞ்சை மா. வ.)

**எம். கே. தியாகராஜ பாகவதர்—
எம். ஆர். சந்தானலக்ஷ்மி**

'Made for each other' என்றால் இந்த ஜோடிதான். வயதிலும் சரி, தோற்றத்திலும் சரி. அந்தக் காலத்திலேயே பாகவதர் சந்தானலக்ஷ்மியை ஒரு குழந்தையைத் தூக்குவது போல் தூக்கினார். ஆனால், அதில் விரசம் இல்லை. காதல் நயம்தான் இருந்தது.
என். சீதாராமன், தஞ்சாவூர்

கார்த்திக்—ராதா

திரைக்கதை என்பதையே மறந்து அலைகள் ஓய்வதில்லை படத்தில் லயித்துப் போய் விட்டேன். அந்த அற்புதத்தை இவர்கள் மீண்டும் நிகழ்த்த முடியாமல் போனது துரதிர்ஷ்டமே.
ஆர். லலிதா, ராஜபாளையம்

கமல்—ஸ்ரீதேவி

காதலுக்கு அதிகார பூர்வமாய் இலக்கணம் வகுக்கலாம் இவர்கள் நடிப்பைப் பார்த்து. இளமை, இனிமை, புதுமை, கவர்ச்சி, ஊடல், கிளுகிளுப்பு – எல்லாம் ஒரு சேரக் கிடைக்கும்.
டி. ராஜேந்திரன், சென்னை-71

எம். ஜி. ஆர்.—சரோஜாதேவி

கீச்சுக் குரலில் சரோஜாதேவி செல்லமாக ஊடுவதும், எம். ஜி. ஆர். அவரைச் சீண்டுவதும்... ரசமான காட்சிகள் பலப்பல. இப்போது நடிக்காவிட்டாலும் – நெஞ்சில் நிறைந்துள்ள ஜோடி.
எஸ். ராஜேஸ்வரி, பம்பாய்-24

சிவாஜிகணேசன்—சாவித்திரி

வசனங்களைச் சரளமாகவும் தெளிவாகவும் உச்சரிப்பதிலும் பாத்திரங்களுக்கு உயிரூட்டி அவற்றை மனத்தில் நீங்கா இடம் பெறச் செய்வதிலும் வல்லவர்கள் இவர்கள். உண்மையான நடிப்பு என்பதைத் திரையுலகம் அறியக் காரணமாய் இருந்தவர்கள் இவர்கள்தான்.
ஹேமலதா, மதன், ஜம்ஷெட்பூர்-8

ராகமாலிகா வழங்கும் பட்டுப் புடவையைக் குலுக்கல் முறையில் பரிசாகப் பெறும் அதிர்ஷ்டசாலி:

**வி. சாரதா,
லக்ஷ்மி தீப்தி,
நார்த் பரூர்,
கேரளா-683 513.**

வேங்கை வனம்

கோ.வி.மணிசேகரன்

அத்தியாயம் 20

சமாதானமும் சபதமும்

நீண்ட வேல்களையும் ஈட்டிகளையும் வில்களையும் கொண்ட வீரர்களுடன் தீப்பந்தங்கள் சகிதமாக இறங்கி விறுவிறுவென்று நடந்து செல்கிறான் வேங்கைவனத்து உப சேனாதிபதி ராஜஸிங்கன்.

அந்தச் சுரங்கம் இருந்தது அதுவரை யாருக்குத் தெரியும்? அது எவ்வளவு தூரத்துக்கு நீளுகிறது; எங்கு போய் முடிகிறது என்கிற உண்மைதான் எவர் அறிவார்?

முன்னே சென்ற பாண்டிய வீரர்களுக்குச் சிலையின் பளு தாங்க முடியவில்லை. காற்றின்மையால் புழுக்கத்தின் காரணமாக வியர்த்துக் கொட்டியது. மூச்சு வாங்கத் தூக்கிச் செல்கிற போது, ஏதோ வெளிச்சம் பின்புறமாகத் தொடர்வதைக் கண்டு சிலையைத் தொப்பென்று கீழே போட்டு ஓட்டம் பிடிக்க முயன்றனர்.

புரவித் தளபதி இளங்கோவேளான் மூர்க்கமாக அவர்களைத் தடுத்து நிறுத்தி, சிலையைத் தூக்கிக் கொண்டு வேகமாக நடவுங்கள் என்று கட்டளையிட்டதோடு அவர்களை வாளையுருவியும் பயமுறுத்தினான்.

வேறு வழியின்றிப் போகிற உயிர் எவ்வாறு போனால் என்ன என்று கடமையில் மூழ்குகிற போது...

விர், விர் விர் ரென்று அம்புகளும், ஈட்டிகளும்,வேல்களும் ஒன்றன்பின் ஒன்றாகப் பாய்ந்து பாய்ந்து சரமாரியாக வருகின்றன.

தீப்பந்தங்களும் கண்களுக்குத் தெரியுமளவுக்கு அருகித்து விட்டன.

சிலையை நிறுத்தி அதன் பின்புறமாகப் பதுங்கித் தன்னைப் பாதுகாத்துக் கொண்ட இளங்கோவேளான் தப்பினானேயொழிய, ஏனைய பத்து வீரர்களும் அம்புகளாலும், ஈட்டி முனைகளாலும் பரலோகம் போய்ச் சேர்ந்து விட்டார்கள்.

தீப்பந்தங்களுடன் அருகே வந்த கானப்பேர் உபசேனாதிபதி ராஜஸிங்கனைக் கண்டதும் வாளையுருவிக் கொண்டான் இளங்கோவேளான்.

ராஜஸிங்கன் ஏளனமாகக் கெக்கலி கொட்டிச் சிரிக்கிறான்.

''உமது வீரத்தை நான் பழுது சொல்லவில்லை. வாளை உறையிலிடுங்கள். வீணில் உயிரைத் துறக்க வேண்டாம். ஒருகால் எங்கள் மன்னர் உயிர்ப் பிச்சையும் அளிக்கலாம். மதுரை நோக்கி செல்கிற வாய்ப்பும் கிடைக்கலாம்.''

அந்தச் சின்னச் சுரங்கத்தில் தீப்பந்தங்களின் புகை சூழ்ந்து கொண்டது.

''வாளையும், குறுவாளையும் எடுத்துக்கீழே வைக்கலாமே உபசேனாதிபதி?''

இளங்கோவேளான் வேறு மார்க்கமின்றிச் சொன்ன வண்ணம் செய்கிறான்.

''காளிங்கன் எங்கே?''

''அவர் முன்னதாகவே தப்பியோடி விட்டார்!''

உடனே தனது வீரர்களை நோக்கிய ராஜஸிங்கன், ''உங்களில் பாதி பேர் சுரங்கத்தைப் பற்றிச் செல்லுங்கள். எங்கு முடிகிறதோ அந்தச் சமதளத்துக்கு மேலே வந்ததும் தேடிப் பாருங்கள். முடிந்தால் உயிருடன்



பிடியுங்கள். முடியவில்லையென்றால் பிணமாக்கியாவது கொண்டு வாருங்கள். வருகிறபோது சுரங்கத்தைப் பயன்படுத்த வேண்டாம். கோட்டை வாயிலுள் நுழைந்து வரலாம்;'' என்று கத்துகிறான். அவனது வெறி இன்னமும் அடங்கவில்லை.

உத்தரவை ஏற்று வீரர்கள் தீப்பந்தங்களுடன் விரைகிறார்கள்.

இந்தச் சிலையைத் தூக்கிவாருங்கள். பிறகு வேறு ஆட்களையனுப்பி இந்தப் பிணங்களை அப்புறப்படுத்தலாம்'' என்று உத்தரவிடுகிறான் ராஜசிங்கன்.

சிலையைத் தொட வீரர்கள் தயங்குகிறார்கள்.

''என்ன தயக்கம்?''

ஒரு வீரன் சொன்னான்: ''உபதளபதி. மன்னிக்க வேண்டும். இது நமது மகாராணியார் திருவுடல். நாங்கள் இதனைத் தொடுவது காஸப்பரை அவமானப்படுத்துவதாகும்.''

இளங்கோவேளான் அயர்ந்து போனான்.

ராஜசிங்கனும் தனது வீரர்களைப் பாராட்டியவாறு, இளங்கோ வேளானை முன்னே செல்லச் செய்து, அவனது வாளையும் குறுவாளையும் ஒரு வீரனிடம் எடுத்துவரச் செய்து பின்னே நடந்தான்.

இளங்கோவேளானுக்குத் தனது கதை எவ்வகையிலோ முடியப் போகிறது என்கிற முடிவு தீர்க்கமாக அரும்பி விட்டது.

சுரங்கத்தைக் கடந்து வேங்கைவனத்துச் சமதளத்தை அடைகிறார்கள்.

அங்கே...

வெறிகொண்ட ராட்சஸனைப் போல வாளையுருவிக் கொண்டு நிற்கிறான் வேங்கை மார்பன். அவனது கண்கள் நெருப்புத் துண்டங்களாக எரிகின்றன..

திருமேனியும் தியாகவல்லியும் ஒருபுறமாக நிற்கக் கண்ட இளங்கோவேளான் அதிர்ச்சியுற்றுப் போனான். திருமேனியைக் கடத்தி வந்தானா? திருமேனியே இவனுடன் வந்தாளா? நிச்சயமாக அவ்வாறு இராது. கடத்திக் கொண்டு தான் வந்திருக்கவேண்டும்..

ஆ. இவன் மானுடனா? புராண காலத்து அரக்கனா?

''எங்கே எனது உயிரனைய சிலை?''

—வேங்கை உறுமுகிறது. அதைத் தொடர்ந்து நிஜ வேங்கைகளும் அறைக்குள்ளிருந்து உறுமுகின்றன...

உயிரனைய சிலை...

சிலைபோல நின்ற திருமேனி சிந்திக்கிறாள்.

மூர்க்கத்தனமான காதல்....

ராஜசிங்கன் விளக்கிறான்: ''மன்னர் பெருமானே! சிலையைத் தூக்கி வரச்



சொல்லி நமது ஆட்களுக்கு உத்தரவிட்டேன். 'எங்கள் மகாராணி உடலைத் தீண்டுகிற பாவத்தைத் தேடிக் கொள்ள மாட்டோம்' என்று அடம் பிடித்து விட்டார்கள்.''

மகிழ்ச்சிக் கடலில் நாகரீக முத்துக்களும், பவழங்களும், வலம்புரிச் சங்குகளும் மிதக்கின்றன. பெருமிதம் கண்ட வேங்கை மார்பன், வெளிச்சத்தை இருட்டுக்கு விற்று விட்ட வேல் நெடுங்கண்ணியான திருமேனியைக் கவனிக்கிறான், பார்த்தாயா எங்கள் பண்பாட்டை என்பது போல...

திருமேனி தலைகுனிந்து போகிறாள்...

''காளிங்கன் எங்கே?''

இதே கேள்வி தியாகவல்லியின் நெஞ்சிலும் எழுந்ததால் உன்னிப்பாகக் கவனிக்கிறாள். அவளது நெஞ்சு படமெடுத்த நாகம் போலச் சீற்றத்துடன் கவனிக்கிறது.

''வேந்தர் பெருமானே! காளிங்கனுக்குச் சிலை பெரிதாகத் தெரியவில்லை. உயிர் பெரிதாகத் தெரியவே தப்பி விட்டார். நமது ஆட்களை ஏவி இருக்கிறேன்.''

சிலை இப்போது வெளியே வரவேண்டும். என்ன செய்வது?

வேங்கைமார்பன் கட்டளையிடுகிறான். ''நீண்ட வடக்கயிற்றையும் ஆறடி நீளமுள்ள பலகையும் எடுத்துக் கொண்டு சுரங்கத்துக்குள் செல்லுங்கள். சிலையைப் பலகையில் கிடத்தி நன்றாகக் கட்டிக் கயிற்று முனையைச் சுரங்கத்துக்கு வெளியே கொண்டு வந்து மெல்ல மெல்ல இழுத்து வெளிக் கொணர வேண்டும். பலகை நீண்டவாக்கில் இழுபட்டு வர வேண்டும். இதுவே சுலபமான வழி!''

''வேந்தே! சிலைக்குக் கயிறு கட்டுவது யார்?''


சரியான கேள்வி.

கணீரென்று ஒரு குரல் ஒலிக்கது.

''நான் கட்டுகிறேன்!''

பரவி வரும் பார்த்தீனியம்செடியை அழிக்கத் தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக் கழகம் விரிவாக்க கல்வி நெறியகம் வெளியிட்டுள்ள எளிய வழி: ஒரு லிட்டர் தண்ணீரில் 200 கிராம் சாப்பாட்டு உப்பைக் கரைத்து, அதில் சலவை சோப்புத் தண்ணீரைக் கலந்து வெய்யில் நேரத்தில் தெளிக்க பார்த்தீனியம் செடி மூன்று நாட்களில் அழியும்.

—சுந்தர் சுந்தரி.



திருமேனியின் குரல் தான்.

''திருமேனி! உனக்கேன் இந்த வேலை?'' என்றான் வேங்கைமார்பன்.

''அது எனது பிணமல்லவா! என் பிணத்தைக் கூடத் தொட மறுத்த உங்கள் வீரர்களை மெச்சுகிறேன். என் பிணத்தை நானே தொட்டுக் கட்டுகிறேன்.''

வேங்கைமார்பன் வேடிக்கையாகச் சிரித்துக் கொள்கிறான்.

''பாண்டியகுமாரி! நான் உன்னைத் தொட்டதால் தான், உனது பிணத்துக்கும் கூட எனது வீரர்கள் மகாராணி அந்தஸ்து அளித்தது. அதை மறந்துவிட வேண்டாம்.''

குறும்பான மறுமொழி, கும்பியைக் கனன்றச் செய்கிறது.

திருமேனி, சூட்டுக்கோலால் பட்டைத் தீட்டுவது போல நாவசைத்தாள்:

''ஒரு சகோதரன் சகோதரியைத் தொடக் கூடாதா?''

முன்பு போல் வேங்கைமார்பன் சத்தமிடவில்லை. பட்டையாகத் தீட்டிய சூட்டுக்கு உடன் ஆற்றல் காணுகிற மாதிரி சஞ்சீவி மறுமொழி பகர்ந்தான்: ''சகோதரியானாலும் இவர்களுக்கு இளவரசிதானே? தொட முடியுமா? திருமேனி! நீ கோபுரமாய் உயர்ந்து விட்டோம் என்று சற்றும் சிந்தியாமல் வானத்தை வெறுக்கிறாய்! ஆனால் மானத்தின் கலசமாய் நின்று பேசுகிறாய். நான் வானமாக நின்று கோபுரம் உயரத்துக்கு இறங்கி வந்து அகரபானம் பருகத் துடிக்கிறேன்! ஆனாலும் உனது கலசத்தின் நெற்றியில் மாணிக்கமாய் மின்னுகிறேன்! போகப் போக நீ அறிவாய்!''

அதற்குள் ஆறடிப் பலகையும் தடித்த வடக் கயிறுகளும் வந்து சேர்ந்தன.

''தியாகவல்லி! நீ சுரங்கத்துக்குள்சென்று உனது சிநேகிதியைத் தொட்டுக் கட்டுகிறாய். கட்டுவதை, இதுவரை கட்டியதை விட உறுதியாகக் கட்டித் திரும்பு! பலகையைப் பின்புறமாக இருந்து வீரர்கள் தொட்டுத் தள்ள ஆட்சேபணை தெரிவிக்க மாட்டார்கள்!''

அழுத்தமான அர்த்தங்கள் திருமேனியின் பிடிவாதத்துக்கு ஆலவட்டம் வீசுகின்றன. தியாகவல்லியை அவன் புரிந்து கொள்ள வேண்டுமே!

சற்றைக்கெல்லாம் சுரங்கத்துக்குள் மாண்டு போன பத்துப் பிணங்களை வெளியில் கொண்டு வந்து முதலைகளுக்கு இரையாக்க எடுத்துச் செல்கிறார்கள்.

திருமேனியின் கண்கள் அலைமறுகின்றன.

ராஜசிங்கனும், தியாகவல்லியும் சில வீரர்களும் சுரங்கத்துக்குள் நுழைகிறார்கள்.

ஐந்து நாழிகைப் போதுக்குள் திருமேனிச்சிலை சமதளத்தையடைய, அதனை வேங்கைமார்பனே தொட்டுத் தனது பலத்தைப் பிரயோகிக்க, தியாகவல்லி துணை செய்ய, நேர் நிலையில் நிறுத்துகிறார்கள்.

அந்தச் சிலையைக் கண்டு, அழகின் ஜீவசிலையான — காவியச் சித்திரமான — தமிழ்ச் சொருபமான திருமேனியே வியந்து

போனான்! இப்படி ஒரு முழுமையா? அந்த முழுமைக்குள் ஒரு மூர்க்கமான காதலா? ஆயினும் மன்னிக்க முடியாத காதல்!

சிலைக்கு மாலையிட்டது மன்னிக்க முடியாத அகௌரவம் நிறைந்த குற்றம்! அதைவிட மாபெரும் குற்றம் தன்னைக் கடத்தி வந்து தந்தைக்கு மாசு தேடி விட்டது! பாண்டியர் பெருமையைக் குலைத்தது!

''சிலை எப்படி இருக்கிறது திருமேனி?''

''கல்லாயிருந்தால் உங்களை உதாரணம் கூறியிருப்பேன்போன்றுயிருப்பதால்என்னைப் போலிருக்கிறது என்கிறேன்.''

வேங்கைமார்பன் உடலசைப்பின் ஊடே ஒரு பெருமிதச் சிரிப்பை உதிர்க்கிறான்.

அடுத்து அவனது கண்கள் இளங்கோ வேளானை நோக்குகின்றன. அதுவரை குளிர்ந்திருந்த கண்கள் நெருப்பாக மாறுகின்றன.

'எங்களைத் திறந்து விடேன்' என்று வேங்கைகள் வேறு உறுமுகின்றன.

''என்ன துணிவிருந்தால் இந்தக் கோட்டைக்குள் நுழைந்து, எனது உயிரான சிலை மீது உனது விரல்கள் பட்டிருக்கும்? உனது இளவரசியின் உடலைத் தொடுகிறோம் என்ற உணர்ச்சி வேண்டாமா?'' என்று உறுமிய வேங்கைமார்பன், ராஜசிங்கனை நோக்கி, ''ராஜசிங்கா! இவனை அழைத்துச் சென்று சிலையைத் தொட்ட இவனது பத்து விரல்களையும் நறுக்கி, மருத்துவர் இல்லத்துக்கு அழைத்துச் சென்று கட்டுப்போட்டு, மதுரை நோக்கிச் செல்லும் வண்டிச் சாத்துக்களில் ஏற்றியனுப்பி விட்டுத் திரும்பு!'' என்று கூறுகிற போது...

அவனது பற்கள் நறநறத்தன.

எத்துணை கடுமையான தண்டனை! காதல் மனிதாபிமானத்தைக் கசக்கிப் பிழிந்தது.

''அடுத்து காளிங்கன் எங்கிருந்தாலும் பிடித்து வாருங்கள். அவனது இரு கரங்களையே துண்டித்து விடுகிறேன்!''

ஒரு பக்கம் திருமேனி அரண்டாள்.

மறுபக்கம் தியாகவல்லி மருண்டாள்.

வேங்கைமார்பன் உத்தரவிட்டு விட்டால் அதை மாற்றக் காளைக் கோயிலுறை ஈசனாலும் முடியாது என்பது பலர் அறிந்த உண்மை.

''இது நியாயமான தண்டனையா?'' என்றாள் திருமேனி.

''இது வேங்கை நியாயம்; வேறு நியாயத்தைப் பற்றி எனக்குக் கவலையில்லை.''— என்றான் வேங்கைமார்பன்.

''இந்தச் சிலையைச் செய்த சிற்பியின் விரல்கள் என்னவது?''

''அப்போது திருமேனி, பாண்டிய மன்னர் தலைப்புதல்வி! தண்டிக்க வேண்டியவர் உனது தந்தை. இப்போது திருமேனிச் சிலை, நான் மாலையிட்ட மாதேவி! தண்டனை கொடுக்க வேண்டியவன் நான்!''

''திருமேனி உங்கள் சகோதரி!''

''திருமேனிச் சிலை எனது சகதர்மிணி!''

வாயடைத்துப் போனாள் திருமேனி.

தண்டனையை நிறைவேற்ற இளங்கோ வேளானை அழைத்துச் செல்கிறான் ராஜசிங்கன்.

''இதன் பின் விளைவு என்ன என்று யோசித்தீர்களா?'' — திருமேனி சொற்களில் நெருப்பு பற்றி எரிந்தது.

வேங்கையின் சொற்கள் புயலாய்க் கிளம்பின:

''என்ன நடக்கப் போகிறது? உக்கிரப் பெருவழுதிப் பாண்டியர் உக்கிரமாக யுத்தம் தொடுக்கப் போகிறார்! தொடுக்கட்டுமே! அன்போடு பாண்டிய சாம்ராஜ்யம் எனக்குச் சீதனமாகக் கிடைக்கும் என்று எதிர்பார்த்தேன். அழிவோடுதான் அது கிடைக்க வேண்டுமென்றால், அதன் தலையெழுத்தை யாரும் மாற்ற முடியாது. வேங்கைப்புலியை வென்று அதன் பல்லைக் கொண்டு வந்து தாலியணிவிக்க வேண்டும் என்பது ஆதித் தமிழர் மரபு! இங்கே நானே வேங்கையாகவும் அதன் மார்பாகவும் இருக்கிறபோது?''

''நான் சம்மதிக்க வேண்டுமல்லவா?''

''இன்னுமா முரண்படுகிறாய் திருமேனி?''

''எனது சிலைக்கு என்று மாலையிட்டு அகௌரவப்படுத்தினீர்களோ அன்றேமுரண்பட்டு விட்டேன். இப்போது என்னைக் கடத்தி வந்து சங்கம் வளர்த்த பாண்டிய மன்னனையே பங்கப்படுத்தித் தலைகுனியச் செய்து விட்டீர்கள்! முரண்பாடு மேலும் முற்றிவிட்டது. 'சகோதரி' என்று என்னை அழைத்த சொல்லுக்குக் கூட, தியாகவல்லியின் திறந்த நெஞ்சம் எனக்கு ஒருசமயம் மன்னிக்கத்தக்க சமாதானம் அளித்தது. ஆனால் உங்களின் இந்த ராட்சஸத்தனம் மன்னிக்க முடியாத சபதத்தை ஏற்கச் செய்து விட்டது.''

சன்னலை ஒருசலும் மூடி உலகக்காற்றை வெல்லாம் நாசிக்குள் இழுப்பது போன்று அவனது பரந்த மார்பு விம்மிப் புடைக்கிறது... பின்னர் அத்தனை காற்றும் ஒரு புயலின் சுழிப்பே போன்று நெடு மூச்சாய்ப் பறிகிறது. மார்பு உள்ளடங்குகிறது.

உதடுகளை அழுந்தக் கடித்துக்கொண்டு, தியாகவல்லியை நோக்குகிறான். அந்தநோக்கல், 'திருமேனியைக் கவனித்துக்கொள்' என்பது போல இருக்கிறது.

எதிரே சர்வ நாடியும் சரணடைந்தது போல் நின்றிருந்த அமைச்சர் குறுமலைக்கிழாரை நோக்குகிறான்...

''நீங்கள் என்ன செய்வீர்கள் அமைச்சரே' உங்கள் நிலையில் நானே இருந்தாலும் இதனைத்தான் செய்திருப்பேன்! போய் அரசாங்க காரியங்களைக் கவனியுங்கள். யுத்த முழக்கத்துக்கான ஆயத்தம் இன்று முதல் கொண்டே ஆரம்பமாகட்டும்!'' என்று கூறிவிட்டு வேகமாக வெளியேறி நடக்க...

அனைவருமே அவனைப் பின்பற்றிச்செல்ல..

'எங்களைக் கொஞ்சம் கவனிக்கக்கூடாதா?' என்பது போல அதுவரை பயங்கரமாக உறுமிக் கொண்டிருந்த வேங்கைகள் அப்போது பார்த்துத் தீனமாக உறுமுகின்றன.

(தொடரும்)

ஒரு கோடி ஆசைகள்

நா. நாகராஜன்

பஸ்ஸில் ஏறி உட்கார்ந்ததும் போரடித்தது. எப்படியும் பஸ் கிளம்ப இன்னும் பத்து நிமிஷம் ஆகும். டிக்கெட் எடுக்கவும், இடம் போடவும் முண்டியடித்துக் கொண்டிருந்த கூட்டம். நல்லவேளை எனக்கு லக்கேஜ் ஏதுமில்லை. ஒரே ஒரு ஹேண்ட் பேக் தான். அதனுள் டிகிரி சர்டிபிகேட், எக்ஸ்பீரியன்ஸ் சர்டிபிகேட், இன்று இண்டர்வியூ நடத்திய கம்பெனியின் இண்டர்வியூ கார்டு ஒன்று. ஒரு அப்ளிகேஷன் காப்பி. அவ்வளவு தான்.

இது என் இருபதாவது இண்டர்வியூ. எத்தனை ஊர்கள், எத்தனை முகங்கள்! எல்லா வேஷங்களும் பழக்கப்பட்டு விட்டது.

''நீங்க அவர் மகனா? அவர் எனக்கு ரொம்ப வேண்டியவராச்சே! சட்டாயும் என்னால ஆனதைச் செய்யறேன் தம்பி! ஆனால் இப்போ கஷ்டம். யூனியன் ட்ரபிள் ஜாஸ்தி! போன தடவைன்னா ஷ்யூராச் சொல்லலாம்.''

பெரிய ப்ரமுகர்களைத் தெரியும் தந்தியடிக்கணும், மினிஸ்டரைப் பார்க்கணும், ஆறாயிரம் வேணும் என்று பகிரங்கமாகக் கேட்கும் மனிதர்கள்.

''கஷ்டப்பட்டுப் படிச்சு ஃபர்ஸ்ட்கிளாஸ் எடுத்திருக்க வேண்டாம். பணம் கொடுத்தே வாங்கியிருக்கலாம்'' — என்று காலையில் இண்டர்வியூ நடக்கும் ஹாலின் வராந்தாவில் வைத்து ஒருத்தன் சொன்னது ஞாபகம் வந்தது.

டிரைவர் சுற்றி வந்து சின்னக் கதவைத் திறந்து ஜம்ப் பண்ணி ஏறிச் சீட்டில் அமர்ந்தார்.

ஒவ்வொருத்தராக ஏற பஸ் நிரம்பியது. கண்டக்டர் விசில் அடிக்க டிரைவர் பஸ்ஸை நிதானமாகப் பின்னால் எடுத்துத் திரும்பி நேர் பாதையில் ஓட்டினார்.

என் பக்கத்து சீட்காரர் தினப்பத்திரிகை பார்த்துப் படிக்க ஆரம்பித்தார்.

ஏதாவது புத்தகம் வாங்கியிருந்தால் ஊர்ப் போய்ச் சேருகிற மூணுமணி நேரம் பொழுது போயிருக்கும் என நினைத்துக் கொண்டேன்.

அவர் முதல் பக்கம் படித்துக் கொண்டிருந்தார்.

பெரிய எழுத்துக்களில்,

''ஒன்னேகால் கோடி பரிசு விழுந்த சீட்டைக் காணவில்லை. பங்குதாரர் கொலை'' என்று இருந்தது.

கொஞ்சம் ஆச்சரியமாக இருந்தது.

'அடப்பாவமே' என்று மனம் வருந்தியது.

செய்தியை ஒட்டிப் பிரசுரமாயிருந்த படத்தைப் பார்த்ததும் பகீரென்றது.

இவரா!

இவர் ராஜமாணிக்கம் அல்லவா!

''நேற்று லாட்டரியில் முதல் பரிசு நெல்லைக்கு விழுந்தது தெரிந்ததே! அந்தச் சீட்டை வாங்கிய அதிர்ஷ்டசாலி யாரென்பது இன்று காலை தெரிந்து விட்டது. அந்த அதிர்ஷ்டசாலியின் பெயர் ராஜமாணிக்கம். இவர் சொந்தத்தில் முடிதிருத்தும் நிலையம் வைத்து நடத்துகிறார். இவரும் இவரிடம் வேலை பார்க்கும் முத்து என்கிற சவரத் தொழிலாளியும் சேர்ந்து பரிசுச் சீட்டு வாங்கியிருக்கிறார்கள். முடிவு அறிவித்தவுடன் முத்து போய் அவரைப் பார்த்த பொழுது சீட்டைக் காணவில்லை என்கிறார் ராஜமாணிக்கம். இதனால் ஆத்திரம் அடைந்த முத்து சவரக் கத்தியால் பல இடங்களில் அவரைக் காயப்படுத்திக் கொன்றார்.''

எனக்கு ஐந்து நிமிஷத்திற்கு ஒன்றுமே ஓடவில்லை. என்ன இது, இப்படியெல்லாம் கூட நடக்குமா என்று மனசு கிடந்து அடித்துக் கொண்டது.

நான் தயங்கித் தயங்கி உள்ளே நுழைந்ததும் 'வாங்க' என்று கூப்பிட்டார். ராஜமாணிக்கம்.

சோபாவைக் காண்பித்து உட்காரச் சொன்னார்.

குண்டானதற்கு நஷ்டஈடு!

லண்டனைச் சேர்ந்த 16 வயது பள்ளிச் சிறுமி ஒருத்தி கால் உடைந்து ஆஸ்பத்திரியில் படுத்திருந்தாள். அவளது கால் குணமானாலும், ஆஸ்பத்திரியிலிருந்த போது அவள் எடை 30 கிலோ கூடி, குண்டாகி விட்டாளாம்! இதற்காக நஷ்ட ஈடு கோரி அவள் வழக்குத் தொடுத்தாள். இவளது கூற்றை ஏற்றுக் கொண்டு நீதிபதியும், இவளுக்கு 9,238 பவுன் நஷ்ட ஈடு தரும்படி உத்தரவிட்டார்!

—சம்பத்குமாரி.

—ஆதாரம்: 'காரவான்.'



''கட்டிங்கா, ஷேவிங்கா?'' என்றார்.

நான் என் குறையைச் சொன்னேன்.

''வந்து... எனக்குக் கண் பார்வை அவ்வளவு பத்தாது. நீங்க முடிவெட்டும் போது கண்ணாடியைக் கழற்றி வைச்சுடுவேன். அப்பப்ப மாட்டிச் சரி பார்த்துப் பிறகு வெட்டச் சொல்லுவேன்! இதுவரைக்கும் அப்பா வீட்டுக்கு ஒரு ஆளைக் கூட்டிக்கிட்டு வந்திடுவார். இப்போ அவரால முடியலை...''

''அதுனால என்னங்க. உங்களுக்கு எப்படி சௌகரியமோ அப்படியே வெட்டிடுவோம்'' என்று சொன்னார்.

முடி வெட்டும் போதே பேச்சுக்கொடுத்தார்.

''படிக்கறீங்களா?''

''முடிச்சுட்டேன்...''

''வேலை பார்க்கறீங்களா?''

''வேலைக்குப் பார்த்துண்டிருக்கேன்..''

''பரவாயில்லை, தமாஷாப் பேசறீங்க...''

ஒரு சின்னப் பையன் கடைக்குள் நுழைந்தான். கையில் நிறைய கலர்கலராய்ப் பல மாநில லாட்டரிச் சீட்டுக்கள்.

''என்ன தம்பி காலையிலே...?''

''ஒரு நாலு சீட்டு மிச்சம். இன்னிக்குக் காலைதான் குலுக்கல். கடைசி சான்ஸ்..''

''இப்போத்தான் கடையைத் திறந்திருக்கேன். இன்னும் பணம் வாங்கலை. வேணும்னு நாலு சீட்டையும் எங்கிட்டக் கொடுத்துடு. ஜோரா உனக்கு கிராப் வெட்டி விட்டிருதேன்'' என்று சொல்லி விட்டுப் பலமாகச் சிரித்தார்.

எனக்கும் சிரிப்பு வந்தது.

என் பக்கத்து நாற்காலியில் ஒரு பையனுக்கு முடிவெட்டிக்



கொண்டிருந்த முத்துவும், ''அண்ணாச்சி சொல்லுறது சரிதான். உனக்கும் சீட்டு வித்த மாதிரி இருக்கும். எங்களுக்கும் தொழில் நடந்த மாதிரி இருக்கும்'' என்றான்.

''அடேய், சரிதான் வியாக்யானம் பேசாதே. வேலையைச் சரியா கவனி முதல்ல. ஹீட்டர் போட்டுரு. கரெண்ட் போயிடப்போகுது. எப்படி வெட்டணும்னு அடிக்கடி கேட்டுக்கோ. அப்பத்தான் அடுத்த தடவை நம்ம கடையைத் தேடி வருவாங்க...''

ஒரு திறமையான நிர்வாகி மாதிரித் தட்டிக் கொடுத்து வேலை வாங்கிக்கொண்டிருந்தார் அவர்.

''லாட்டரி சீட்டெல்லாம் வாங்குவீங்களா?'' என்று என்னிடம் கேட்டார்.

''நம்ப யோகத்துக்கு சின்ன வேலைகூட கிடைக்க மாட்டேங்குது. இதுல அதிர்ஷ்டத்தை டெஸ்ட் பண்ணிப் பார்க்கணுமா?''

''அட.. எல்லா நேரமும் ஒரே மாதிரியா இருக்கும்? ஒரு நல்ல காலத்துல ஒரு கோடி விழுந்திருச்சின்னு வைச்சுக்குங்க. அப்புறம் ஒரு வேலைக்கும் அலைய வேண்டாம். உங்களுக்கு யார், யாரு எல்லாம் வேலை இல்லேன்னுங்களோ அவங்களுக்கு ஒரு ஆயிரம் ரூபாய் அனுப்பி வைக்கலாம். என்ன அந்த இண்டர்வியூவினுல நீங்க நாலு விஷயம் தெரிஞ்சுகண்டிருக்கலாம் இல்லையா?'' என்று சொல்லிச் சிரித்தார்.

''நீங்க சீட்டு வாங்குவீங்களா...?''

''நானு வாங்க மாட்டேன்! முத்து கிட்டத்தான் பணம் கொடுத்து வாங்கிட்டு வரச்சொல்வேன். விழுந்துச்சுன்னு அவனுக்கும் பங்கு. இல்லேன்னு நான் அவங்கிட்டே காசு வாங்க மாட்டேன்.

சென்ற ஆண்டுக்கான சிறந்த நடிகர் விருதைப் பெற்ற கனில் முகர்ஜி என்னும் வங்க நடிகர் வறுமையில் வாடுகிறார். வங்கப் பட உலகம் நசித்து வருவதால் கனில் முகர்ஜிக்குப் படங்களே இல்லை! மாணவர்களுக்கு 'டியூஷன்' சொல்லிக் கொடுத்து, அதனால் கிடைக்கும் 350 ரூபாய் வருவாயில் கால் வயிறும் அரை வயிறும் உண்டு காலம் தள்ளுகிறார் இந்த நடிகர்!

'வீக்' இதழிலிருந்து. தொபஞ்சு.



எனக்கும் ஒரு சபலம்தான். கொஞ்சம் பெரிய தொகையா ஏதாவது கிடைச்சதுன்னா கடைய இன்னும் பெரிசு படுத்தலாம். கூட நாலு ஆளுகளைப் போடலாம். ஏ. சி. கூட வைக்கலாம்...'' அடுக்கிக் கொண்டே போனார்.

''அப்போ எனக்கு ஒரு வேலை போட்டுத் தருவீங்களா...?''

''என்ன அப்படிக் கேட்டுட்டீங்க... உங்களுக்குச் சொலையா பத்து லட்சம். தனியா ஏதாவது தொழில் தொடங்க...''

முடிவெட்டிக் கொண்டு வந்த போது நேரமானது தெரியவில்லை.

பிறகு ஒவ்வொரு முறை போகும்போதும் எதையாவது பற்றிக் கேட்டார்.

இந்த வாரம் திங்கட்கிழமை கடைசித் தடவையாகச் சந்தித்த பொழுது ரொம்பவும் சந்தோஷமாக இருந்தார்.

''என்ன விஷயம்...?'' என்றேன்.

''நம்ப மகன் பத்தாவது பாஸ் பண்ணிட்டாங்க. ரொம்ப சந்தோஷமா இருக்குது. புதுசா சட்டை, பேண்ட் எல்லாம் எடுத்துக் கொடுத்தேன். மேற்கொண்டு படிக்கவைக்கணும்... பெரிய டாக்டராகவோ இன்ஜினியராகவோ ஆகணும்... அதுக்கெல்லாம் லாட்டரி விழுந்தாக் கொஞ்சம் சௌகரியமாக இருக்கும்... என்ன நான் சொல்றது'' என்று கேட்டுவிட்டுச் சிரித்தார்.

''ஏ... முத்து ஒவ்வொரு தடவை முடி வெட்டினதும் அதை ஒதுக்கிப்போட்டுட்டு அடுத்த வேலையை ஆரம்பின்னு எத்தனை தடவை சொல்றேன்'' — பேச்சோடு பேச்சாக அவனையும் கண்டித்துக் கொண்டார்.

''பையன் பாஸானதுக்கு முத்துவுக்கு இருபது ரூபாய் கொடுத்தேன். ரொம்ப நாளைக்கு அப்புறம் என் சம்மதத்தோட முத்து தண்ணியடிச்சான். ஜாலியா இருந்தான். ஏலே இனிமே என் பையன் அடுத்த பரீட்சை பாஸாற வரைக்கும் தண்ணியடிக்கக் கூடாது...'' என்று விளையாட்டுக்குச் சண்டித்தார்.

''பையனை நல்லாப் படிக்கச் சொல்லுங்க ஐயா'' — என்று முத்து பதிலுக்குப் பவ்யமாக நடித்துக் காண்பித்தான்.

''அதை நீ சொல்லுறியாக்கும். ஏழாங் கிளாஸ் தாண்டல. ஏல நாங்கூட எட்டு முடிச்சுட்டேன்ல'' — என்று விளையாட்டுக்குக் கையை ஓங்கினார்.


''அதால் நீங்க கடை வைச்சிருக்கீங்க. நான் வேலை பார்க்கறேன்...'' என்றான்.

அவர் பதில் சொல்ல முடியாமல் சிரித்தார்.

நான் புதன்கிழமை இன்டர்வியூ இருக்கிறதைச் சொன்னேன்.

''நல்லாப் பண்ணுங்க தம்பி. இந்த வேலையாச்சும் கிடைக்கட்டும்'' என்றார்.

ஒரு எருமைமாடு குறுக்கே போனதாம். அதன் மேல் மோதி விடக் கூடாதே என்கிற கவலையில் டிரைவர் ஸ்டியரிங்கை ஒடித்துத் திருப்பியதில் பஸ் ஒரு அரை வட்டம் அடித்தது. அவரவர் நெற்றியில், மூக்கில், முன் சீட் கம்பி இடித்தது.


பெரியவருக்கு முன்னால சத்தியம் பண்ணுங்கவாழ்நாள் பூராவும் தினம் ராத்திரி டார்டாய்ஸ் கொசுவர்த்திச் சுருள் கொளுத்துவேன்னு!
கொசுவை விரட்டும் உறுதியாக—டார்டாய்ஸ்
சனி, குருவைப் பாக்கிறான்... கஷ்ட தசைதான். இந்த வருஷம் கொசுத் தொல்லே உங்களுக்கு அதிகமா இருக்கும்.
என்ன பண்ணலாம்? கொசு சாந்தி, 'ஹோமம்' ஏதாவது...?
ஹோமப்புகை போலே... மகிழ்ச்சியும், அமைதியும் தர—டார்டாய்ஸ்
எங்கிட்ட தான் இந்தக் கோபம்மெல்லாம் செல்லும்.. கொசுக்கள் கிட்ட செல்லுமா..?!
கொசுக்களை விரட்டி அடிக்க—டார்டாய்ஸ்
திரை எதற்கு? விலக்கி விடேன்!
முதலில் கொசுக்களை விரட்டி விடுங்கள்..!
பாழும் கொசுக்களை விரட்டி அடிக்க எளிய வழி—டார்டாய்ஸ்
டார்டாய்ஸ் கொசு வர்த்திச் சுருள்.
தயாரிப்பாளர்:
பாம்பே கெமிகல்ஸ் ப்ரைவேட் லிமிடெட்
போர்ட், பம்பாய்-400 023. போன்: 273831

விசித்திரப் பழக்கம்

போட்டி: 19



உங்கள் ஊரிலுள்ள ஒரு விசித்திர மான பழக்கம் பற்றி எழுதுங்கள். பிரசுரமானால் பரிசு. தவிர குலுக்கல் முறையில் ஒருவருக்குப் பட்டுப் புடைவை. அவர் ஆண் வாசகராயின் பிரியமானவருக்குக் கொடுத்து மகிழ லாம். உறையின் மேல் விசித்திரப பழக்கம் என்று குறிப்பிடவும். மேஈ வெற்றிடத்தில் மட்டுமே எழுதி இந்த அரைப்பக்கத்தைக் கத்தரித்து அனுப் புதல் வேண்டும்.

முடிவு தேதி: 24.9.84.

34 பட்டுப்புடவைகளுள் ஒன்றைப் பெற முயற்சி செய்யுங்கள். வாரந்தோறும் தவறுமல் போட்டிகளில் கலந்து கொள் ளுங்கள்.

என் பெயர்: ....

விலாசம் : ....

....

பட்டுப் புடைவை பரிசுத் திட்டம்

பணத்தாசை முத்துவைக் கொலைகாரனுக ஆக்கி இருக்கிறது.

ராஜமாணிக்கம் வழக்கமாய் அவன் வாங்கி வருகிற டிக்கட்டுகளைப் பணம் போடும் டிராயருக்குள் வைப்பார்.

அல்லது முருகன் படத்தின் பின்னுல் வைப்பார். அன்று அவசரத்தில் வேறு எங்கேயாவது வைத்திருக்க வேண்டும்.

முத்து வந்து கேட்ட பொழுது நிஜமா கவே தேடி ஏமாந்து காணவில்லையென்று சொல்லியிருக்க வேண்டும்.

முத்து அவர் தன்னை ஏமாற்றி முழுப் பணமும் அடைய நினைப்பதாய் நினைத்து ஆத்திரப்பட்டிருக்க வேண்டும்.

பணவெறியில் ஒரு கொலை நிகழ்ந்திருக் கிறது.

இத்தனைக்கும் காரணம் ஒரு லாட்டரிச் சீட்டு.

ஒரு கொலைக்குக் காரணமாகி, ஒருத்தனை ஜெயிலுக்கு அனுப்பிவிட்டு அந்தச் சீட்டு எங்கே ஒளிந்து கொண்டிருக்கிறது?

''எனக்குப் பரிசு விழுந்ததுன்னு உங்க ளுக்குச் சொன்னயா ஒரு பத்து லட்சம். தனியா ஏதாவது தொழில் தொடங்க...''

அவர் மரணத்துடன் எனக்கு அந்த அதிர்ஷ்டமும் இல்லாமல் போனது. எவ்வளவு ஆசையும் நம்பிக்கையுமாய் இருந்தார். இது எத்தனை பெரிய எதிர் பாராத அதிர்ஷ்டம். இந்த முதல் பரிசு செய்தி தெரிந்ததும் அவர் எவ்வளவு கனவுகள் கண்டிருப்பார்.

கனவா — நிஜம்!

இன்னும் கொஞ்ச நாளில் கைக்குப் பணம் வரப் போவது பற்றி.... கடையை ஏ.சி. பண்ணுவது பற்றி.... பையனை மேற் கொண்டு டாக்டருககுப் படிக்க வைப்பது பற்றி.... முத்துவைப் பற்றியும் நினைத்துப் பார்க்காமலா இருந்திருப்பார்? சாதாரண மாய் அவன் ஒன்றுமில்லாமல் வந்து நின்ற போதே அவனுக்கு ஒரு . தொழிலைச் சொல்லிக் கொடுத்து, அவன் கெட்ட பழக் கங்களைக் கண்டித்துத் திருத்தி அவனுக்குக் கல்யாணத்திற்கு ஒரு பெண். வரை பார்த்து வைத்திருந்தவர்... பரிசுச் சீட்டில் பணம் விழுந்தால் அவனுக்குப் பாதி... பரிசு இல்லை யானுல் முழுப்பணத்தையும் நானே கொடுத்து விடுவேன் என்று சொன்னவர்... பரிசு கிடைத்ததும் அவனுக்கு உண்டான தைத் தந்து அவனை மேற்கொண்டு முன் னேற்ற வேண்டும் என்றெல்லாம் நினைத்துப் பார்த்திருக்க மாட்டாரா...?

ஒரு அவசரத்தில், ஆத்திரத்தில் முத்து தான் அதையெல்லாம் நினைத்துப் பார்க்க வில்லை.

பஸ் — ஸ்டாண்டை பஸ் வந்து அடைந்த பொழுது என் மனமும் ஒரு நிலைக்கு வந்தது. இனி வருத்தப்பட்டுப் பிரயோஜன மில்லை. நடந்தது நடந்து முடிந்து விட்டது.

ஊருக்கு ஒரு கதை கிடைத்தது. ஒரு மறக்க முடியாத அனுபவம் — இன்னும் கொஞ்ச நாட்களுக்கு.— அவ்வளவே! ஆனுல் எனக்கு மட்டும் அவரின் மரணம் ஒரு பெரிய பாடத்தையே போதித்து விட்டது!

தேவேந்திரா சாரீஸ்

(மிக மிக உயர்ந்த பட்டும் நூலும் கலந்து தயாரிக்கப்பட்டது)

27, ஏலா கந்தப்பன் தெரு. (முதல் மாடியில்)

(வால்டாக்ஸ் ரோடு, ப்ளூ ஸ்டார் இன்டர்நேஷனல் ஹோட்டல் அருகில்)

சென்னை-600 003 போன் : 33113

கிடைக்கும் இடங்கள் :

❋ **''கிருஹலக்ஷ்மி''** மாதர்கள் கூட்டுறவு அமைப்பு, B–39, சௌத் மோதிபாக், நானக்புரா, புதுடெல்லி–110 021. ❋ **M/s. காமாட்சி சில்க் ஹவுஸ்,** 5/38, W.E.A. அஜ்மல்கான் ரோடு, கரோல்பாக், புதுடெல்லி–110 005. ❋ **திருமதி உமா சுப்பிரமணியம்,** D–106, ஈஸ்ட் ஆப் கைலாஷ், நியூடெல்லி–65. போன்: 647276. ❋ **பங்கஜம் சுந்தரராஜன்,** C 6/A D.D.A. Flats, முனிர்கா புதுடெல்லி–67. ❋ **Mrs. சாரதா,** 16/449, விரம் பில்டிங், மாதுங்கா, பம்பாய்–19. ❋ **சுசிலாமணி,** 22, காந்தி மஹால், தேஜோ கோயா பார்க், வின்சென்ட் ரோடு, மாதுங்கா, பம்பாய்–19. ❋ **லக்ஷ்மி நாராயணன்,** 5, வாணி கோ–ஆபரேடிவ் ஹவுசிங் சொஸைட்டி, வல்லபாக் ரோடு, காட்கோபர், (கிழக்கு) பம்பாய்–77. ❋ **நல்லீஸ் சில்க் சாரீஸ் சென்டர்,** 401, டெலாங் ரோடு, மாதுங்கா, பம்பாய்–19. ❋ **சௌத் இந்தியன் கன்ஸர்ன்,** 401, டெலாங் ரோடு, மாதுங்கா, பம்பாய்–19. ❋ **லதா கிருஷ்ணன்,** பிளாட் நெ. 20, காமதேனு கோ. ஆப். பெஸ்டம் சாகர், செம்பூர், பம்பாய்–89, (கிளாஸ் பாக்டரி அருகில்). ❋ **ஜெயஸ்ரீ,** 2–A, தேசப்பிரியா பார்க் ரோடு, கல்கத்தா–26. ❋ **S. பொன்னப்பன்.** 8–2–61, 2–வது பஜார், செகந்திராபாத். ❋ **திருமதி T. S. சகுந்தலா சீனிவாசன்,** 18/1–A, லால்பாக் போர்ட் ரோடு, (மினர்வா & பஸப்பா சர்க்கிள் மத்தியில்) பெங்களூர், போன்: 224357. ❋ **திருமதி துர்காம்பாள்,** 5–A, ராமச்சந்திர புரம், தென்னூர், திருச்சி. ❋ **திரு S. சேதுராமன்,** 9, பாணாதுரை சன்னதி தெரு, கும்பகோணம்–612 001. போன்: 972. ❋ **ராணி சில்க்,** 13, மஹால் 4–வது தெரு, மதுரை–1, போன்: 26295. ❋ **S. லெட்சுமி,** 24, சீனிவாசா தெரு, சேலம்–1. (டவுன் ரயில்வே ஸ்டேஷன் அருகில்) ❋ **ஸ்ரீ காமேஸ்வரி ஏஜன்சிஸ்,** 6/175, திருச்சி ரோடு, (ஆல் இந்தியா ரேடியோ அருகில்), ராமநாதபுரம், கோயம்புத்தூர்–641 018. ❋ **மகாலட்சுமி சில்க் சென்டர்,** தீன் பில்டிங், (உள்புறம்) 175/11, மேல வீதி, சிதம்பரம். ❋ **ஹேமாவதி ஏஜென்சிஸ்,** 2711, நாணயக்கார செட்டி தெரு, தஞ்சாவூர். ❋ **பாகீரதி மூர்த்தி,** 100, ஸ்ரீ வராஹபுரம் தெரு, கல்லிடைக்குறிச்சி, திருநெல்வேலி. ❋ **M/s. சீதாராம் வேர் ஹவுஸ் சில்க் எம்போரியம்,** M.O. ரோடு, திருச்சூர்–680 002. ❋ **S. சுந்தரம்,** 9, சாத்தான் கோவில் தெரு, வடிவீச்வரம், நாகர்கோவில்–2. ❋ **திருமதி K. சீதாலட்சுமி,** 41, 4–வது டிரஸ்ட் கிராஸ்தெரு, மந்தைவெளிப்பாக்கம், சென்னை–28, போன்: 73244. ❋ **திருமதி சாவித்திரி பாலசுப்பிரமணியம்,** 2, 7–வது தெரு, நங்கநல்லூர், சென்னை–61, (பிள்ளையார் கோவில் அருகில்) போன்: 433737. ❋ **திருமதி சரோஜா கிருஷ்ணமூர்த்தி,** A9/386, புதிய குடியிருப்பு (முதல் மாடி) குடிசை மாற்று வாரியம், திருமங்கலம், அண்ணா நகர் மேற்கு, சென்னை–600 107. (திருமங்கலம் பஸ் நிலையம் அருகில்).

குறிப்பு : சென்னை நகரில் எந்தக் கடைகளுக்கும் எங்கள் புடவைகள் சப்ளை கிடையாது. மற்ற இடங்களில் வாங்குவது எங்களுடைய தயாரிப்பு அல்ல.

விவாத மேஜை

தண்டனைகள் தரலாமா?



மாலினி சேஷாத்ரி

''அடே, என்ன அதிசயம்! நம்பவே முடியவில்லையே!'' என்றார் ராஜகோபாலன், குரலில் வியப்பைக் குழைத்துக் கொண்டு. டைனிங் டேபிள் மீது, அவரது நிரந்தரத் தோழனை செய்தித்தாள் கிடந்தது.

''உரக்கப் படியுங்கள் அப்பா!'' என்றான் விவேக். ''நம்ப முடியுமா முடியாதா என்று நாங்களே தீர்மானிக்கிறோம்!''

''ஸ்வீடனில் ஒரு பதினொரு வயதுச் சிறுவன், தன் தகப்பனாரை போலீஸில் பிடித்துக் கொடுத்தான். தகப்பனாருக்கு அபராதம் விதித்தார்கள் போலீஸார்!''

''அவர் ஒருவேளை கடத்தல்காரராகவோ, திருடனாகவோ இருந்திருக்கலாம்'' என்றாள் அஞ்சலி. ''தகப்பனாரையே போலீஸில் பிடித்துக் கொடுத்த அந்தப் பையனின் தைரியம் பாராட்டுக்குரியது.''

ரஞ்சிதாவுக்கு எப்போதுமே கொலைகள் நிறைந்த மர்மக் கதைகள் பிடிக்கும். ''ஒருவேளை தன் தகப்பனார் ஏதாவது கொலை செய்வதைப் பார்த்தானோ என்னவோ?'' என்றாள். ''பாவம், பையன்! எவ்வளவு அரண்டு போயிருப்பான்!''

ராஜகோபாலன் கையை உயர்த்தி எல்லோரையும் அமைதியாய் இருக்கச் சொன்னார். ''நிறுத்துங்கள்... அந்தப் பையனின் தகப்பனார் செய்த குற்றம் என்ன தெரியுமோ? பிரம்பினால் அந்தப் பையனை மூன்று விளாசு விளாசினாராம்.''

அதிர்ச்சியுற்று அமைதியாக இருந்தார்கள் எல்லோரும்.

''இதுக்கெல்லாம் கூடவா போலீஸ் தண்டனை?'' என்றாள் அஞ்சலி ஆச்சரியத்துடன். ''ஸ்வீடன் ரொம்பவும் விசித்திரமான நாடாய் இருக்கிறதே!''

'நாமும் கூட ஸ்வீடனில் பிறந்து வளர்ந்திருக்கலாம் போலிருக்கிறதே!' என்பது போல் ரஞ்சிதாவும், விவேக்கும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர். சின்ன வயசில், தங்கள் குறும்புத்தனங்களுக்கு அவர்கள் பல சமயங்களில் அடி வாங்கியதுண்டு...

உண்மைக் காரணம் என்னவாய் இருக்கக் கூடும் என்று யோசித்துக் கொண்டிருந்த அஞ்சலி, ''அந்தத் தகப்பன் ஒரேயடியாய்க் குடித்துவிட்டு வந்து, பிள்ளையைப் போட்டுக் காரணம் இல்லாமல் அடித்து நொறுக்கியிருப்பான்!'' என்றாள்.

''அதுதான் இல்லை!'' என்றார் ராஜகோபாலன். ''அவர் குடிக்கவேயில்லை. பிள்ளையை அப்படி அடிப்பதற்கு ஒரு காரணம் இருந்தது. இதில் போட்டிருக்கிறதைப் படிக்கிறேன், கேளுங்கள்: அந்தப் பதினொரு வயதுப் பையனிடம், அவன் தம்பியை சைக்கிளில் வைத்துக் கொண்டு போக்குவரத்து நெரிசல் மிகுந்த சாலையில் போக வேண்டாம் என்று அவர் எச்சரித்திருந்தார். பையன் வேண்டுமென்றே அவர் பேச்சைக் கேட்கவில்லை. ஆகவே அப்பா பிரம்பை எடுத்துக் கொண்டு, சொன்னதைக் கேட்காத பிள்ளையை மூன்று தடவை விளாசியிருக்கிறார்.''

''இவ்வளவுதானா?'' என்றாள் அஞ்சலி. ''இப்படிப்பட்ட ஆபத்தான காரியத்தைச் செய்ததற்கு, அந்தப் பையனை இன்னும் கொஞ்சம் விளாசியிருக்க வேண்டும் அவர்! போகட்டும்... ஸ்வீடனில் என்ன, அப்படி ஒரு விசித்திரமான சட்டம்?''

''ஸ்வீடனில் மட்டுமல்ல!'' என்றான் விவேக். ''மேலை நாடுகளில் பலவற்றில் குழந்தைகளை அடிக்கக் கூடாதென்ற சட்டம் உண்டு. குழந்தைகளை, பெற்றோர் வெகு குரூர





மாக அடிக்கிறார்கள் என்பதால் சட்டம் இயற்ற நேர்ந்தது.''

''ஆமாம், பச்சைக் குழந்தைகளைக் கூட துவம்சம் பண்ணி விடுகிறார்கள், மருத்துவ மனைக்குக் கொண்டு போகும் அளவுக்கு. சில சமயம் அவை இறந்து விடுவதும் உண்டு'' என்றாள் ரஞ்சிதா.

ராஜகோபாலன் சிந்தனை வயப்பட்டவராகக் காட்சியளித்தார். ''பல வெளிநாடுகளில் மக்கள் மன நிம்மதியின்றி இருக்கிறார்களாம். அதைக் குழந்தைகள் மீது காண்பிக்கிறார்கள் போலிருக்கிறது!''

''இருந்தாலும் இப்படியா! குழந்தைகளிடம் குரூரமாய் நடந்து கொள்வதற்கும், அவர்களை ஒழுங்கு முறைக்குக் கொண்டுவர தண்டிப்பதற்கும் ஏதாவது வேறுபாடு இருக்க வேண்டாமா?'' என்றாள் அஞ்சலி.

''ஏற்கெனவே அங்கேயுள்ள குழந்தைகளைக் கட்டுப்படுத்த முடியாது. போதாக் குறைக்குத் தங்கள் பெற்றோர் மீதே குற்றம் சாட்டிப் போலீஸில் மாட்டிவிட அவர்களை அனுமதித்தால் என்ன ஆவது?''

''இந்தியாவில் அங்கே இருப்பது மாதிரிச் சட்டம் இருந்தால் எப்படி இருக்கும்?'' என்றான் விவேக்.

''அரசாங்கத்திற்கு அபராதத் தொகையாக ஏராளமாய்ப் பணம் கிடைக்கும்!'' என்றார் ராஜகோபாலன், சிரித்துக் கொண்டே. ''இங்கே எல்லோரும் தங்கள் குழந்தைகளை அடிப்பதைக் கடமையாகவே நினைத்துக் கொண்டிருக்கிறார்கள்.''

''இங்கே ஆண்கள் தங்கள் மனைவிகளையே அடித்து நொறுக்குகிறார்கள்'' என்றாள் அஞ்சலி.

அப்பா பேச ஆரம்பிக்கும் முன் குறுக்கிட்டாள் ரஞ்சிதா: ''ஒரு பத்திரிகையில் படித்தேன் — இந்தியாவில், பல பள்ளிக்கூடங்களில் குழந்தைகளை அடித்துத் துன்புறுத்துவதை அறவே அனுமதிப்பதில்லையாம். பள்ளிகளில் ஆசிரியர்கள் குழந்தைகளை அடிக்கக் கூடாது என்கிற போது, பெற்றோரும் தங்கள் குழந்தைகளை அடிக்கக் கூடாது என்று தடுப்பதில் என்ன தவறு? குழந்தைகளை இம்சிப்பதைக் கட்டாயம் தடுக்க வேண்டும்!''

''இப்போது இப்படித்தான் பேசுவாய்!'' என்றாள் அஞ்சலி. ''தாயாகும் போது உன் மனசு அடியோடு மாறிவிடும்!''

மாலினி சேஷாத்ரி புகைப்படம்: சுபா

''தரத்தோடு விலையையும்
எம் மாதிரி நோட்டம்
பார்த்து வாங்குங்க,
கெட்டிக்காரி நீங்கதான்''



"நியூட்ரமுல் தான் என் கைராசி."

''கண்ணை மூடிக்கிட்டு முடிவு பண்றவ நான் இல்லே. கண்முழிப்பா கவனிக்கறவளுக்குக் கிடைக்குது சகாய விலையிலே தரமான பண்டம்-- இதோ எனக்கு நியூட்ரமுல். ISI தரம் இருந்தாகணும், இருக்கா பார்ப்பேன். நியூட்ரமுல் ஒண்ணுக்குத் தானே அது இருக்கு, வேறெந்த கோக்கோ மால்ட் பானத்துக்கும் கிடையாதே. அதுவும், குடும்ப மனசுப்போல வாங்கக் குடுத்து வெச்சவ நான், எங்க வீட்டுலே கண்டிப்பா நியூட்ரமுல் தான் வேணும்''

''விளம்பரக் கதைகள் எல்லாம் என் கண்ணுலே மண்ணைத் தூவும்படி விடமாட்டேன். எதையுமே நான் நேரிலே பார்த்துத்தான் வாங்குவேன்''.



நியூட்ரமுல்	ரூ. 13.34
போர்ன்விடா	ரூ. 20.48
மால்டோவா	ரூ. 20.45
பூஸ்ட்	ரூ. 21.57

— மார்ச் '84 நிலவரப்படி 500 கி. [illegible] பேக்குகளுக்கான அநுபோக உச்ச விலைகள். வரிகள் தனி.

daCunha/GCM/109(A)/84/TM

வட்டமேஜை

● இந்திரா ஆளும் இந்தியாவில் தான் எம். வி. காமத் பேச, எழுத முடியும் எனக் கூறுகிறார்: சாவடி பொன் சிதம்பரம் இந்தியா, இந்திராவின் சொத்தல்ல. அந்த உரிமையைத் தந்தவர் இந்திராவும் அல்ல.

காரைக்குடி—1. எல். வெங்கடாசலம்.

● மனைவியைக் கைக்குள் போட்டுக்கொள்வது எப்படி? என்ற கேள்விக்கான தராசின் விளக்கம் அபாரம்.

சிவகாசி, ரா. லதா ராகவன்.

● ''மூன்றாவது பரிசுக்காகத் தேர்வு செய்யப்பட்ட ஷைலஜாவின் கதை அம்சமும் ஜி. கே. மூர்த்தியின் தூரிகையும் நிஜமாகவே மனம் நிறைந்து ஒருவிதமான ஆத்ம நிறைவைக் கொடுத்தது.''

ஊரூர் வெளிக்கடை, டி. ராஜன்.

என்பதையும், தேசிய கண்பார்வையற்றோர் கழகம் இந்நூல் வெளியாகக் காரணமானவர்கள் என்பதையும், மிஸஸ் ஃபேஸல்பாய் என்ற பார்ஸி பெண்மணி இந்தப் பணியில் ஈடுபட்டு நாடு முழுவதும் பிரசாரப்பயணம் செய்ததையும் குறிப்பிடாவிட்டால், வோல்டாவின் இந்த நற்பணி பற்றிய கட்டுரை (கல்கி 26.8.84) முழுமை பெறாது.

சென்னை—18, சித்தார்த்.

● வேலை கிடைக்காது வெதும்புகின்ற பட்டதாரிகள் விரக்தியடையாமல் இருக்கவும், வேலைக்கு அலைந்து மனுச் செய்வதற்கான செலவுகளை மேற்கொள்ளவும், தாய், தந்தையரின் பாரத்தைக் குறைக்கவும் உதவிப்பணம் வழங்கப்படுகிறது. இதனை நீங்கள் பாராட்டாவிட்டாலும் கார்டூனில் கேலி செய்யாமலாவது இருந்திருக்கலாம்.

இவ்வளவுதானா நமது எம்.பிக்கள்?

● வாசகர்கள் 'பெண் பார்த்த போது' நடந்த சம்பவங்களில் சில சிரிக்கவும் சில சிந்திக்கவும் வைத்து விட்டன.

அரூர், மு. மதிவாணன்.

● மெரினாவை மேம்படுத்துவது ஒரு புறம் இருக்கட்டும். வடசென்னையில் ராயபுரத்திலிருந்து எண்ணூர் வரை கடற்கரையில் தெரு விளக்குகளே இல்லாமல், இருண்டு கிடக்கின்றன. திருவொற்றியூர் கடற்கரையில் மீனவ குடிசைகள் நித்தம், நித்தம் கடலின் சீற்றத்தால் அழிந்துகொண்டிருக்கின்றன. ரோட்டின் நிலையோ அதிபயங்கரம். அலைகளால் அழிக்கப்பட்டது போக சாக்கடைகளாலும் அழிந்துகொண்டிருக்கிறது

சென்னை—57, இரணியல் 'சலே.'

● விஷமுள்ள பாம்புகள் வளரும் பண்ணையில் நடக்கும் விஷமத்தனமான செயல்கள் பற்றிய கட்டுரை உண்மையிலேயே ஒரு மர்மத் தொடரைப் படிப்பது போல் இருந்தது.

கிருஷ்ணகிரி, ஆர். பூபாலன்.

● 12.8.84 கல்கி இதழில் வட்டமேஜை பகுதியில் நாரையூர் ஜெயலக்ஷ்மி எழுதிய கடிதம் கண்டேன். சென்ற வருடம் வறட்சி காரணமாக விளைச்சல் இல்லை. ஆகையால் சில மாதங்கள் சம்பளம் வரவில்லை. ஆனால் தற்போது அந்த நிலை மாறி சம்பளம், நெல் முதலியவற்றைத் தருகிறார்கள்.

வளவனூர், பாடலீஸ்வரர் ஆலய அர்ச்சகர்கள் மற்றும் சிப்பந்திகள்.

● கண் தெரிந்தவர்கள் கடைக்குப்போய் வாங்கினால்தானே கண் தெரியாதவர்களுக்கும் 'காந்தி' தெரிய முடியும்? சென்னையில் ஹிகின்பாதம்ஸ் இதன் விநியோகஸ்தர்கள் இதுவரை எந்த ஒரு அரசும் ''இந்தக் கப்பரை''யைக் கூடக் கொடுக்கவில்லை என்பதை மறந்து விட்டீர்கள்.

செங்கல்பட்டு—1. கலாவதி குலசேகரன்.


● ''இந்தியாவின் ஒரே பிரச்னை இந்திராவா?'' என்ற தலைப்பில் ''திரு. சாவடி. பொன். சிதம்பரம்'' எழுதியதைக் கண்டேன். ஆமாம், பிரிட்டிஷ் பிரதமர் நமது இந்திரா காந்தியிடம் என்ன ஆலோசனை கேட்டார்? அதைக் கொஞ்சம் பொன். சிதம்பரம் விளக்கினால் தேவலாம்!

சென்னை—59. பி. வி. ராகவன்.

● நாட்டின் உபஜனாதிபதி தேர்தலில் முப்பது ஓட்டுக்கள் செல்லாதவைகள் என்ற செய்தி அறியும் போது நமது எம். பிக்களின் அறிவே இவ்வளவுதானா அல்லது பொறுப்பற்றவர்களாக நடந்து கொள்கிறார்களா? என்ற கேள்வி எழுகிறது. என். எஸ். கிருஷ்ணன் கிந்தனார் காலட்சேபத்தில் ரயிலையே பார்த்திராத கிந்தன் என்று சொல்லுவாரே, அது மாதிரி ஆட்கள் பார்லிமெண்டில் போய் உட்கார்ந்து மக்கள் வரிப்பணத்தைப் பாழாக்குகிறார்களே என்றுதான் வருத்தப் படத் தோன்றுகிறது.

கும்பகோணம், கே. ரகுபதி.

(கடைசிக் கடிதம் பரிசு பெறுகிறது)



பேரண்டப் பெருவெளியில் எத்தனையோ கோடி நட்சத்திரங்களும் அண்டங்களும் தொங்கிக் கொண்டே சுழல்கின்றன. அவை எப்படியோ ஒரு நியதிக்கு உட்பட்டு இயங்கி வருகின்றன. கோடானு கோடி யுகங்களாக அப்படியே இயங்குகின்றன. கோள்கள் எல்லாம் பம்பரத்தைப் போலச் சுழன்று கொண்டே சூரியனை வலம் வருகின்றன. கோள்களுக்குச் சில கோள்கள். அவற்றின் இயக்கமோ இன்னும் அதிசயம்.

சாட்டி நிற்கும் அண்டமெல்லாஞ் சாட்டை
யிலாப் பம்பரம்போல்
ஆட்டுவிக்கும் குற்றாலத் தண்ணலார்

என்று இந்த அதிசயத்தை இரண்டே வரிகளில் குற்றாலத்தண்ணலின் கூற்றாகத் திரிகூட ராசப்பக் கவிராயர் பாடிவிட்டார்.

இப்படிப்பட்ட நமது அறிவுக்கு எட்டாத சுழற்சிகளை, இயக்கங்களையெல்லாம் கண்டு களித்த நமது முன்னோர் அதற்கு ஒரு வடிவம் கொடுத்தார்கள். சந்திரனையும் நக்ஷத்திர மண்டலங்களையும் ஆபரணங்களாக அணிந்து தாண்டவம் புரியும் நடராஜ மூர்த்தியைக் கற்பித்துப் பூஜித்தார்கள். பேரண்டப் பெருவெளி முழுவதும் நீக்கமற நிறைந்து பரந்து நிற்கும் சக்தியை நமது கண்களால் காண ஒரு சகல வடிவத்தைப் படைத்தார்கள்.

நடராஜ மூர்த்தி தாண்டவமாடுவதாகக் கூறப்படும் ஐந்து சபைகளில் ஞானசபையான சித்திர சபை திருக்குற்றாலத்தில் இருக்கிறது. ஈசனுடைய ஆனந்தத் தாண்டவத்தைக் கண்டு மகிழ்ந்து பிரும்மாவே சித்திரங்களை வரைந்தார் என்று ஐதீகம். இந்தச் சித்ர சபையைக் கட்டியவர் தென்காசி கோயில் கட்டிய பராக்கிரம பாண்டியன் என்று அறிகிறோம். திருவாதிரைத் திருநாள் மிக விமரிசையாகக் கொண்டாடப்படுகிறது.

'அப்படியே மெய்சிலிர்த்து விட்டது'. 'புளகாங்கிதம் உண்டாகி விட்டது' என்றெல்லாம் ஒரு புதிய தலத்தை அடையும் போது பக்தர்கள் கூறுவார்கள். திருக்குற்றாலத்தைப் பொறுத்தவரையில் இப்படிச் சொல்வது மிகையாகாது. சாரல் காலத்தில் போய் விட்டால் சிலுசிலுவென்று சிலிர்ப்புத் தான். அதுவும் துணிந்து இருட்டியபின் சாரலையும் குளிரையும் பொருட்படுத்தாமல் அருவியினருகில் போய் விட்டால் சிலிர்ப்பாவது சிலிர்ப்பு. உள் எலும்பு வரையில் குளிர் தாக்கும். ஆனால் இரண்டு நிமிடங்களுக்குப் பிறகு உண்டாகும் பரவசம் இருக்கிறதே. அதை அருவியில் நீராடித்தான் தெரிந்து கொள்ள வேண்டும். சீசனில் ஆசை தீர நம்மால் அருவியின் கீழ் நிற்க முடியாது. யாராவது தள்ளிக் கொண்டே



திருமணக் கோலம்

இருக்கிறார்கள். இரவு நேரத்தில் கூட அருவிக் கரையில் ஜன நெரிசல்.


சிறுமியாக இருந்த காலத்தில் அருவிகள் அனைத்துமே எங்களுக்குச் சொந்தமாக இருந்ததை எண்ணிப் பெருமூச்சு விட்டுக் கொண்டே சுவாமி தரிசனம் செய்யப் போனேன். அருவியில் தான் கூட்டம். கோவிலில் கூட்டத்தைக் காணோம்.

குற்றாலத்து அருவிக் கரைக்கும், திருக்குற்றால நாதர் கோவிலுக்கும் போகும் போதே நாம் தரிசனம் செய்வது அரசமரத்தடியில் நின்று பிரசன்ன வதனத்துடன் காட்சியளிக்கும் செண்பக விநாயகர். எவ்வளவு பெரிய அரச மரம்! சலசலவென்ற சித்ரா நதியின் ஒலியோடு சரசரவென்ற அரச மரத்தின் ஒலியும் சேர்ந்து இன்பமாய் இருக்கிறது. கோவிலை அடைந்த உடனே பிச்சிப் பூவின் மணம் நம்மை அப்படியே சூழ்ந்து கொண்டு உள்ளத்தையே பரிமளிக்கச் செய்கிறது. மென்மையிலும் மென்மையான நறுமணம் ஒன்று உண்டென்றால் அது பிச்சிப் பூவின் மணந்தான்.

குற்றாலத்தின் புராண வரலாறுகள் வேடிக்கையானவை. அகத்திய முனிவர் தென் திசையை நோக்கி வந்த காரணந்தான் தெரியுமே. பரமேச்வரன் பொதிகை மலையிலுள்ள திரிகூடத்தில் தமது மணக் கோலத்தையும், தாண்டவத்தையும் காணலாம் என்று அகத்தியருக்கு வரமளித்தார். திரிகூட மலைச்சாரலுக்கு வந்த அகத்தியர் அங்கு இருந்த கோவிலுக்குள் சென்று பகவானை வழிபட எண்ணினார். அப்போது அந்தக் கோவில் மகாவிஷ்ணுவின் கோவிலாக இருந்தது. விபூதி ருத்ராக்ஷத்துடன்

குறுகி நிற்கும் குற்றால நாதர்

ஆனந்தி



✖ திரிகூடநாதர் கோயில்

வந்த அகத்தியரைக் காவலாளிகள் உள்ளே போகக் கூடாது என்று தடுத்து விட்டார்கள். அகத்தியர் அருகிலுள்ள இலஞ்சிக்குச் சென்று அங்கு கோயில் கொண்டுள்ள குமரப் பெருமானைத் தொழுது, குற்றாலத்தில் தம்மைக் காவலாளிகள் தடுத்ததைக் கூறி வருந்தினர். குறுமுனிவரைக் குறுநகையுடன் பார்த்துக் குமரப் பெருமான் ''வைணவக் கோலம் பூண்டு செல்வதற்கென்ன?'' என்று குறும்பாகக் கேட்டார். குறு முனிவரும் உடனே நாமம் தரித்துத் துளசி மாலையை அணிந்து கொண்டு ஆலயத்துக்குச் சென்றார். ஆத்மார்த்தமாகப் பூஜை செய்ய வேண்டுமென்று சொல்லி எல்லோரையும் போகச் சொல்லி விட்டு நெடியோன் தலையில் கையை வைத்துக் ''குறுகுக! குறுகுக!'' என்று அழுத்தினர். அகத்தியரின் தவ வலிமைக்குக் கட்டுப்பட்ட திருமால் குறுகிக் கொண்டே போய் சிவலிங்கமாக உறைந்தார். இதற்குச் சான்றாகத் திருக்குற்றால நாதரின் முடிமீது ஐந்து விரல்கள் அழுந்திய அடையாளத்தைக் காணலாம். அரியாக இருந்து அரன் ஆன ஈசனுக்கு அழுக்குண்டதால் தீராத தலைவலி உண்டாயிற்றாம். அதனால் தான் பல மூலிகைகள் போட்டுக் காய்ச்சிய தைலத்தால் தினம்அபிஷேகம் செய்து வருகிறார்கள். இந்தத் தைலத்தை வாங்கித் தேய்த்துக் கொண்டால் வியாதிகள் தீரும் என்பது நம்பிக்கை.

குற்றாலத்தில்தான் கஜேந்திரன் மோக்ஷம் பெற்றதாகப் புராணம் கூறுகிறது.

வேதங்கள் தங்களுக்கு என்றும் அழிவு ஏற்படாமலிருக்க இங்கு வந்து பலாமரமாகித் தவம் செய்தபடியால் பலா மரம் தலவிருக்ஷம். ஆதிக் குறும்பலா மரம் பட்டுப் போன படியால் புதிய மரம் வளர்த்திருக்கிறார்கள், வைரம் பாய்ந்த பலாமரத்தைப் பாதுகாத்து வைத்திருக்கிறார்கள்.

குறும்பலாவை வியந்து ஞானசம்பந்தப் பெருமான் பதிகம் பாடியிருக்கிறார். இத்தல விருக்ஷத்துக்கும் அப்படி ஒரு பெருமை!

மலைவாயகம்பு பகம்பொன்
கொழித்திழியு மல்கு சாரல்
குலைவாழைத் தீங்கனியுமாங்கனியுந்
தேன் பிலிற்றுங் குறும்பலாவே!

என்று முக்கனிசோலையும் உடைய குற்றாலத்தைத் தேனருவி சொரியும் குற்றாலத்தைப் பாடுகிறார்.

திருக்குற்றாலத்தில் ரொம்ப விசேஷமானது தரணி பீடம் என்று அழைக்கப்படும் பராசக்தி பீடம், பராசக்தி ஆதிசக்தியாக பிரும்மா, விஷ்ணு சிவன் மூவரையும் உலக இயக்கத்துக்காகத் தோற்றுவித்தார். சக்தி பீடத்தின் எதிரே தாணு மாலயன் தொட்டில் எப்போதும் ஆடுவதாக ஐதீகம். இந்தத் தலத்துக்கு வேத சக்திபுரம் என்று ஒரு பெயர் உண்டு.

திருக்குற்றாலக் குறவஞ்சி, திருக்குற்றால நாதர் உலா முதலிய எத்தனையோ இலக்கியங்களின் நாயகரான திருக்குற்றால நாதருக்கு அபிஷேகம் நடக்கிறது. மண்டையிடியைப் போக்க மருந்து தைலத்தால் தாரை. பின்னர் வரிசையாக அபிஷேகங்கள். அருவி நீரால் அபிஷேகம் செய்யும் போது— ஆகா — உருக்கிய பொன்னைப் பொழிவது போலத் தோன்றுகிறது. பின்னாலுள்ள நக்ஷத்திர விளக்கின் ஒளி ஊடுருவுவதால் அப்படித் தெரிகிறது என்றாலும் அழகாக இருக்கிறது.

குறவஞ்சியின் தலைவியான வசந்தவல்லி பாடுகின்ற பாடல் நினைவுக்கு வருகிறது.

அருட்கண் பார்வையாலென்
அங்கம் தங்கமாக
உருக்கிப் போட்டார்
கண்ட உடனேதான்

நாமும் தலைவியின் உள்ளத்தோடு ஒத்துப் போய் உருகுகிறோம். ''இந்த சித்தர் யாரோ?'' என்று வியக்கிறோம்.

✖ அரசமரத்தடி செண்பக விநாயகர். அருவிக்கரை போகும்போது முதலில் இவரைத் தரிசிக்க வேண்டும்.



வேத முழுப்பலவின் கனியாகவும், கனியில் வைத்த செந்தேனாகவும் விளங்கும் குற்றால நாதருக்குப் புஷ்ப மாலைகள் சாத்தித் தீபாராதனை செய்கிறார்கள். விபூதிப் பிரஸாதம் வாங்கிக் கொண்டு தேவியின் சந்நிதியை நாடிச் செல்கிறோம்.

எந்தக் கோவிலுக்குச் சென்றாலும் இந்தக் கோவில் கட்டி இரண்டாயிரம் ஆண்டுகள் ஆகியிருக்கும் என்று கூறுவதைக் கேட்டு வந்த எனக்குக் குற்றாலத்துஅண்ணலார் உண்மையாகவே இரண்டாயிரம் ஆண்டுகளைக் கண்டவர் என்று தெரிந்தபோது அளவில்லாத மகிழ்ச்சி உண்டாயிற்று. கடைச் சங்கத்தைச் சேர்ந்த கபிலர் பாடிய சிவபெருமான் திருவந்தாதியில் குற்றாலம் சொல்லப் படுவதால் இந்தத் தலம் மிகவும் தொன்மையானது என்று திருக்குற்றாலத் தல வரலாறு என்ற நூல் குறிப்பிடுகிறது.

ஆனால் அம்மன் சந்நிதியும் பிராகாரமும் சமீப காலத்தில் கட்டப்பட்டிருக்கிறது. அம்பாளுடைய அழகொழுகும் திருநாமம் குழல்வாய் மொழியம்மை. பெயரைப் போலவே அழகிய திருமேனி. மெல்லியலாளாய்க் கொடி போன்ற இடையுடன் எழிலரசியாய்க் காட்சி தருகிறாள். உயரமான கர்ப்பக்கிருகம். தூரத்திலிருந்து கூட தீபாராதனையைக் காணலாம்.

அம்பாள் சந்நிதியிலிருந்து படியிறங்கினால் குறும்பலா மரத்தைக் கண்டு தொழலாம். திருச்சுற்றில் உள்ள தேவர்களையும் தேவிகளையும் வணங்கிக் கொண்டே வரும்போது நன்னகரப் பெருமாள் என்று நாமம் பூண்ட திருமால் சந்நிதியைக் கண்டு வணங்கலாம். திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள அத்தனை ஊர்களிலுமுள்ள ஈசனும், தேவியும் திருக்குற்றால நாதர் கோவிலில் ஒண்டுக் குடித்தனம் செய்கிறார்கள். இந்த ஊரின் ஜிலு ஜிலுப்பும் நீர்வளமும் தெய்வங்களையும் கவர்ந்ததில் வியப்பில்லைதான்.

பராசக்தி பீடத்தை அடைகிறோம். ஸ்ரீ சக்ர மேரு நமது புறக்கண்களுக்குத்தெரியாதபடி அழகான வஸ்திரம் சார்த்திப் புஷ்ப மாலைகள் அணிவிக்கப்பட்டிருக்கிறது! இந்தப் பீடத்தைப் பிரதிஷ்டை செய்தவர் அகத்திய முனிவர் என்று கூறுகிறார்கள். சக்தி பீடத்தை பக்தியுடன் வலம் வந்து வணங்குகிறோம்.

மறுநாள் காலையில் இந்தக் கோவிலை விடத் தொன்மையான கோவில் என்று கருதப்படுகிற கூத்தர் கோவிலைத் தரிசனம் செய்யப் போகிறோம். குருக்களையா வரும் வரையில் காத்திருக்கிறோம். பக்கத்தில் ஓர் ஒலி பெருக்கி அலறுகிறது. யாரோ கீச்சுக் குரலில் பாடுகிறார்கள். அருவியின் ஓசை, சித்ரா நதியின் ஓசை ஒன்றுமே கேட்கவில்லை. ஐந்தருவிக்குப் போன போதும் இதே கதைதான். இரைச்சல்தான். சித்திர சபையைத் தரிசிக்கப் போன போதும் ஏதோ இசைத் தட்டின் கூப்பாடுதான். அடாடா! குற்றாலத்தில் தண்ணீர் ஓடும் இன்ப நாதம் கேட்க முடியவில்லையே என்று வருத்தமாக இருக்கிறது.

குருக்களையா வந்து கதவைத் திறந்தார். சிறிய கோவில் தான். குற்றாலத்துறை கூத்தர் இவர்தான். தெற்கு நோக்கி குழல்வாய் மொழி அம்மை நின்று கொண்டு அருமறைகளைக் கேட்ட செவியினால், நால்வர் பாடல் உகந்து கேட்ட திருச்செவிகளால் ஒலிபெருக்கியின் அலறலைத் தெய்வமே என்று கேட்டுக் கொண்டிருக்கிறார்.

திருக்குற்றால நாதர் கோவில் ராஜ கோபுரம் சிறியதாக இருக்கிறது. அதுவே ஒரு அழகாக இருப்பதோடு குற்றாலநாதர் கோவில் என்பதைப்பார்த்த உடனே தெரியும்படி செய்கிறது. இப்படியே எப்போதும் இருக்கக் குற்றால நாதர் அருள் புரிய வேண்டும். வரலாற்றுப் பெருமை மிக்க கோவில்களை அப்படி அப்படியே வைத்திருப்பது தான் சிறப்பு. புதுப்பிக்கலாம், ஆனால் எந்த அம்சத்தையும் மாற்றி விடக் கூடாது என்பதில் நாம் தீவிரமாக இருக்கவேண்டும்.

பற்பல கல்வெட்டுக்கள் உள்ள கோவில் இது. சோழ மன்னர்களும் பாண்டிய மன்னர்களும் திருப்பணிகள் செய்திருக்கிறார்கள். மனத்தை உருக்குகிற ஒரு செய்தியும் காணப்படுகிறது. சொக்கன்பட்டி என்ற ஊர் அரசனுடைய தேவி வெளிப் பிராகாரம் முழுவதும் கல்லினால் தளவரிசை போடுவதற்குத் தான் அணிந்திருந்த அத்தனை நகைகளையும் கொடுத்தாளாம். முதல் பராந்தக சோழனும், ராஜ ராஜ சோழனும் இந்தக் கோவிலுக்குத் திருப்பணிகள் செய்திருக்கிறார்கள்.

குறவஞ்சி பாடிய திரிகூடராசப்பக்கவிராயர்
''ஓடக்காண்பது பூம்புனல் வெள்ளம்
''ஒடுங்கக் காண்பது யோகியர் உள்ளம்''
என்று.பாடினார். அதனால்தானோ என்னவோ ஐந்தருவி செல்லும் பாதையில் ஏகப்பட்ட மடங்கள் கட்டப்பட்டிருக்கின்றன. ஆனால் இந்த ஜன நெரிசலிலும், சத்தம் சந்தடியிலும் ஆசிரம வாசிகள் எவ்வாறு த்யானம் பயிலுவார்கள் என்று அதிசயிக்கத் தான் வேண்டியிருக்கிறது.

ஆர்வமும் சக்தியும் உள்ளவர்கள் மலை மீது ஏறிப்போய் மரப்பாலத்தைக் கடந்து செண்பக அடவியை அடையலாம். செண்பக வனத்தைக் காக்கும் செண்பக தேவியின் கோவில் அங்கே இருக்கிறது. மே நடக்கும் உற்சவங்கள் நன்றாக நடைபெறுவதற்கு இந்தத் தேவிக்கு ஆராதனை செய்து அனுமதி பெறுகிறார்கள்.

இதற்கும் மேலே பலசாலிகள் மலை ஏறிச் சென்றால் தேனருவியைக் கண்டுகளிக்கலாம். நூறு அடி உயரத்திலிருந்து நீர்சொரியும்.

இதைத்தான்—

தேனருவி திரைஎழும்பி வானின்வழி
ஒழுகும்
செங்கதிரோன் பரிக்காலும் தேர்க்காலும்
வழுகும்


என்று பாடியிருக்கிறார் திரிகூட ராசப்பக் கவிராயர்.

சிற்றாற்றங் கரையானை
திரிகூட வரையானை
குற்றாலத் துறைவானை
குருபரனை வாழ்த்துகிறேன்.

—''குற்றாலக் குறவஞ்சி.''

சென்னை நகரிலும் அதன் சுற்றுப்புறங்களிலும்
பல அருமையான வீட்டு மனைத் திட்டங்களை உருவாக்கித்தந்த
P.V. முரளி தரும் மற்றுமோர் வீட்டுமனைத் திட்டம்.

ஸ்ரீ லக்ஷ்மி நகர்



அரசின் முழு அங்கீகாரம் பெற்றது.

CRDTCP/ M 83/ 252 — L. P. 199.

சென்னையைச் சுற்றிலும் 13 இடங்களில் ரூ.2,000/- முதல் வீட்டு மனைகள் கிடைக்கிறது.

தவணைமுறையிலும் கிடைக்கிறது.

MMDA-வின் 'குட்டி சென்னை' நகரமான மறைமலை நகரையொட்டி அரசாங்கத்தால் கட்டப்பட்டுள்ள 22,000 வீடுகளுக்கு எதிரிலுள்ள இப்புதிய 'ஸ்ரீ லக்ஷ்மி நகர்' அனைத்து வசதிகளுடனும், மின்சார இரயில் நிலையத்திலிருந்து நடை தூரத்திலும், குறைந்த விலையிலும் கிடைக்கிறது.

1800 சதுர அடிகள் கொண்ட பிளாட் ஒன்றின் விலை	ரூ. 6,375/-
2400 சதுர அடிகள் கொண்ட மனை ஒன்றின் விலை	ரூ. 8,500/-

உடனடியாகப் பத்திரம் பதிவு செய்பவர்களுக்கு சலுகைகள் வழங்கப்படும்.
மனைகளை நேரில் பார்வையிட உடனே தொடர்பு கொள்ளுங்கள் :

முரளீஸ் எஸ்டேட்ஸ்

30, மஹாலக்ஷ்மி தெரு, (உஸ்மான் ரோடில் உள்ள சிவா விஷ்ணு கோயிலுக்கு எதிரில்)
தியாகராய நகர், சென்னை-600 017, போன் : 440777.

முரளியின் முதலீட்டு நிறுவனம்

உங்கள் சேமிப்புகளை, அரசு அங்கீகாரம் பெற்ற வீட்டு மனைகள் அடமான பத்திரங்களில் முதலீடு செய்து, பதிமூன்றே மாதங்களில் 22% கூட்டுவட்டி பெற்று பயனடையுங்கள்.

மேலும் அரசு மற்றும் பொது நிறுவனங்களின் ஃபிக்சட் டெபாசிட்டுகளில் முதலீடு செய்ய எங்கள் நிபுணர் குழுவிடம் சிறந்த ஆலோசனைப் பெறுங்கள்.
விபரங்களுக்கு உடனே தொடர்பு கொள்ளவும் :

இந்துஸ்தான் இன்வெஸ்ட்மென்ட் சர்வீஸஸ்

30, மஹாலக்ஷ்மி தெரு
தியாகராய நகர், சென்னை-600 017, போன் : 440777.



பஸ்சி மோத்தாசனம்

சென்ற வாரம் பஸ்சிமோத்தாஸனம் செய்யவேண்டிய பயிற்சி முறையை விளக்கினோம்.

நீரிழிவு நோய்க் காரர்களுக்கு இந்தபஸ்சி மோத்தாஸனம் கைமேல் பலன் தரும் என்கிறார் சண்முகம். சாதாரணமாக உடலுழைப்பு இல்லாதவர்களுக்கு 30—35 வயதுக்கு மேல் நீரிழிவு நோய் தோன்றக் கூடும். ஆனால் ஆசனம் போட்டு வருகிறவர்களுக்கு வராது!

பஸ்சிமோத்தாசனம் செய்யும் போது வயிற்றுப் பாகம் நன்கு அழுத்தப்படுவதால் கல்லீரல் நன்றாக இயங்கும். (பான்கிரியாஸ்) கணையம் செம்மையாகச் செயல்படும். இதன் காரணமாகச்சர்க்கரைச்சத்து கட்டுப்படுத்தப் பட்டு இரத்தம் சுத்தமடையும்.

யோகாசன மகிமை

கருவுற்று மூன்று மாதம் ஆன பெண்களும், குழந்தை பிறந்து ஆறு மாதம் முன்னாலும் இந்த ஆஸனப் பயிற்சியில் ஈடுபடக் கூடாது. மற்றபடி, இருதய நோய் உள்ளவர்கள் கூட இதைச் செய்யலாம். பொதுவாக முன்புறம் உடலை வளைக்கக் கூடிய எந்த ஆஸனமும் இருதய நோயாளிகள் செய்யலாம். ஆனால் நிதானம் தேவை.. டாக்டர்களின் ஆலோசனை பெறுவது நல்லது.

நீரிழிவு தவிர, ஈஸனோஃபிலிஸ், ஸைனஸ், தலைவலி போன்றவற்றுக்கும் இந்த ஆசனம் குணம் தரும். குனிந்து உடலை வளைப்பதால் முதுகுத் தண்டு வளைந்து நரம்புகள் பலப்படும்.

ஜீரண உறுப்புக்கள் நன்கு செயல்படவும், பெருங்குடல், சிறுகுடல் இவை நன்கு இயங்கி, மலம் ஒழுங்காக வெளியேறவும் இந்தப் பஸ்சிமோத்தாஸனம் உதவும்.

பொதுவான ஒரு குறிப்பு:

காய்ச்சல் நேரத்திலும், பயண அலைச்சலின் களைப்போடும், முதல் நாள் இரவில் உடலுறவில் ஈடுபட்டிருந்தாலும், எந்த ஆஸனத்தையுமே செய்வது நல்லதல்ல.

அதேபோல் குளியல் முடித்து அரைமணி நேரமாவது ஆன பிறகே ஆஸனப் பயிற்சியில் ஈடுபட வேண்டும். ஆஸனப் பயிற்சி முடிந்து அரை மணி நேரமாவது ஆன பிறகே குளிக்க வேண்டும்.

சுப்ரபாலன்

ஆயிரம் உதை வாங்கிய அபூர்வ சிகாமணி

படு ஸீரியஸாக நாடகத்தை ஆரம்பித்து எஸ். வி. சேகர் நாடகத்துக்குத்தான் வந்திருக்கிறோமா அல்லது தவறிப் போய் வேறு அரங்கத்தில் நுழைந்து விட்டோமா என்று குழம்பச் செய்து பிறகு ''ஐயோ, என்னால் இந்த ஊசியில் நூலைக் கோக்க முடியவில்லையே!'' என்று தாயார் வருந்த, 'நீங்க மட்டும் என்ன, யாராலயும் இதுல நூல் கோக்க முடியாது. ஏன்னா அது குண்டூசி!'' என்று எஸ். வி. சேகர் மேடைக்கு வந்து சொல்லும் கணத்திலிருந்து நாடகத்தின் போக்கே நகைச்சுவைக்குத் தாவி விடுகிறது. அந்தப் படு ஸீரியஸ் ஆரம்பமும் எஸ். வி. சேகரின் தமாஷ்களில் ஒன்று என்று புரிகிறது. அப்புறமென்ன? ''சட்டசபை கலைக்கப்பட்டது. இனி எம். எல். ஏக்கள் உபயோகமான வேலைகளுக்குச் செல்லலாம்!'' என்று நாடகம் முடிகிறவரை, ஒரே சிரிப்பு மழைதான்!

எஸ். வி. சேகரின் நாடகத்தில் கதையைத் தேடக் கூடாது. கதை எதற்கு? ஜோக்குகளும் சேகர் — சுந்தா ஜோடியும் போதுமே என்பதை நன்கு உணர்ந்தவர்கள் கதை — வசன கர்த்தா கோபு — பாபு. (இவர்கள் இருவரா, ஒருவரா?) இடைவேளைக்குப்பிறகு கொஞ்சம் கதையம்சத்தை, லேட்டஸ்ட் அரசியல் சாயம் தீட்டி, எஸ். வி. சேகரை எம். எல். ஏ. ஆக்கிக் கொட்டம் அடிக்க வைத்திருக்கிறார்கள். சட்டசபை கவிழ்ப்புகள், இன்றைய எம். எல். ஏ. விலைநிலவரம் எல்லாம் யதார்த்தமாகவே சிரிப்பு முலாம் பூசிக்கொண்டு சபையை அதிர வைக்கின்றன.

நகைச்சுவை எழுதுவது கஷ்டம்; அதை விடக் கஷ்டம் சிரிக்க வைப்பது என்றதத்துவத்தை, எத்தனை எளிதாக நகைச்சுவை வசனம் எழுதித் தகர்த்திருக்கிறார்கள் இந்த கோபு — பாபு! சேகர்தான் எத்தனை இயல்பாக வசனம் சொல்லிக் கலகலப்பாக்குகிறார்! இப்படியிருக்க—

அர்த்தமுள்ள வசனம் மட்டும் போதாதோ? இரட்டை அர்த்தமுள்ள வசனம் எதற்கு? இவை இல்லாமலே சேகர் நிச்சயம் சோபிக்க முடியுமே!

— சாருகேசி



"கல்கி"

சந்தா விவரம்

ஆண்டுச் சந்தா	ரூ.	78-00
ஆறு மாதச் சந்தா	ரூ.	39-00
வெளிநாடு கப்பல் தபால் மூலம்		
ஆண்டுச் சந்தா	ரூ.	190/-
ஆறு மாதச் சந்தா	ரூ.	95/-

"மங்கையர் மலர்"

சந்தா விவரம்

ஆண்டுச் சந்தா	ரூ.	24/-
ஆறு மாதச் சந்தா	ரூ.	12/-
வெளிநாடு கப்பல் தபால் மூலம்		
ஆண்டுச் சந்தா	ரூ.	48/-
ஆறு மாதச் சந்தா	ரூ.	24/-

"கோகுலம்"

சந்தா விவரம்

ஆண்டுச் சந்தா	ரூ.	24/-
ஆறு மாதச் சந்தா	ரூ.	12/-
வெளிநாடு கப்பல் தபால் மூலம்		
ஆண்டுச் சந்தா	ரூ.	70/-
ஆறு மாதச் சந்தா	ரூ.	35/-

சந்தா தொகையை M.O. அல்லது I.P.O. அல்லது டிமாண்டு டிராப்டு மூலம் அனுப்ப வேண்டும்.

மானேஜர் * கல்கி * சென்னை-600032



அஞ்சலி

முருகன் கட்சியில் முதல் தொண்டர்

ஆவணி மூலத்தன்று (செப்டம்பர் 4உ) நூற்றாண்டு காணும் திருப்புகழ் மணி டி. எம். கிருஷ்ணசாமி ஐயர் அவர்களுக்கு அஞ்சலி.

● அவருடைய இயற்பெயர் மணி என்றும் திருப்புகழ் பஜனையால் 'திருப்புகழ்' என்பதை அடைமொழியாகக் கொண்டவர் என்றும் பலர் நினைக்கும் அளவுக்குத் திருப்புகழ் மணி என்றே குறிப்பிடப்பட்டவர்... அது காஞ்சி பரமாச்சார்யாள் சூட்டிய விருதாதலால் இவருக்கு நாமகரணம் போலவே ஆகிவிட்டது. டி. எம். என்பது இவருடைய இனிஷியல்கள் அல்லவா? அது பொருந்துமாறே ஸ்ரீ பெரியவாள் திருப்புகழ் மணி என்று பட்டம் சூட்டினாராம். வாஸ்தவம்தான் — இவரது ஜன்மபூமி திருப்புகழ்தான்; இவருடைய அப்பா மணி எனப்படும் சுப்பிரமணியக் கடவுள்தான். சிவசக்தியின் மணிப்பயல் அவன்.

''ஈசனெனக் கருதி எல்லா உயிர்களையும்
நேசத்தால் நீ நினைத்துக் கொள்.''

இவ்வாக்கின் உயிர் கொண்ட விக்ரஹமாகவே வாழ்ந்தார் மணியப்பா. அப்படி என்ன சொன்னார்? என்ன செய்தார்?

● திருப்போரூர் சென்றிருந்தார்; திருக்குளத்தில் பாத சுத்தி செய்து கொள்ள இறங்கினார். அங்கே ஒரு படியில் குஷ்டரோகியொருவன் வாய்விட்டு முருகனிடம் பேசிக் கொண்டிருக்கக் கேட்டார். தாம் கொண்டு வந்திருந்த பழங்களைப் பழனியப்பனின் இந்தப் பாழ்பட்ட உருவத்துக்குப் படைத்தார். தாம் போர்த்தியிருந்த சால்வையை எடுத்து அந்தத் தொழுநோயாளிக்குப் போர்த்திவிட்டுப் புறப்பட்டார். சில காலம் சென்றபின் மயிலையிலுள்ள அப்பாவின் க்ருஹத்தைத் தேடி வந்த அந்தத் தொழுநோயாளியை அணைத்துப் பிடித்துத் தம்முடனேயே காரில் பஜனைக்கு அழைத்துச் சென்றார்.

● வறுமையில் வருந்துவோருக்கு அள்ளிக் கொடுத்திருக்கிறார். ''இது என் பணம், நான் கொடுக்கிறேன் என்று நினைத்து விடாதே. உன் பணமே தான். அதை என் மூலம் முருகன் உன்னிடம் சேர்ப்பிக்கிறான்'' என்று சொல்லிக் கொடுப்பார்.

● சங்கு சுப்பிரமணியம் சொல்வாராம், அப்பாவுக்குக் கைராசி, கால்ராசி இரண்டும் உண்டு என்று. இவர் காலை வைத்துவிட்ட இடம் அமோகமாக வளரும்,...அவ்வாறே, இவர் கையால் ஒருவருக்கோ ஒரு ஸ்தாபனத்துக்கோ கொடுத்து விட்டால் அவர், அல்லது அது, அற்புதத் தளிர்ப்பு காண்பது நிச்சயமாம். இதைக் கருத்தில் கொண்டு தான் கல்கியவர்கள் தம் பெயர் கொண்ட ஏட்டினைத் தொடங்குகையில் இவரிடம் சந்தாவுக்கு வந்தது.

● அப்பாவின் பஜனையில் ஆர்ப்பாட்டம் செய்யவென்றே திராவிடக் கழக எதிர்ப்பாளர்கள் வந்து முதல் வரிசையில் உட்கார்ந்தார்கள். அப்பா இப்படி ஆரம்பித்தார்: ''ஒருவனுக்குத் தனியாக ஒரு கட்சியிருந்தால்தான் அவனை எதிர்க்கவும் கட்சி கூட்ட முடியும். எனக்கு எந்தக் கட்சியுமில்லை. அப்படி ஏதாவது கட்சியிருக்குமானால் அது ஸகல ஜீவராசிகளிடமும் ஒரே போன்ற அன்பு கொண்ட முருகனின் கட்சிதான் என்னுடையது.''... பரிஹஸித்த அந்த அறியாதார் பரமனைப் பிரார்த்திப்பவர்களாகத் திரும்பினார்கள்.

● வீதி பஜனையில் மாடும், நாயும் உள்ளே புகுந்து விட்டால் பஜனை கோஷ்டியினர் அந்தக் குழந்தைகளை விரட்ட அப்பா அனுமதிக்க மாட்டார். ''கந்தனும், சண்முகனும் நம்மோடு பஜனையில் கலந்து கொள்ள இந்த ரூபங்களில் வந்திருக்கிறார்கள். அவர்களையா விரட்டியடிப்பது?'' என்பார்.

எறும்பைக் கொல்லாமல் ஓரமாகத் தள்ள வேண்டுமென்பார். அப்படித் தள்ளும் போதும் மிருதுவாகவே தள்ள வேண்டும். அழுந்தத் தள்ளினால், ''முருகனுக்கு வலிக்கும் அப்படிச் செய்யாதீர்'' என்பார்.

● ராமநாமாவைப் பாடிக்கொண்டே வீதி பெருக்கும் சூரி என்ற தோட்டியைத் தம் மூத்த மகன் என்றே சொல்வாராம். ஒரு ராமநவமி காலையில் ராமநாமம் மிதந்து வந்தது சூரியின் குரலிலே.

உடனே மாட்டுப் பெண்ணை அழைத்து ஒரு தட்டில் தாம்பூலமும் ஆறு ரூபாயும் வைத்துக் கொண்டு வரச் சொன்னார். அதை சூரிக்கு அளித்து, ''ஸ்ரீ ராமனைத் திருப்தி செய்து விட்டேன்'' என்றார்.

● திருவனந்தபுரம் ஹைகோர்ட் நீதிபதியாக இவர் பதவி வகித்த காலத்தில் நகர துப்புரவு சங்கத்தின் தொடக்க விழாவுக்குத் தலைமை தாங்க அழைத்தார்கள். சொற்பொழிவோடு நின்று விடாமல் தொழிலாளர் ஒருவர் கையிலிருந்து தட்டி விளக்குமாற்றைப் பிடுங்கி, அழுந்தப் போட்டுப் பெருக்கி, ''இப்படித்தான் பெருக்கணும்'' என்று சொல்லிக் கொடுத்தார்.

● மனத்திலுள்ள குப்பைக் கூளங்களை அகற்றும் இறை பணியாளரான அப்பா, திருவிதாங்கூர் ராஜ்ய நீதிமன்றங்களில் 'யுகாந்திரமாக'க் குவிந்திருந்த கேஸ்கட்டுக் குப்பைகளையெல்லாம் நாலே ஆண்டில் துப்புரவு செய்த வித்தையோடு, மெய்யாலுமே தெருக் குப்பையைக் கூட அகற்றிக் காட்டிய அருமையை ஏடுகள் புகழ்ந்தன.

(1983 கல்கி தீபாவளி மலரில் ரா. கணபதி எழுதிய கட்டுரையிலிருந்து)

அருள்வாக்கு

மற்ற எந்த அவயவத்தையும் விட வாய்க்குத்தான் வேலை ஜாஸ்தி. ருசி பார்ப்பது அதாவது சாப்பிடுவது, பேசுவது என்று அதற்கு இரண்டு காரியம் இருப்பதாலேயே இரண்டையும் பாதியாகக் குறைத்துக் கொள்ள வேண்டும் என்பதுதான் பரமேச்வரன் அபிப்பிராயமாக இருக்க வேண்டும். 'வயிற்றைக் கட்டி வாயைக் கட்டி' என்கிற போது சாப்பாடு, பேச்சு இரண்டையும் கட்டுப்படுத்துவதுதான் தாத்பர்யம் ஆனால் நேர்மாறாகப் பண்ணுகிறோம். இரண்டு வேலையும் தேவைக்கு அதிகமாகக் கொடுக்கிறோம். வாய்தான் ரொம்ப Over-worked! அமிதபோஜனமாக ஓயாமல் ஏதாவது சாப்பாடு, நொறுக்குத்தீனி, பானம் என்று உள்ளே தள்ளிக் கொண்டேயிருக்கிறோம். எப்போது பார்த்தாலும் வெட்டியாக ஏதாவது பேசிக் கொண்டேயிருக்கிறோம்.



இந்த இரண்டையும் ரொம்பக் குறைத்துக் கொள்ள வேண்டும் 'கண்டதைத் தின்று கெடுதலை வரவழைத்துக் கொள்ளாதே! ஸாத்வீக ஆகாரம் மட்டும் மிதமாகச் சாப்பிடு. அதுவும் கூட இல்லாமல் அவ்வப்போது உபவாசமிரு' என்கிறது சாஸ்திரம். இதே போல 'வாயில் வந்ததைப் பேசிக் கொண்டே போகாதே. அதனால் பிறத்தியாளையும் கெடுக்காதே. பகவத் விஷயமாகப் பேசு, பாடு, பஜனை பண்ணு' என்று சொல்லிவிட்டு, உபவாஸத்தில் ஸாத்விகாஹாரம் கூடப் பண்ணப் படாது என்று வைத்திருக்கிற மாதிரியே 'பகவத்பரமான பேச்சும், கீர்த்தனமும் கூட இல்லாமல் அவ்வப்போது வாயை மூடிக் கொண்டு மௌனமாக இரு' என்று பெரியோர்கள் உபதேசித்திருக்கிறார்கள்.

இப்போது எங்கே பார்த்தாலும் பேச்சுத்தான். 'பேச்சாளர்கள்' என்றே பலர். ஒலிபெருக்கி வைத்து மீட்டிங்குகள். கல்யாணம், கார்த்திகை, வேறே விழாக்கள் என்று எங்கே பார்த்தாலும் 'லௌட்ஸ்பீக்கர்' வைத்து சத்தம். இந்த அவஸ்தையைப் பார்க்கிற போது மௌனம் அதை அனுஷ்டிக்கிறவனுக்குச் செய்கிற நல்லது ஒருபுறம் இருக்கட்டும், இது ஸமூஹத்துக்கே செய்கிற தொண்டு என்று தோன்றுகிறது.

இத்தனை வாதப் பிரதிவாதச் சண்டையும் பேச்சால்தானே? மௌனம் அனுஷ்டித்தால் அன்றைக்காவது சண்டை சச்சரவு இராது. ''மௌனம் கலஹம் நாஸ்தி.'' இதுவும் ஒரு ஸமூஹ சேவைதான்.

-ஜகத்குரு ஸ்ரீகாஞ்சி காமகோடி
சந்திரசேகரேந்திர ஸரஸ்வதி
சங்கராசார்ய சுவாமிகள்

புதிர் போட வந்தானே

1. அந்தமான் இந்த மான்
புள்ளிமான் மூன்றுமான்
புள்ளிமான் மூன்றுமானில்
பிடித்தமான் எந்தமான்?

கலையைத் தொடுத்தவளே!
தண்ணிக் கொண்டு போறவளே!
தழையைத் தின்னும் மான்
தனிப்பட்ட மான்!

2. ஏரிக்கோரை தீய வேண்டும்
சம்பளமில்லாத சேவகன் தூங்க
வேண்டும்
சட்டிக்கும், மத்துக்கும்,
நடுவிலே வரவேண்டும்.

3. வெந்து சிவந்திருக்கும் வீட்டில்
நின்று சிவந்திருக்கும் பெண்ணே!
உன் புருஷன் எங்கே?
என் புருஷன் தலைக்கு மேலே!
ஊரவன் புருஷன் என் மடிமேலே!
ஒரு புருஷனுக்கு வாழ்க்கைப்பட்டேன்
ஒன்பது புருஷனுக்குப்பிள்ளைபெற்றேன்
ஆனாலும் நான் விபசாரி இல்லை!

'அச்சமில்லை, அச்சமில்லை' படத்தில் சுடலி (அகல்யா) பலவேசம் (கோபி)க்கு புதிர் போடுகிறார் அல்லவா? இங்கே கோபி வாசகர்களுக்குச் சில புதிர்கள் போடுகிறார்: விடுவியுங்கள் பார்க்கலாம்!



இதோ விடைகள்:

1. காலையில் இரண்டு பெண்கள் தண்ணீர் கொண்டு வரக் குளத்துக்குப் போகிற போது, வழியில், அவர்களில் ஒருத்தியின் காதலன், இன்னும் இரண்டு பேருடன் குச்சியால் பல் துலக்கிக் கொண்டிருக்கிறான். தோழி இந்த மூன்று பேரில், உன் காதலன் யார் என்று கேட்கிறாள். அதற்குக்காதலி, "கேள்வி கேட்டவளே! தண்ணீர் கொண்டு வரப் போகிறவளே! நுனியில் உள்ள தழையை ஒடிக்காமல், குச்சியால் பல் துலக்குவது தான் என் காதலன்" என்று பதில் சொல்கிறாள். (தழையை ஒடிக்காமல் பல் துலக்குவது, தழையைத் தின்பது போலத் தோன்றுகிறது.)

2. காதலன், காதலியை எங்கே எப்போது, சந்திக்கலாம்?' என்று கேட்க, அவள் சொல்கிற பதிலே இந்த விடுகதை. சின்னஞ்சிறு ஏரி போன்றது அகல் விளக்கு. ஏரியில் கோரைப்புல் போல அகலில் திரி. திரி எரிந்து, விளக்கு அணைகிற நேரத்தில், சம்பளமில்லாத சேவகனை நாய் தூங்கிய பின் வரவேண்டும். எங்கே? சட்டி, பானை செய்கிற குயவன் வீட்டுக்கும், (மத்து போன்ற) மரச்சாமான்கள் செய்கிற தச்சன் வீட்டுக்கும் நடுவில் உள்ள என் வீட்டுக்கு.

3. "வெந்த செங்கல் வீட்டில், வாய்சிவக்க வெற்றிலை போட்டிருக்கிற பெண்ணே! உன் கணவன் எங்கே?' என்று ஒருத்தி கேட்க, அதற்கு அந்த வீட்டுக்காரி சொல்கிற பதில்: "என் புருஷன் தலைக்கு மேலே' என்பதற்கு, என் புருஷன் வீட்டின் கூரை மேல் ஏறி, ஏதோ வேலை செய்து கொண்டிருக்கிறான்' என்று பொருள். ஊரவன் புருஷன் — எங்கோ பிறந்துள்ள ஒருத்திக்குக் கணவனாகப் போகிற என் பிள்ளை இதோ என் மடிமேலே ஒரு புருஷனுக்கு வாழ்க்கைப் பட்டு, ஒன்பது புருஷனுக்கு பிள்ளை பெத்தேன் என்றால், என் கணவனுக்குவாழ்க்கைப் பட்ட நான், ஒன்பது பேருக்குக் கட்டிக் கொடுக்க ஒன்பது பெண் பிள்ளைகளைப்பெத்திருக்கிறேன் என்பது பொருள். நீங்களே சொல்லுங்கள்! இந்தப் பெண்மணி நடத்தை கெட்டவளா என்ன?

நன்றி: ஆறு ராமநாதனின் 'காதலர் விடுகதைகள்' தொகுப்பு: ஜஸி

கீழே இறங்கிய குரங்கு

அன்று காலை வேலைக்குப் புறப்பட்ட போது அஞ்சலைக்குச் சத்தியம் செய்து கொடுத்து விட்டுத்தான் மாணிக்கம் கிளம்பினான். 'இனிமேல் குடிக்க மாட்டேன்.'

இப்போது மணி நாலரை. இன்னும் ஒருமணி நேரம். 'வேலை முடிந்து நேராக வீட்டிற்குச் சென்று விடலாமா?' மனத்தில் குறுகுறுப்பு. கொஞ்சம் கொஞ்சமாக மனத்தில் குடிபுகுந்தது, 'ஐந்தாம் நெம்பர் சாராயக்கடை.' பெயர்ப்பலகை கண்ணில் பட்டது.

ஐந்தரை மணிக்கு மாணிக்கம் வெளியே வந்த போது அவனுடைய சக ஊழியன் பொன்னம்பலமும் ஒட்டிக் கொண்டான்.

''என்னப்பா வாயைத் தச்சுக்கிட்டயா? பேச்சு மூச்சே காணுமே!...''

நண்பனின் கேள்வி அவனை இடறி விட்டது. கையில் புகைந்து கொண்டிருந்த சிகரெட் விரலைச் சுட்டது. மனைவியின் திருமுகம் கண்ணில் பட்டது.

சாராயக்கடை நெருங்கியது. காக்கி உடுப்பின் பக்கவாட்டில் பையில் கையை நுழைத்தான். பர்சைக் காணோம். 'எங்கே தவற விட்டோம்?' சிந்தித்தான். குழம்பினான். ''பர்சைக் காணலே...'' என்றான் தயங்கியபடியே.

''உன் தயவுல இருநூறு மில்லி உள்ளே அனுப்பலாம்னு நெனைச்சிட்டிருந்தேன். சரி; வூட்டுக்குப் புறப்படுவோம்...''

ஆதாயம் தேடப் பார்த்த நண்பன் அலுத்துக் கொண்டான்.

அப்போது ''அப்பா!''... என்று அழைத்துக் கொண்டே ஓடிவந்தான் முத்து, மாணிக்கத்தின் மகன்.

''காலையிலே மணிபர்சை எடுத்துக்காமக் கிளம்பிட்டீங்களாம். பெட்டி மேலே கெடந்திச்சாம். அம்மா உங்ககிட்ட கொடுத்திட்டு வரச் சொல்லிச்சு...''

''நான் இங்கே இருப்பேன்னு உனக்கு எப்படிடா தெரியும்...?''

''அம்மாதான் சொல்லிச்சு. 'அஞ்சாம் நெம்பர் கடையில அப்பாரு இருப்பாரு. சீக்கிரம் போ'ன்னு சொல்லி வெரட்டிவிட்டிச்சு. அதோ! பெட்டிக்கடை முன்னால அம்மா நின்னுக்கிட்டிருக்குது பாருங்க...''

அவனுடைய சத்தியத்தின், வைராக்கியத்தின் வலு தெரிந்து அவனை இடித்துக் காட்டுகிறாற்போல், கேலி செய்கிறாற்போல், கைகொட்டிச் சிரிக்கிறாற்போல் தூரத்தே தெரிந்த அஞ்சலை தோன்றினாள்.

''அதான் பணம் தந்தி மாதிரி வந்திட்டுதே. இனியும் ஏன் தயங்கிக்கறே?'' என்று கேட்ட நண்பனிடம், ''இல்லேப்பா, இனிமே குடிக்கிறதில்லேன்னு என் பொஞ்சாதிக்குச் சத்தியம் செஞ்சு கொடுத்திருக்கேன்...'' என்று சொல்லிவிட்டு மகனின் கையைப் பற்றியபடி நடந்தான் மாணிக்கம்.

'வினோதானந்த்'



குளோஸ் அப்



பேச்சிலே நிதானம்! நடையிலே வேகம்!

நம் பிரதமர் விஷயத்தில் - என்னை ரொம்ப ஆச்சரியப்படுத்துவது அவரது அபாரமான சுறுசுறுப்பு. அழகான, களையான முகம்; எப்போது பார்த்தாலும் புத்துணர்ச்சியுடன் இருப்பார். நடக்கும் போது ஒரு வேகம்; பேசும் போது ஒரு நிதானம்.

பத்திரிகையாளர்க் கூட்டங்களில், திருமதி காந்தி, நிருபர்களைச் சமாளிக்கிற விதமே அலாதிதான். எந்தக் கேள்வியானாலும் உடனே பதில் சொல்லி விடுவார். பதில் சொன்னதும் தம் கடமை முடிந்து விட்டது போல, அடுத்த கேள்விக்குத் தாவி விடுவார். உபகேள்விகளைத் தவிர்த்து விடுவார். சிலசமயங்களில், கேட்ட கேள்விக்கு அவரது பதில் முழுமையான விளக்கம்தருவதாய் அமையாது. ஆனாலும் அவர் அதுபற்றியெல்லாம் கவலைப்பட மாட்டார்.

தர்மசங்கடமான கேள்விகளுக்குப் பதில் சொல்ல வேண்டிய சந்தர்ப்பங்களில், ஏதாவது சொல்லி மழுப்பி விடுவதோடு மட்டுமல்லாமல், கேள்வி கேட்டவரையே, முகத்திலடித்தாற்போல, பதில் கேள்வி கேட்டு, வாயடைத்துப் போகச் செய்து விடுவார்.

நான் கவனித்த இன்னொரு விஷயம், சுற்றுப் பயணங்களின் போது அவர்கொஞ்சம் டென்ஷனோடு தான் இருப்பார். முகத்திலே எரிச்சல் படுவது தெரியும். அதைச்சில சமயங்களில் சுற்றியுள்ள காங்கிரஸ்காரர்கள் மேல் காட்டுவதும் உண்டு. இந்த மாதிரி எரிச்சலுக்குக் காரணம், தொடர்ந்து பயணம் செய்வதன் விளைவாய் ஏற்பட்ட, களைப்பாய்க் கூட இருக்கலாம்.

இந்திராகாந்திக்கு சயன்ஸ், டெக்னலஜி போன்ற துறைகளில் அபரிமிதமான ஈடுபாடு உண்டு. ஸ்ரீஹரிகோட்டாவில், செயற்கைக்கோள் ஏவுகிற நிகழ்ச்சியின் போது, நம் பிரதமர், அங்கே வரவேண்டிய கட்டாயம் இல்லை. ஆனாலும், ஆர்வம் காரணமாய், ஸ்ரீஹரிகோட்டா வந்திருந்தார். அன்றைக்கு இருந்ததைப் போல, சந்தோஷமான 'மூட்' வேறு எந்த சந்தர்ப்பத்திலாவது அவருக்கு இருந்திருக்குமா என்பது சந்தேகமே!

இந்தியப் பெண்கள் மட்டுமின்றி, வேற்று நாட்டுப் பெண்களாயிருந்தாலும் சரி, பல்வேறு துறைகளிலும் ஈடுபட்டு, சாதனைகள் புரிவது என்பது திருமதி காந்திக்குப் பிடித்த விஷயம். அவர்களைப் பல்வேறுவழிகளிலும் அவர் உற்சாகப்படுத்துவார்.

கடைசியாக, இந்திரா என்கிற பெண்மணியைப் பற்றி—பார்ப்பவர்களைக் கவர்கிற அழகான முகம். அழகான புன்சிரிப்பு (சில சமயங்களில் செயற்கை). மிகவும் நல்ல டேஸ்ட் உள்ளவர். உடை விஷயத்தில் அதிக கவனம் செலுத்துபவர்.

இந்திரா என்கிற நிர்வாகி பற்றி — மிகத் திறமையான நிர்வாகி. ஆனால் தம் திறமை முழுவதையும் உபயோகிக்கிறாரா என்பது கேள்விக்குறிதான்!

அனிதா பிரதாப் சொல்ல

எஸ். சந்திரமௌலி






ஈக்வடார் நாட்டைச் சேர்ந்த விடா மொனரஸ் என்னும் பெண்ணுக்கும் பெட்ரோ பானி வியோ என்பவருக்கும் திருமணம் நடந்தது. திருமண வரவேற்பின் போது மணப்பெண் விடா தன் முன்னாள் காதலர்கள் 17 பேர்களுக்கும் பிரிவு முத்தங்களை வழங்கினாளாம். அக்காட்சியைக் கண்டு கண்ணீர் வடித்தபடி ஓடிப் போன மணமகன் இன்னும் திரும்பி வரவில்லையாம்.

ஆதாரம்: 'சன்'. தோபஞ்ச.

இந்திய விமானம்



மெக்கன்ரோவை வென்றவர்

நவப்பயன்

○ கமாலி, மேலப்பாளையம்.

? சுமார் 200 எம். எல். ஏக்களைக் கட்டிக் காக்கத் தெரியாத என். டி. ராமராவால் 5 கோடி மக்களை எப்படிக் கட்டிக் காக்க முடியும்?

! தம்மால் நியமிக்கப்பட்ட ஒரு ஆளுனரையும் மாநில சட்டசபைக்கட்சித் தலைவரையும் கட்டிக்காக்கத்தெரியாத இந்திரா காந்தியால் 70 கோடி மக்களை எப்படிக் கட்டிக் காக்க முடியும்?

○ எஸ். சம்பத்குமார், சென்னை—5.

? இந்திய விமானம் மீண்டும் கடத்தப்பட்டு விட்டதே?

! 1. விமான நிலையங்களில் பாதுகாப்பு சோதனை ஏற்பாடுகளை இன்னும் பலப்படுத்த வேண்டும் ' 2. ஹைஜாக்கர்களைச் சமாளிக்க போலீஸில் ஒரு பிரிவினருக்கு ஜூடோ, கராத்தே, ரிவால்வர் —சுத் திட்டிப் பிரயோகம் போன்றவற்றில் சிறப்புப் பயிற்சி அளிக்க வேண்டும். இவர்களில் இரு போலீஸ் அதிகாரிகளை சில காலத்துக்கேனும் எல்லா விமான ஃபிளைட்களிலும் சாதாரண பிரயாணிகளைப் போலவே பயணிக்கச் செய்ய வேண்டும்.

○ ஏ. அப்துல் முனிர், ஒசூர்.

? நகைச்சுவை எப்படி இருக்க வேண்டும்?

! கிசுகிசு மூட்ட அவசியமின்றிச் சொன்னவுடன் சிரிக்கும்படி அல்லது படித்தவுடன் புன்னகைக்கும்படி அமைய வேண்டும். முன் கூட்டியே தயாரித்துக் கொண்டு வராமல் சந்தர்ப்பச் சூழ்நிலையொட்டி அந்தக் கணத்தில் தோன்றுகிற இயல்பான நகைச்சுவை அதிகமாக ரசிக்கப்படும். (உ—ம்) சதாசிவம் விருந்து கொடுத்தார். கல்கிக்கு எதிரே டி. கே. சண்முகம். கல்கி உரக்கச் சொன்னார்: ''ஷண்முகம் கத்தரிக்காயை எறிந்து விடாதீர்கள்! நம்ம சதாசிவம் தம் தோட்டத்திலேயே பயிரிட்டது. ஒவ்வொரு கத்தரிக்காயும் அடக்கவிலை இரண்டரை ரூபாய்!'' என்றார். சதாசிவம் உள்பட அனைவரும் கொல்லென்று சிரித்தனர். (பி. கு.) அமரர் கல்கி பிறந்த தினம் 9.9.1899.

○ இரா. மு. குமார், திருவானைக்கோவில்.

? இனிமேலாவது எதிர்க்கட்சிகள் ஒற்றுமையாகச் செயல்படுமா?

! இந்திராவைப் பதவி இறக்கம் செய்வது ஒன்றே திட்டம் என்றால் அது ஒற்றுமையில்லை, வெற்று—மை. 'நான் பதவிக்கு ஆசைப்படவில்லை. எனக்குப் பிரதமர் பதவி வேண்டாம்' என்று வாஜ்பாயி ஒருவருக்குத்தான் சொல்லத்தைரியம்வந்திருக்கிறது. எல்லாருமே இந்த மனப்பக்குவத்தை அடைந்தால்தான் அடிப்படை செயல் திட்டம் உருவாக்கி நிறைவேற்றவும் முடியும். அதுவரை இ. காங்கிரஸ் காட்டிலே மழை.

○ வாசுகி, செங்கல்பட்டு.

? பார்லிமெண்டில் பேராசிரியர் மதுதண்டவதே பணி குறித்து?

! 1. சிந்தனைத் தெளிவு, 2. விஷயஞானம், 3. ஆணித்தரமான வாதம், 4. சுதந்திர சிந்தனை — நான்கும் இணைந்தவர் மது



வழிநடலில்....

டாப்?

தண்டவதே. இவரைப் போன்ற சிலரேனும் நாடாளுமன்றத்தில் இருப்பது ஜனநாயக உணர்வுள்ள இந்தியர்கள் செய்த தவப்பயன். இலங்கைத்தமிழர் பிரச்சினை பற்றிப் பேசுகையில், (அ) ஒரு நாட்டின் உரிமைகளை விட மனித உரிமைகள் மேலானவை, (ஆ) 1956முதலே தமிழர்கள் தாக்கப்பட்டு வந்துள்ளனர் என்றாலும் இப்போது ராணுவத்தினால் நசுக்கப்படுகிறார்கள். இது ஒரு இனத்தையே திட்டமிட்டு அழிப்பதற்கு ஒப்பானதாகும். (இ) இலங்கைத் தலைவர்கள் ஈழத் தமிழர் பிரச்சினைக்கு அரசியல் ரீதியான தீர்வு காண்பதற்குப் பதில் ராணுவ ரீதியான தீர்வு காண முனைந்திருக்கிறார்கள். (ஈ) இலங்கை ஜனாதிபதி புதுடில்லி வந்திருந்த போது சுயாட்சி குழுக்களைப் பிரச்சினைக்குரிய பிரதேசங்களில் நிறுவுவதாக வாக்களித்ததைத் தற்போது காற்றில் பறக்கவிட்டு விட்டார் — என்றெல்லாம் வெளுத்து வாங்கியிருக்கிறார்.

மீண்டும் கடத்தப்பட்டுவிட்டதே?

○ டி. எஸ். சீதாராமன், கும்பகோணம்.

? எழுத்தாளர் பிரேம்சந்த் என்ற தலைப்பில் பிலிம்ஸ் டிவிஷன் தயாரித்த டாகுமெண்டரி படம் பார்த்தேன். இதுபோல் தமிழ் எழுத்தாளர்களில் யாரையாவதுபற்றி டில்லிசர்க்காரில் படமெடுத்திருக்கிறார்களா?

! முதலில் தமிழ் எழுத்தாளர்கள் தங்களுள் ஒருவரைச் சாதனையாளர் என்றதாக ஒப்புக் கொள்ளட்டும். அப்புறம் பார்க்கலாம்.

○ எஸ். டி. சுதர்சன், நங்கநல்லூர்.

? மோகன், சுரேஷ் — அசதி வழிவதில் யார் டாப்?

! இதோ இரண்டு பேரும் ரேஸ் ஓடிக் கொண்டு வருகிறார்கள். மோகன் கொஞ்சம் லீட் எடுத்து வருகிறார்.... ஃபினிஷிங் பாயிண்ட்டை நெருங்குகிறார்... மோகன் தான் ஜெயிப்பார் என்று நினைத்துக் கொண்டிருக்கும் போது... சுரேஷ் முழு மூச்சுடன் ஓட..... அட.



○ திறமைசாலி... யார்?

சட் இரண்டு பேரும் ஒரே சமயத்தில் மூக்கை நீட்டி விட்டார்களே... என்ன பண்ண?

○ எஸ். எம். முத்து, கொமாரபாளையம்.

? தூங்காமல் தூங்கிச் சுகம் பெறும் அனுபவம் உண்டா?

! ஞாயிற்றுக்கிழமை. கொஞ்சம் லேட்டாக எழுந்து, வழக்கத்தை விட லேட்டாகச் சாப்பிட உட்கார்ந்து, சற்று தாராளமாகவே சாப்பிட்டுவிட்டு, பத்திரிகையைப் பிரித்து வைத்துக்கொண்டு ஃபேனுக்கு அடியில் ஈஸிசேரில் சாய்ந்தால் சில நிமிஷங்களுக்குள் படிக்கிற எழுத்து மறைய ஒரு சிவந்த இருள் சூழ்கிற சுகம் இருக்கிறதே... அடடா... என்று சொல்ல ஆசைதான். ஆனால் பலருக்கு இன்பமாக இருக்கிற இதுவே எனக்கு மாலைநேரத் தலைவலியாக முடிகிற காரணத்தால் இதை அனுபவிக்க விருப்பமில்லை. தூங்காமல் தூங்குவதை விட இரவு ஆறுமணி நேரம் அயர்ந்து தூங்குவதே சாலச் சிறந்தது. எனக்கும் ஏற்றது.

○ பி. ஆர். பார்த்தசாரதி, மன்னார்குடி.

? நீங்கள் எழுதிய முதல் கதை எது?

! 1942—ம் வருஷம் மூன்றாம் வகுப்புப் படித்துக் கொண்டிருந்தேன். படத்தைப் பார்த்துக் கதை எழுது என்று பாடப் புத்தகத்தில் கொடுத்திருக்கும். அப்போது சிங்கத்தைக் காப்பாற்றிய எலி என்ற தலைப்பில் எழுதியதுதான் நான் எழுதிய முதல் கதை.

○ ரம்யா, கோவை—16. ★

? ஜக்மோகன், ராம்லால், யார் திறமைசாலி?

! சதித் திட்டத்தில் வெற்றிபெற்றுஅன்னையின் இருப்பினைச் சம்பாதித்துக்கொண்ட ஜக்மோகனை விடவும் சதித் திட்டத்தில் தோல்வியுற்றும் அம்மையாரைக்காட்டிக் கொடுக்காமல் தம்மைப் பலியாடாக்கிக் கொண்ட ராம்லால்தான் அதிக திறமைசாலி. இந்தத் திறமைக்கு சன்மானம் நமக்குத் தெரிய வராவிட்டாலும் அவருக்குக் கிட்டாமல் போகாது. எத்தனையோ அயல்நாடுகள் இல்லையா, ஏதாவதிலும் ஒன்றில் இந்தியத் தூதுவராக நியமித்தால் ஆயிற்று!

○ ஆர். அப்துல் சலாம், திருச்சி.

? ஓதைறயோவில் விம்பிள்டன் சாம்பியன் மெக்கன்ரோவை விஜய் அமிர்தராஜ் வென்றது பற்றி...?

! அடுத்த நாளே விஜய் அமிர்தராஜை, ரமேஷ் கிருஷ்ணன் அதே ஏ. டி. பி. டூர்னமெண்டில் தோற்கடித்ததாகச் செய்தி வந்ததே! பூனைக்கு ஒரு காலம் வந்தாலும் யானை யானைதான்! (கோபிக்க வேண்டாம் புலி கூட பூனை இனமே!)

★ ரூ. 10 பரிசு பெறுபவர்:
ரம்யா,
52, அம்மன் கோயில் வீதி,
ஒண்டிப்புதூர் கோவை—16.

○ பிறந்தநாள்

○ டாக்குமெண்டரி





கல்கி

1984 செப்டம்பர் 9
மலர்: 43 இதழ்: 6
ரக்தாக்ஷி ஆவணி 24



பத்திரிகை தர்மத்துக்குப் பிறந்தநாள்!

செப்டம்பர் 9. அமரர் கல்கி பிறந்ததினம்.

அமரர் கல்கி மட்டுமா? பத்திரிகை தர்மம் பிறந்த தினமே அதுதான். தன்னலமற்ற சமுதாயத் தொண்டு பிறந்த நாளும் அதுதான். கலாரசனையும் விருப்பு வெறுப்பற்ற விமர்சனமும் அன்றுதான் பிறந்தநாள் கொண்டாடுகின்றன.

கல்கி எழுதத் தொடங்கினார், சிற்ப சித்திரங்களும் கர்நாடக இசையும் பரதமும் மறுமலர்ச்சி பெற்றன. பட்டிதொட்டிகள்தோறும் மக்களிடையே தமிழார்வமும் படிப்பார்வமும் பெருகின.

சிறுகதைகள், கட்டுரைகள், நெடுங்கதைகள், சமூக நாவல்கள், பயணக் கட்டுரைகள், அரசியல் தலையங்கங்கள், கலை விமர்சனங்கள் — என்று எழுதிக் குவித்தார் கல்கி! சரித்திர நாவல்கள் எழுதிச் சரித்திரம் படைத்தார். இன்று பத்திரிகைகள் கையாள்கிற ஆரோக்கியமான உத்திகள் அனைத்துக்கும் பிதாமகர் அவர்தான். விஞ்ஞானக் கதைகளைக் கூட அவர் விட்டு வைக்கவில்லை என்பார் சுஜாதா. அவரது சோலைமலை இளவரசியையும் மோகினித் தீவையும் உதாரணம் காட்டுவார்.

விழாக்களுக்கும், பொதுக் கூட்டங்களுக்கும் போக நேரம் இருந்தது கல்கி அவர்களுக்கு. பாரதி மண்டபம், காந்தி மண்டபம் என்று நிலையான ஞாபகச் சின்னங்களை உருவாக்கிக் காட்டினார். சுதந்திரப் போராட்ட வீரராகவும் தியாகியாகவும் விளங்கிய அவர் மூட நம்பிக்கைகளை ஒழிக்கப் பாடுபடும் சீர்திருத்தவாதியாகவும் இருந்தார். மதுவிலக்கு, விதவா விவாகம், ஹரிஜன ஆலயப் பிரவேசம் என்று பாடுபட்டார். பால்ய விவாகம், விதவைகளை அலங்கோலமாக்குதல், எதற்கெடுத்தாலும் நாளும், வேளையும், சகுனமும் பார்த்தல் போன்றவற்றை வன்மையாய் எதிர்த்தார்.

தமது புனைபெயர் தாங்கிய பத்திரிகையை நல்லனவற்றுக்கு ஆதரவு அளித்துத் தீமைகளை எதிர்க்கும் தார்மீகப் பொறுப்பு ஏற்கச் செய்தார். ராஜாஜி கம்யூனிஸத்தின் முதல் எதிரி என்று தம்மை வர்ணித்துக் கொண்டார். கல்கி அப்படி ஏதும் வர்ணித்துக் கொள்ளாமலே ஆபாசத்தின் முதல் எதிரியாகத் திகழ்ந்தார்.

இவை எல்லாவற்றுக்கும் மேலாக அனைத்திலும் நகைச்சுவைக் கண்ணோட்டத்தைப் புகுத்தியதில் கல்கி தம் நிகரற்றுத் தனிச்சிறப்புடன் ஒளிர்ந்தார். கல்கி நன்றியுரை கூறுகிறார் எனில் ஒருவர் கூட எழுந்து போக மாட்டார்கள் என்பது அவரது சிரிக்க வைக்கும் ஆற்றலுக்குச் சிறப்புச் சான்று.

இவ்வளவுக்கும் இடையில் குடும்பத்தினருடன் அளவளாவவும் அவர்கள் நலனைக் கவனிக்கவும் நேரம் ஒதுக்கிக் கொண்ட அதிசய புருஷர் அவர்.

இடுக்கண் வருங்கால் நகைக்கத் தெரிந்த அஞ்சாநெஞ்சினர். குற்றாலத்தில் இருந்த போது சென்னையில் தமது வீட்டில் கொள்ளையடிக்கப்பட்ட செய்தி கேட்டுச் சிரித்தவர்!

நோயுற்றிருந்த பலவீனமான உடலையும் மனோபலத்தால் வென்று சாதனைகள் புரியலாம் என்பதை நிரூபித்துக் காட்டியவர்.

நூறாண்டுச் சாதனைகளை ஐம்பத்தைந்து ஆண்டுகளுக்குள் அடக்கிக் காட்டிப் பிரமிக்க வைத்த அவரை வணங்குகிறோம். புத்துணர்ச்சியும், புதுத் தெம்பும் பெற்றுப் பணியைத் தொடர்கிறோம்.

தமிழ்த்திரு நாடு தன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா -பாரதியார்

Printed by V. Murali and Published by V. Vaidyanathan on behalf of Messrs Bharathan Publications Private Ltd. at the Bharathan Press, Race Course Road, Guindy, Madras-600032 (Phone: 431543)

Assistant Editor: P. S. Mani Editor: K. Rajendran

"என் பிள்ளை கஷ்டப்படுவதைப் பார்க்க சகிக்கலே எனக்கு. பள்ளியிலிருந்து வீட்டுக்கு வரும்போது மழையிலே முழுவதும் நனைந்துவிட்டான். இப்ப என்னடான்னு பாழாய்ப்போன ஜலதோஷம் பிடித்துக் கொண்டு விட்டது. அவன் எதுவும் செய்ய முடியாமல் தவிக்கிறான் பாவம்"!



இந்த நிலையிலே அவனைப் பார்த்து நான் பயந்து போனேன்—அவன் தும்மிக் கொண்டே இருந்தான். மூக்கிலே சளி, உடல் வலி வேறு, தாய் மனசு கேக்குமா? உடனே ஈரம் போக துண்டாலே அவனைத் தொடைத்து, துணியை மாத்தி அவனுடைய மூக்கு, தொண்டை, மார்பு, முதுகிலேயும் விக்ஸ் வேப்போரப்பை நல்லாத் தடவி, அவனை அப்படியே படுக்க வைத்தேன். அன்னைக்கு ராத்திரி பூரா நிம்மதியாகத் தூங்கினான். அடுத்த நாள் காலைலே எழுந்தபப ஜலதோஷமெல்லாம் போயிட்டுது. சுறுசுறுப்பா பள்ளிக்குப் போகத் தயாராயிட்டான். எங்களுக்கெல்லாம் சந்தோஷம். இதுக்கெல்லாம் விக்ஸ்®க்குத்தான் நன்றி சொல்லணும்! இனிமே எனக்குக் கவலையே இல்லை. வீட்டிலே விக்ஸ் வேப்போரப் பாட்டிலை தயாரா வைத்திருக்கிறேன். அவனுக்கு ஜலதோஷம் வரும்போதெல்லாம் ரொம்ப உதவியாய் இருக்கு.''

விக்ஸ் காட்டும்
பாசம் உங்கள் பாசத்தைப்போல

விக்ஸ் வேப்போரப் ஜலதோஷ அறிகுறிகளை உடனே போக்குவதற்கு இரண்டு வழிகளில் செயல்புரிகிறது. முதலாவதாக அதன் விஞ்ஞான முறையில் மருந்து கலந்த ஆவி அடைபட்ட மூக்கைத் திறந்துவிடுகிறது. அதனால் நீங்கள் தாராளமாக சுவாசிக்கிறீர்கள். இரண்டாவதாக தசைவலியைப் போக்கி இதமளிக்கிறது. அதனால்தான் அது குடும்பத்தினர் எல்லோருக்கும் நம்பகமான ஜலதோஷ நிவாரணி.



விக்ஸ்வேப்போரப்

**சுவாச நிவாரணம் அளிக்கிறது
நிவாரண அனுபவத்தை
உணரவைக்கிறது**

RHL-20/84


ஒரு
நட்சத்திரம்
உருவாகிறது
ஒளிவீசும்
நட்சத்திரமாக
உயர்ந்தெழுவீர்
பாம்பே டையிங்
உடைகளிலே.
பாம்பே டையிங்
எமக்குத் தொழில் படைத்தல்... அழகான எல்லாமே.
BDM,1318